உ

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பிரகாச வள்ளலார்

என்னும்

## சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந் தருளிய

# திரு அருட்பா

## ௫. திருமுகப் பகுதி

இது

சென்னை

பி. ஏ., எம். எல்., (அட்வொகேட்)

ஆ. பாலகிருஷ்ண பிள்ளையால்

சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திருஏடுகள்,
சுவாமிகளிடம் தொண்டு பூண்டு அவர்களை அடுத்திருந்த
அன்பர்களின் கையெழுத்துப் பிரதிகள்—ஆகிய
இவற்றினின்றும் எடுத்து ஆராய்ந்தும் தொகுத்தும்
அடக்கவிலைப் பதிப்பாக
அச்சிடப்பட்டிருக்கிறது.

கலியுகாதிவருஷம் ௫௦௩௪-ல் நிகழும் ஆங்கீரசவருஷம்
சித்திரைமீ ௩௰௨
சன்மார்க்க ஆண்டு ௬௫.
12-5-1932

உ

# திரு அருட்பா மகிமை

திருச்சிற்றம்பலம்

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஒங்குவிக்குங்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு.

திருச்சிற்றம்பலம்

இது

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

**சிதம்பர சுவாமிகளால்**

அருளிச் செய்யப்பட்டது.

## திரு அருட்பா : ரு. திருமுகப் பகுதி

# பொருளடக்கம்


| எண் | பிரிவு | உட்பிரிவு | பக்கம் |
|---|---|---|---|
| | பாயிரம் | திருவருட்பா மகிமை ... | உ |
| | | திருமுகப் பகுதிக் குறிப்பு ... | ரு |
| | | ஆசாரிய ஸ்துதி ... | எ |
| | | " இன்று வருமோ " என்னும் திருவருட்பா ... | அ |
| | | இந்த அடக்கவிலைப் பதிப்பின் விவரம் ... | 191 |
| க. | செய்யுள் நடை | | |
| 1. | திருமுகங்கள் | (1) எல்லாமுடையானுக்கு விண்ணப்பம் ... | 1 |
| | | (2) ஞானபந்த நிலை ... | 4 |
| | | (3) அநுபவ சித்தாந்தம் ... | 8 |
| | | (4) குடும்ப கோரம் ... | 13 |
| 2. | திருமுகக் குறிப்பு | ... | 28 |
| உ. | உரை நடை | | |
| | | 1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய திருமுகங்கள் ... | 32 |

| எண் | பிரிவு | உட்பிரிவு | பக்கம் |
|---|---|---|---|
| | | 2. புதுவை வேலு முதலியார்க்கு எழுதிய திருமுகங்கள் .. | 99 |
| | | 3. மற்றைய அன்பர்களுக்கு எழுதிய திருமுகங்கள் ... | 110 |
| | | 4. ஜன சமூகத்திற்கு எழுதிய பத்திரிகைகள் ... | 118 |
| | | 5. சன்மார்க்க சங்கத்தார்க்கு இட்ட கட்டளைகள் ... | 133 |
| | அநுபந்தம் | | |
| | | 1. சுவாமிகளுக்கு அன்பர்கள் எழுதிய திருமுகங்கள் ... | 145 |
| | | 2. சன்மார்க்க சங்கத்தினர் ஒருவர்க்கொருவர் எழுதிய திருமுகங்கள் ... | 159 |
| | | 3. வடலூர்க் குடிகள் சுவாமிகளுக்குச் சாலைக்காக எழுதிக் கொடுத்த இனும் பத்திரம் ... | 180 |
| | | 4. சாலைக்குச் சன்மார்க்க சங்கத்தார் உபகரித்த பொருள்களின் அட்டவணை ... | 190 |

## திருமுகப் பகுதிக் குறிப்பு

இந்தத் திருமுகப் பகுதியில் அடங்கியவற்றுள் கொஞ்சங் குறைய மற்றவை எல்லாம் முதன் முதல் இப்போதுதான் இதன்மூலம் நம்மை ஆளுடையார் திருவடித் துணைபற்றி வெளியிடப் படுகின்றன. இவற்றைக் குறித்த விவரமும், முன்போந்த மற்றப் பகுதிகளைப் போன்று இதையும் குறித்த காலத்துள் அச்சிட்டு வெளியிடும் முயற்சியில் அடியேனுக்கு நிராஹங்கார நிலையில் உற்ற துணையாக இருந்துவரும் ஆன்மநேயர்கள் சிற்சிலரின் பெருந்தகைமையும் திரு அருட்பா அடக்கவிலைப் பதிப்பின் வரலாறு என்பதில் குறிக்கப்படும். இது நிற்க.

இப்பகுதி—சன்மார்க்க சாதகர்கள் யாவரும் பயின்று பெரும்பயன் கொள்ளும் தரத்ததாக இருந்தாலும்—“சிருஷ்டி தொட்டு இந்நாள் பரியந்தம் உண்டாயிருக்கும் வித்தியாசப் பிராந்தியை” நீக்கி, “சன்மார்க்க லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டினை” விளக்கி வளர்ப்பதற்குச் சுவாமிகள் அமைத்த சன்மார்க்க சத்திய சங்கத்தையும், சத்திய தர்மச்சாலை சத்திய ஞானசபை சித்தி வளாகம் என்னும் முத்திறப்பட்ட அருள் நிலையங்களையும் அபிமானித்துப் போற்றும் உரிமையும் பொறுப்பும் வாய்ந்த சன்மார்க்க சங்கத்தினருக்

குத் தெய்வத் திருவருளால் கிடைக்கப்பெற்ற குன்றுப் பெருஞ் செல்வமாகும்.

சுவாமிகளது ஸ்தோத்திரங்கள் அவர்களின் அகமுகப்பட்ட "ஆன்மாநுபவ ஆநந் தாதிசயங்களை" உணர்த்துவது போலவே, அவர்கள் தம்மை யடுத்தவர்களுக்கு எழுதிய திருமுகங்களும், ஜன சமூகத்திற்கு அறிவித்த பத்திரிகைகளும், சன்மார்க்க சங்கத்தார்க்கு இட்ட கட்டளைகளும் அவர்களது புறமுகப்பட்ட பரம காருண்ய ஒழுக்கத்தை உணர்த்தா நிற்கும். ஆகலின், "கதா திரக்ஷியாமஹே ராமம் ஜகதச் சோக நாசனம்" என்று அவர்களது தர்சனத்தை விரும்பி, "கிருபைகூர்ந் தனேகம் தடைகளை அணுவாக்கிக் கொண்டு அடியேன் எண்ணம் ஈடேற அருளுதல் வேண்டும்" என்று அவர்களைப் பிரார்த்தித்து வழிபட்டு வரும் சன்மார்க்க சாதகர்கள் பல்லாயிரவரும் அவர்களின் உபதேசமுகமான திருமுகங்களாலும் பத்திரிகைகளாலும் ஜாக்கிரதைப்பட்டு, தெய்வத் திருவாய்மை பொருந்திய அவர்கள்தம் கட்டளைகளைக் கடைப்பிடித்து ஒழுகி, எதிரற்ற இன்ப மடைந் துய்வார்களாக. சுபம் சுபம் சுபம்.

**ஸ்ரீமந் நடராஜ லீலா மாநுஷ்ய திவ்விய மங்கள ரூப**

**அருட்பிரகாச ஸ்வாமிநே நம:**

---

உ

# ஆசாரிய ஸ்துதி

திருச்சிற்றம்பலம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

சோமசிங் காரநம தூயசந் தோடநம
சூழுறும் வேதமுடி சூடரும் பாதநம
காமசங் காரநம காதலன் பாருமவர்
காதலின் காறுமமர் காசினன் பாதநம
நாமமங் கோதினர்க ளுசமின் றுகியுய
நாடரும் வீடுதரு ஞானசெம் பாதநம
ராமியங் காளநம நாணுயும் வாறுவரு
ராமலிங் காயநம ராமலிங் காயநம. ௧

பராபரங் கோதகலு மநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமி
னிராமயங் காரகம திலாதசஞ் சீவிதந [றல்
நிராசைகொண் டாருடைய நிகேதனஞ் சூதமு
வராதவின் பாரவெணை முளுளில்வந் தேயருளி
மகாபலஞ் சேரவருள் விராவுசெம் பாதநம
இராமலிங் தார்மனதி னிராதசந் தோடநம
இராமலிங் காயநம இராமலிங் காயநம. ௨

கட்டளைக் கலித்துறை

இராமலிங் கச்சுட ரேற்றுபு
நோய்செயென் றொன்மைமல
இராமலிங் கண்ணிய புன்மை
யுளம்விளக் கூவிடும்பை
இராமலிங் கன்னெடுத் துட்படுத்
தாண்ட வெழிற்கருணை
இராமலிங் கக்குரு ராயனற்
பொன்னடி யென்முடியே. ௩

—**தொழூவூர் - வேலாயுத முதலியார்.**

உ

# திரு அருட்பா

திருச்சிற்றம்பலம்

நேரிசை வெண்பா

இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்
றென்றுவரு மோஅறியேன் எங்கோவே—துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்குஞ் சுகம்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

SOUTH INDIA SIDDHANTHA SANGAM, TINNEVELLY
உ
தென்னிந்திய
சைவ சித்தாந்த
சங்கம்,
திருநெல்வேலி

# திரு அருட்பா

## ரு. திருமுகப் பகுதி

### க. செய்யுள் நடை

### 1. திருமுகம்

#### (1) எல்லா முடையானுக்கு விண்ணப்பம்[1]

திருச்சிற்றம்பலம்

நிலைமண்டில ஆசிரியப்பா

அகண்டமெய்ஞ் ஞான அற்புத அமல
பரம்பர அனாதி பகவ பராபர
புண்ணிய சைவ போத பூரண
சச்சிதா நந்த சாக்ஷாத் கார 4
நித்திய நிரஞ்சன நிமல நிராமய
எண்குண விநோத இன்ப சுபாவ

---

1 இது திருவொற்றியூர் திருத்தணிகைப் பாசுரங்களும் தனிப் பாடல்களும் உள்ள மூன்று ஏட்டுப் பிரதிகளில் காணப்படுகிறது.

சுத்த நிட்கள சுயம்பிர காச
சிவக்கியான சித்தி சித்தோப தேச
பதிபசு பாசப் பண்புரை தேசிக
விபூதி ருத்திராக்க பூடண வடிவ
சர்வ வல்லப சாந்த சித்த
தயாநிதி யெனவளர் சாமி யவர்கள்
ஸ்ரீ திவ் வியோபய செந்தா மரையாம்
திருவடிக் கடியேன் திருச்சிற் றம்பலம்
காசறு காவிரி கங்கை யாதிய
வாச நீரால் மஞ்சன மாட்டி
மல்லிகை முல்லை மாமலர்க் கொன்றை
மயிலை முதற்பூ மாலை சாத்தி
தூய வாசத் தூப தீப
நைவேத் தியமுதல் நண்ணுப சாரம்
கூடுற வியற்றிக் கூவிள பத்திரம்
ஆயிர மவையா லருச்சனை செய்து
உள்ளங் குழைய உரோமஞ் சிலிர்ப்பப்
பாடி யாடிப் படிமிசை வீழ்ந்து
அன்புறு மங்க மைந்தொடு மெட்டொடும்
இன்புறத் தெண்ட னிட்டவிண் ணப்பம் :—
திருவள ருலகிற் சீர்பூ ரணமென்
றொருபெயர் நிறீஇ யோங்கிய தணிகைக்
குன்றிடை விளங்குங் குமார தேசிக
னன்றிடை யாவகை நவின்மணி வார்த்தை
கார்நிகர் வண்மையும் கல்விப் பெருக்கும்
பார்நிகர் பொறையும் பண்பும் பான்மையும்
சீரும் சிறப்புந் திறனுஞ் செல்வமும்
யாரும் புகழ்தரு மியல்புநல் லறிவும்
எம்பா லன்பு மெமதரு ளுடையோர்
தம்பாற் சார்புந் தணப்புறுத் தன்மையன்

தானமீ ரெட்டுந் தருவோர் நாண
ஈனமி லவற்றி னெல்லாமே லொன்றின்
நான்கிலோர் பாக நண்ணிய தானந்
தான்கிள ருலகிற் சால்புடை யவர்தங்
கண்களிப் புறவுங் காதிசை பெறவும்
ஒண்களிப் பொடுமன முவந்துவந் துருகவும்
தருபவன் புரசைச் சபாபதி யெனும்பெயர்
மருவிய கலைவலோன் மகிழ்வொடுங் கேட்க
எம்மிடை யொருவ னெளிமையிற் சிறந்தோன்
செம்மையிற் போந் 'தென் சிறுமனைக் கிழத்தி
எந்தாய் நுந்தமை யீன்றநற் றாயின்
நந்தா வருள்திரு நாமங் கொண்டனள்
ஆங்கவ டன்னை அப்பெய ராலழைத்
தீங்கெவ் வேலையு மிடுதற் கஞ்சினேன்
ஈதல துமக்குமோ ரிழிவுண் டிதனால்
ஆதலி னப்பெய ரகற்றுதற் காயிரம்
பொன்வேண்டு ' மென்றனன் பொன்வடி வல்லது
பொன்வே றிலையாற் பொன்னுடை யவனெம்
மாதுல னாதலின் வலிவிற் கைக்கடன்
வாதுறக் கேட்டலும் வாங்கலு மீனம்
தாம்பெறு முமது தந்தையோ வெனிலவர்
இரந்துழல் கின்றதை யாவரு மறிவர்
நின்மல ராகிய நீரோ வென்றால்—
நென்மலி யுலகில் நின்கண் காண
ஒருமணஞ் செய்தோர்க் குறுதுயர் பலவுள
இருமணஞ் செய்த வெமக்கெத் தனையோ
சங்கட மதுநின் றனக்குந் தெரியும்
எங்கணு நின்போ லெமக்கன் பினரிலை
அதனா னின்பா லவனை யனுப்பினம்
இதமே யன்றி அகித மிசையா

நெடும்பொற் புடையோய் நீயு மெம்போற்
குடும்ப பாரங் கொண்டனை யாதலின்
ஆயிர மென்றதி லரைப்பங் கேனுங்
காயக மறியோய் காற்பங் கேனும்
இல்லையென் றும லெம்முக நோக்கி
நல்லைநீ யவற்கு நல்குவிப் பாயே.

திருச்சிற்றம்பலம்

---

## (2) ஞான பந்த நிலை [2]

நிலைமண்டில ஆசிரியப்பா

திருவளர் மார்பனுந் திசைமுகத் தவனும்
உருவளர் தேவரு முணர்ந்திடப் படாத
சச்சிதா னந்த சாக்ஷாத் கார
சொச்ச நித்திய சுயம்பிர காச
நிர்க்குண நிச்சல நிமல நிராமய
சிற்குண தற்பர சிற்பர சின்மய
அகள வற்புத வனந்தா னந்த
சகள மத்திய சத்திய சத்துவ
அகண்ட பூரண வருளா னந்த
மகண்ட விண்டல வாணர்கள் வந்தித
தத்துவ சொரூப தத்துவா தீத
தத்துவ காரண தத்துவ ரகித
விச்சுவ சொரூப விச்சுவ காரண
விச்சுவ ரகித விச்சுவா தீத
பிரணவ சொரூப பிரணவ காரண
பிரணவ ரகித பிரணவா தீத

---

2 இது ஸ்ரீமத் ஆறுமுக சுவாமிகளுக்குச் சுவாமிகள் அனுப்பிய திருமுகம்.

பஞ்சாக் கரப்பொருட் பாங்குறு வடிவ
எஞ்சாக் கருணை யெனுந்திரு வுருவ
நாத வடிவ நாதநா தாந்த
வேத வடிவ வேதவே தாந்த
உள்ளம ரொளிய வொளியினுள் ளொளிய
கள்ளமி லன்பர் கண்ணமர் வெளிய
பெரியதிற் பெரிய பெருங்குணக் கடல
அரியதி லரிய வறுதி போதக
ஆகம வடிவ வாகம முடிவ
ஆகம நிலய வாகம காரண
சைவசித் தாந்த ஸ்தாபகஞ் செய்த
தெய்வ மகத்துவ சிறப்புறு நெறிய
ஞான காரண ஞானமெய்ச் சொருப
ஞான நாடக ஞானசம் பந்த
தேவ தேவ சிவசிவ சிவவென
யாவருந் துதிக்க வினியதென் பாண்டி
நாட்டிடை மதுரா நகர்த்திரு மடாலயத்
தீட்டிய வருளா லெழிலருள் வடிவங்
கொண்டெமை யடிமை கொண்டருள் புரிந்த
தண்டமிழ் மறைமொழி தருந்தனி முதலே
மூவாண் டதனில் மூவுல குந்தொழத்
தேவாண்ட ஞானத் தெள்ளமு தருந்திய
மணியே யென்கண் மணியே சைவ
மணியே தெய்வ மணியே யணியே
முத்துச் சிவிகையின் முளைத்தெழு மிளங்கதிர்
ஒத்துத் தனியமர்ந் தருளிய வொளியே
சைவந் தழைக்கச் சமண்கழு வேறத்
தெய்வநீ றளித்த திருவருட் குன்றே
பிழைத்தலி லென்னைப் பெண்ணுரு வாக
அழைத்தருள் புரிந்த அற்புத வமுதே

சரியை யாதிய சாதுர்ப் பாதமுந்
தெரியநல் லோர்க்குத் தெரித்தருள் தெளிவே
பாலொடு கலந்த பழம்போ லினிக்க
நூலொடு மெய்ம்மொழி நுவன்றருள் பதியே
தவமே தவத்திற் சார்தரும் பயனே
நவமே சாந்த நகைமுக மதியே
செவ்விய கரும்பே தேனே கனியின்
திவ்விய சுவையே தெவிட்டா மருந்தே
அஞ்செழுத் துண்மையை யறிந்திட வடியேன்
நெஞ்சழுத் துறவரு ணீள்தயா நிதியே
என்றொரு தாயே யென்னையீன் றோனே
என்னுயிர்க் குயிரே யென்பெரும் பொருளே
என்னுடை யறிவே யென்னுளத் தன்பே
என்னுயர் கதியே யென்னுடைக் குருவே
அடியேன் புரியு மாயிரம் பிழையும்
படியாற் பொறுத்துப் பாங்கருள் பரமே
எல்லாம் வல்ல விறைவே யடைந்தவர்
பொல்லாங் கெல்லாம் பொறுத்தருள் பொறையே
முற்று முணர்ந்த முதலே யுலகப்
பற்றை யகன்றநற் பண்பின ருறவே
ஆனசம் பந்தநல் ஆறு முகத்திரு
ஞானசம் பந்த ஞானதே சிகனே
போற்றிநின் சேவடி போற்றிநின் பூம்பதம்
போற்றிநின் றண்மலர் போற்றிநின் கழற்கால்
குற்றமுங் குணமாக் கொண்டருள் புரியும்
பெற்றிநின் கருணைப் பெரும்பெய லதற்கு
அட்ட மாக வனந்தந் தெண்டன்
இட்டமா வடியே னிட்டனின் னப்பந்
திருச்செவிக் கேற்றுத் திருவுளத் தெளியேன்
உருச்செவி யறியா வுறுபிழை பொறுத்திட

வேண்டு நின்னருள் வேண்டுநின் கருணை
வேண்டும் வேண்டும் வேண்டு மென்னெனில்
என்னென வுரைக்கே னென்னென வுரைக்கேன்
பொன்னன நினது பூம்பதந் தரிசித்
தன்பர்க ளெல்லாம் அவ்விடை வாழ
ஈன்பய னறியா நாயே னொருவனும்
ஈன்னிதி யனையநின் சந்நிதி யதனில்
மன்னுநின் கருணை வடிவக் காட்சியைத்
தரிசித் தின்பத் தனிக்கட லாடப்
பிரியத் துடனே பெற்றிலா தந்தோ
தகவிலே னெடுநாட் டனித்துச் செய்மையில்
புருடனைப் பிரிந்த பூவையைப் போல
வாழ்விற் குறைந்து மனந்தளர் வெய்தித்
தாழ்வுறு நாணந் தலைக்கொள நின்றேன்
ஆதலாற் சுவாமிக ளருளிற் புரிந்த
தீதிலாத் திருமுகத் தெய்வந் தன்னை
தரிசித் துள்ளந் தழைத்து வணங்கிப்
பரிசித் தன்பொடு பாவிப் போற்றி
வணங்கி வணங்கி வாசித் துடம்பும்
உயிருந் தழைக்க வுவந்தா னந்தக்
கூத்திடு வரையிற் குயிற்றிநிற் கின்றேன்
என்னினு மந்தோ வென்செய்வேன் பிரிந்த
புன்னெறி நினைத்துப் போந்த நாணமும்
அச்சமு மென்னை யடிக்கடி தகைக்க
நச்சிய வித்தனை நாளும் விண்ணப்
பத்திரஞ் செய்து பரவத் தாழ்த்தேன்
குத்திர மனத்துக் கொடியேன் செய்பிழை
மலையினுங் கடலினு மண்ணினும் பெரிதே
நிலையினு மறியா நெடும்பிழை யெந்தாய்
என்செய்தாற் றீருமென் செய்வே னெளியேன்

பொன்செய்தா லன்னநின் பொன்மல ரடியை
இரவும் பகலும் இடைவிடா துன்னிப்
பரவும் பரிசே பரிசென வருளே. 109

சென்னைப் பட்டணத்தைச்
சார்ந்த மயிலையில்
ஆனந்த௵ புரட்டாசி௴ ௨௧௳

அடியேன்
சிதம்பரம்
**இராமலிங்கம்.**

---

## (3) அநுபவ சித்தாந்தம் [3]

ஆசிரிய விருத்தம்

அணிவளரும் உயர்நெறிகொள் கலைகள்நிறை மதி
அடையும்ஒளி யுடைய சடையோய் [மகிழ்வை
அருளொழுக அமுதொழுக அழகொழுக இள
அளியொழுக ஒளிர்மு கத்தோய் [நிலவின்
அமலநிலை யுறவுமுறு சமலவலை யறவுமுணர்
வருள்கருணை மிகுகு ணத்தோய்
அடியர்வினை அகலவொரு பரமசுக நிலையருளு
மதுகருது திருவு ளத்தோய்
அநகசுப விபவசுக சரிதரக சிரகமந
வதுல வதுலித பதத்தோய்
அகிலசர வசரவப ரிமிதமித வணுவுமணு
வணுவுமிவை யெனவு ரைத்தோய்
அகிதவித விவிதபரி சயசகல விகலஜக
வரஸரஜ தளமி ழைத்தோய்
அகளமன ரமணவபி நிகடவபி நிபிடதட
வநதிசய சுகம ளித்தோய்

---

3 இது "ஸ்ரீமத் அருட்பிரகாசப் பெருமான் சென்னையிலிருந்து திருவாவடுதுறை ஆதீனம் வித்துவான் தாண்டவராய சுவாமிகளுக்கு எழுதிய சீட்டுக்கவி" என்று ஒரு பிரதியில் காண்கிறது.

அணுபக்ஷ மிதுசம்பு பக்ஷமிது காண்கவென்
றன்புடன் உரைத்த பெரியோய்
அதிக்கிராந் தத்தியல்பு திக்கிராந் தத்தியல்பி
னமைதியிஃ தென்ற அறவோய்
அதிகார போகவில யங்களிரு வகையியல்
அறிந்திட வுணர்த்தும் உணர்வோய்
அருவமிஃ துருவமிஃ தருவுருவ மிஃதென
அறைந்தறி வுறுத்தும் அறிவோய்
அபேதசம் வேதந சுயஞ்சத்தி யியலெலாம்
அலைவற விரித்த புகழோய்
அநநிய பரிக்கிரக சத்திவினை வெல்லாங்கை
ஆமலக மெனஇ சைத்தோய்
அத்துவா நெறியாறும் ஒத்துவா னெறியா
றடைந்திடுக என்ற பரிசோய்
அவுத்திரியி னுத்தரமு னக்கிசைவு றுத்துதும்
அமர்ந்திடுக என்ற இனியோய்

பணிவளரு நிபுணகண பணகரண பரணவண
பரதயுக சரண புரண
பரம்பர சிதம்பர திகம்பர நிரந்தர
பரந்தர விளங்கு பரம
படகபட தடவிகட கரடகட கரியுரிகொள்
பகவ அரகர வென்னவே
பவன்றகு சிவன்றனை யுவந்தனை சுவந்தனை
பகர்ந்திடுக என்ற அமுதே
பகரகர வுகரபர மகரகுண குணிகளுறு
பரிசறிய உரைசெ யரசே
பயனறரு வயிந்துவ துவந்திகழ் சிவம்புகல்
பதந்தெளிய வருள்செய் இறையே
பதசிகர வகரநெறி யகரநக ரமகரவு
பயவபய நிலைசொன் மலையே

பவந்தெறு நவந்தரு குவம்பரி பவம்பொடி
    படும்படி யெனும் புனிதமே
பதியுதவு பதிதனது பரிசுமஃ தடையுமொரு
    பசுவியலு மருள்செய் பொருளே
  பந்தநிலை யந்தநிலை யிந்தநிலை யென்றுபர
    பந்தமொழி தந்த மணியே
படியுமிடர் வடியுமிருள் விடியுமணி மொழிமறைக
    படியுமென நொடிம ருந்தே [ள்
  பஞ்சமல கஞ்சுகமு மெஞ்சும்வகை பஞ்சமிலை
    பஞ்சமக மென்ற நிதியே
பதிதநெறி விடுகவொரு பதிதனெறி தொடுக
    படரும்வகை யெனுமெ னுறவே [வொளி
  பங்கமற வங்குமுள விங்குமுள எங்குமுள
    பண்டைவெளி யென்ற வொளியே
பலிதவறு சிதவுசித யுகளவிக பரமிரவு
    பகலென விளம்பு வளமே
  பன்னிலையு முன்னிலையு நின்னிலையு மென்னிலை
    படிந்துவிடு கென்ற நன்றே

திணிவளரு மறிவுகொடு தொடர்வரிது பெரிதுபர
    சிவமது வெனுஞ் செல்வமே
  சிவசா தனம்பெறார் பவசா தனம்பெறுவர்
    தெளிகவெனும் அளிகொள் குருவே
திருநீறு காணினது கருநீறு காணுவது
    தேர்ந்துணர்க வென்ற தெளிவே
  சிவமேவு சமயமது தவமேவு சமயமிது
    சித்தமென வோது முதலே
சிவனடியை வாழ்த்தாத வாயூத்தை வாய்கொடிய
    செவ்வாய் எனச்சொல் நிறைவே
  சிவமான்மி யம்புகாக் காதுகா தென்னுந்
    தெலுங்கமொழி யென்ற வொன்றே

சிவனடி வணங்காத தலைசிதலை யவன்விழாத்
தெரிசியாக் கண்கள் புண்கள்
சிவனைநினை யாச்சிந்தை நிந்தையா மிதுநமது
சித்தாந்த மென்ற திருவே
திகழ்பரம னடவும்விடை மனையினமும் அவன்
செறிகமரின் அமுதுண்ட நாள் [முனோர்
சேர்வுற விடேலென்ற வொருமராக் கறியுமச்
சிவபிரான் விடய மாகத்
திருவாத வூரடிகள் திருவாய் மலர்ந்தருள்
திருக்கோவை யார்செய் கையுஞ்
செப்புகவே னக்கடாஅய் நின்றவர்க் கிறைமொ
தெரிக்குஞ் சிறப்பு வாய்ந்தே [ழி
• சீரைந் தெழுத்திறு லிலகுநக ரின்கணோர்
திருவைந் தெழுத்தி னைங்குந்
தேசிகத் தண்ணமுத வான்கடல் படிந்தருள்
தெள்ளமுதம் உண்டு தேக்கிச்
செறிபவக் கோடையற அருண்மழை பொழிந்தொ
சிறந்தோங்கு சீர்க் கொண்டலே [ளி
செய்யதாண் டவராய தூயவாழ் வேநினது
திருவடிக் கன்பு கொண்டே

தணிவளர் விராகமது பெற்றிலேன் காமரந்
தாறுமறி யேன் றன்பினைத்
தலிதஞ்செ யேன்மங்கு லங்கொண்டு நகபதந்
தன்னிற் பருத்து வினையைத்
தாங்குசும் மாடாயி னேனவ விராகமுதல்
சாற்றுசும் மாடு மட்டுந்
தங்குமொழி முதலையுடை யேன்முதற் கயலில்
தயங்குமொரு நாமம் உடையேன்
தகுமுறைக் கடைமூன்றி னுஞ்சுவசி யுற்றிலேன்
சதுரிலேன் பஞ்ச நயவேன்

சட்டியி லிரண்டினொன் றேய்ந்திலேன் ஒன்று
றானுழைத் துழலு கின்றேன் [போற்
தண்டனா யிரமிட் டுரைக்கும்விண் ணப்பமது
தானென்னை யெனிலு னடியார்
சைவ யோகஞ்செய்வர் யானுமொரு காற்போன
சைவ யோகஞ் செய்குவேன்
தட்டுறா ஞானமுடை யார்நினது தொண்டர்யான்
றானுமது சுட்ட வுடையேன்
சாந்தநெஞ் சுடையர்நின தன்பர்யான் மணம்
சாந்தநெஞ் சதுவு முடையேன் [வீசு
சகசநிய மம்பெறுவர் நின்னடியர் அடிமையுஞ்
சகச நியமம் பெற்றுளேன்
தனிவீடு விழைவர்நின் னன்பர்யான் பலகூட
சாலையுள வீடு விழைவேன்
சார்புலக் கள்வர்வரின் அஞ்சுவர்நி னடியர்யான்
தனிவரினு மிக அஞ்சுவேன்
தாழ்பொறி யடக்குவர்நி னன்பர்யா னுயர்பொ
தமையக மடக்க வல்லேன் [றிகள்
தமியனேன் றன்னைநீ கைவிடேல் விடினுநின்
றன்னைநான் விடுவ னல்லேன் [ரு
தருவழக் கிட்டெனினும் நின்பா லெனக்குமொ
சார்புறச் செய்கு வேனே. 1

வெண்பா

பண்டு குலம்பேசப் பரிந்ததில்லை யீண்டென்னைக்
கொண்டு குலம்பேசக் குறிப்பானோ—தொண்டுசெய
நீண்டவரா யப்பெருமா னீக்குந் திருத்துறைசைத்
தாண்டவரா யப்பெருமான் றான்.[4]

4 இவ்வெண்பாவோடு இத்திருமுகம் முடிகிறது. பின்வரும் திருமுகக் குறிப்பில் உள்ள திருநெறி வேட்கைப் பாக்கள் நான்கு வேறு சமயத்தில் எழுதப்பட் டிருக்கின்றன.

## (4) குடும்ப கோரம்[5]

நிலைமண்டில ஆசிரியப்பா

திருவளர் கமலக் குருமலர் தவிசினன்
முதற்பெருந் தேவர் மூவரும் பணியப்
பொதுவிடைத் திருநடம் புரியுநம் பெருமான்
அடிமலர்க் கன்புசெய் அன்பர்கட் கன்பன்
சீர்விளை தூய்மை நீர்விளை யாடிச்
சொற்றரு வாய்மைப் பொற்றுகில் உடுத்துக்
கரிசில்வெண் ணீற்றுக் கவசந் தரித்துத்
தத்துவ சிற்பர சற்குண அகண்ட
பூரண சச்சித போதா னந்த
அற்புத சிற்குண அங்கலிங் கேகனை
அகத்தும் புறத்தும் அருச்சனை புரிந்து
சிவந்தரு சுகமெனுந் திருவமு துண்டு
சீலம் எனுந்தாம் பூலந் தரித்தே
அளவில் இன்பம் அனுபவிக் கின்றவன்
மூதறி வாளன் முத்துச் சாமியென்
றியற்பெய ருடையவித் திருவா ளனுக்கு
இராம லிங்கம் எழுதி விடுத்த
மயலுறு சோபன வாசகம் ஆவது :—
ஐயநின் புடையிப் பொய்யனேன் போதர
தடைபல உளவவை சாற்றிட என்றால்
ஆயிரங் கோடிநா வாயினும் முடியா

---

5 இவ்வரிய திருமுகம் கிடைத்த வரலாறு திருவாளர் ச. மு. கந்தசாமிப் பிள்ளை அவர்களின் பதிப்பு ஆறாந் திருமுறை 639-ம் பக்கத்தில் விவரித் திருக்கிறது. இஃது சென்னை வீரசைவ சீலர் முத்துசாமி முதலியார் அவர்கள் திருமணத் திற்குக் கோரியபடி தாம் வரக்கூடா திருப்பது கண்டு சுவாமிகள் அனுப்பியதாகும்.

இருந்து மற்றவை எண்ணிட என்றால்
உள்ளம் உடம்பெலாம் கொள்ளினும் போதா
எழுதவென் றாலும் ஏட்டுக் கடங்கா
என்னினுஞ் சிறிதே எழுதத் துணிந்தனன்

[புருஷன்]

என்னெனின் யான் ஓர் ஏழை என்பதும்
தெளிவிலாச் சிறியரிற் சிறியனேன் என்பதும்
இன்புடை அறிவே இல்லை என்பதும்
அன்புடை யாய்நீ அறியாத தன்றே

[அவன் முதன் மனைவி]

செம்பொடு களிம்பு செறிந்தது போன்றோர்
ஆணவக் கிழத்தி அநாதியில் இறுகப்
பிரமரா க்ஷசிபோற் பிடித்துக் கொண்டனள்
சிவபூ ரணத்தைச் சிறிதுங் காட்டாள்
ஜகமெனும் ஏக தேசமுந் தெரிக்காள்
எவ்விடத் திருளும் என்னகச் சுவடெனக்
கனவிருள் வடிவங் காட்டுங் கொடியாள்
இரவிது பகலிது இன்பிது துன்பிது
ஒளிவெளி இதுவென ஒன்றுந் தெரிக்காள்
இறுக்கும் அரக்கி இவளொடும் இருந்தே
எளியேன் முயங்கிடல் என்தவம் என்கோ

[அவள் பெற்ற பிள்ளை]

முற்றும் அஞ்ஞான மூடப் பிள்ளை
ஒருவன் பிறந்தனன் ஒடிவான் அவன்றனல்
பானுவின் ஒளியைப் படரிருள் மூடல்போல்
என்னகக் கண்ணையும் என்புறக் கண்ணையும்
அங்கையால் மூடி அலக்கழிப் பானெனைத்
தன்னையின் றெனெனத் தானுங் காட்டான்
என்னையின் றெனென எண்ணவு மொட்டான்

ஏடுறும் எண்ணும் எழுத்தும் உணரான்
தாயினுங் கொடியன் ஆயினும் என்றன்
விதியை நொந்து விருப்பின் வளர்த்தேன்
இவன்றன் வாழ்க்கையும் வாழ்க்கையோ என்ன
மதிப்பவர் ஆரெனை வையகம் மகிழ்ந்தே
வையக மகிழ்ச்சி வையகம் நெருப்பாம்
மருளுறு சிறுவன் வளர்நாள் தொடுத்தே
உறவகன் றூர்யான் அறிவகன் றிட்டேன்

[அவனது இரண்டாம் மணவினைக் கர்த்தா]

செப்புறுந் தெய்வச் செயலென் கேளே
இருதொ டக்குகள் இயலா தென்றே
தொடக்குப் பற்பல அடுக்கடுக் காயின
ஆரோ பசுபதி அவன்வடி வழலாம்
அங்கண் மூன்றும் அருட்சத்தி மாணும்
மண்ணும் விண்ணும் மாலய னோரால்
நேடியுங் காணா நீள்பத முடியனும்
எழுமலை எழுகடல் எழுபுவி எழுகார்
ஆன எவையும் அளித்துநோக் குவனும்
ஊர்தரும் மாருதம் உயிர்ப்பாய் உளனும்
உயிரெழு வகுப்பையும் ஊட்டியுறக் குவனும்
ஊழிகள் தோறும் உள்ள ஒருவனும்
உரைகொண் டோதரும் உயர்வே தாகமம்
உற்ற கலைகள் உயரிய நிலைகள்
அண்ட பிண்டம் அவற்றின் துறைகள்
சாரும் இறைகள் சராச ரங்கள்
வளமுறு வர்ண சிரம வகைகள்
வகுக்குறு வகுப்பினும் வதிவாழ்க் கையனும்
சதிர்மா மாயை சத்திகள் கோடி
மன்னிய அறங்கிடை வதிபெற் றியனும்
அவன்றான் யாரோ அறியேன் யானே

அறிதர வேண்டும் அப்பரு வத்தே
மாயை என்னும் மாதினைக் கொணர்ந்தே
சிறுகருங் காக்கைக் குறுகுறுங் கழுத்தில்
கனம்பெறு பனங்காய் கட்டிய வாறெனக்
கட்டிப் புண்ணியங் கட்டிக் கொண்டனன்

[அவன் இரண்டாம் மனைவி]

விடுத்தெனைப் புண்ணியன் விலகலும் அவள்தான்
விண்ணவர் மண்ணவர் வியக்கும் உருக்கொடு
கொள்ளிவாய்ப் பேய்களோர் கோடி நின்றே
தடித்த குழவியைப் பிடித்தது போல
மற்றவள் என்னை மணந்து கொண்டனள்
பெண்ணடை அனைத்தும் பெருங்கதை யாகும்
அடுத்தவர் என்னை அந்தோ கொடிய
அருந்தளை ஏனென அறைந்தெனை அகன்றனர்
அகமெலாம் பகிரென அனந்த உருவாய்
அவ்வவ் வுருகொண் டணைத்துக் கெடுப்பள்
காற்றினை ஒருசிறு கரகத் தடைப்பள்
கடலே ழினையுங் கடுகிடை முகப்பள்
வகைவகை யாயுடல் வனைந்து வகுப்பள்
வையக முற்றும் வாயில் மடுப்பள்
பகலிடை நள்ளிருள் இருக்கப் பண்ணுவள்
இருளில் பானுவை எவர்க்குங் காட்டுவள்
அண்டம் எல்லாம் அணுவிற் செறிப்பள்
அணுவை அண்டமாய் ஆக்கி நகைப்பள்
பொய்யை மெய்யாப் பொருந்தி மகிழ்வள்
பொருந்தும் மெய்யைப் பொய்யாச் செய்வள்
அடர்வஞ் சகக்கழங் காடற் பிரியாள்
காணாப் பன்னிலை கலையுடன் காட்டுவள்
இருளை இரிக்கும் இந்து ரவிகளைப்
படைத்திங் கியற்றுவள் பற்பல ஜாலம்

பிரமனை வலக்கைப் பிடிக்குள் அடக்குவள்
இடக்கையில் மால்பதி ஏந்தித் தரிப்பள்
தலையிடை உருத்திரன் தன்பதி தெரிப்பள்
குளிரெழு கடலிவள் குளிக்குந் தடமே
அண்ட மெல்லாங் கொண்டையில் முடிப்பள்
ஜெகமெலாங் கலைக்குள் சேர்த்துக் கட்டுவள்
உடம்பிடை உரோமம் ஒவ்வொன் றிடையே
புவனமொன் றுகப் பொருந்தச் சமைப்பள்
எவரையுங் கணத்தில் எய்தி மயக்குவள்
இக்கொடும் பாவி என்மனை யானது
பிடாரியைப் பெண்டாய்ப் பெற்றது போலும்
அனுகூ லச்சொலை அகத்திடை மதியாள்
அடிமடி பிடிப்பள் அரியவம் பிசைப்பள்
உறங்க விடாளவள் உறங்குபாய் சுருட்டாள்
மடிமாங் காயிடுங் கொடுமைக் கிளையாள்
சாகவும் விடாளவள் சார்பழி தளராள்
தவத்தில் இசையாள் பவத்தின் நசையால்
மருட்பேய் என்ன மதித்திட வாட்டிப்
படைத்தென் மானம் பறக்கச் செய்வள்
மான மகற்றியும் மனைவிட் டேகாள்
இரவும் பகலும் எனையிழுத் தணைப்பள்
இவளாற் படுமிடர் இம்மட் டிலவே
புகலப் படுமோ புகலின் இருசெவி
பொருந்துளங் கைத்திடும் போதும் போதும்
மல்லாந் துமிழின் மார்பின் மேலெனச்
சொல்லுவர் அதனாற் சொல்வது மரபல

[அவள் பெற்ற பிள்ளைகள்]

(1. மூத்த பிள்ளை)

கொடுந்தவம் புரிந்தொரு குரங்குபெற் றாற்போல்
மலைக்கப் பெற்றிட மனம் எனும் இளைஞன்

உலக்கைக் கொழுந்தென ஒருவன் பிறந்தனன்
வருமிவன் சேட்டை வகுக்கவாய் கூசும்
விதிவிலக் கறியா மிகச்சிறிய னாயினும்
விண்மண் நடுங்க வினைகள் இயற்றிக்
காமக் குழியில் கடுகிப் படுகுழி
விழுமதக் களிறென விழுந்து திகைப்பன்
பதியை யிழந்த பாவையின் செயல்போல்
கோபவெங் கனலிற் குதித்து வெதும்புவன்
நிதிகவர் கள்வர் நேரும் சிறையென
உலோபச் சிறையில் உழன்று வாழ்வன்
வெற்பெனும் யானையை விழுங்கும் முதலை
முழுகிக் கடலில் முளைத்திடல் போல
மோகக் கடலில் மூழ்கி மயங்குவன்
மதுகுடித் தேங்கி மயக்குறு வார்போல்
மதத்தால் வீறி மதங்களில் வியப்பன்
பட்டினி இருக்கும் வெட்டுணி போல
மச்சரங் கொண்டு மகிழ்கூர்ந் தலைவன்
காசில் ஆசை கலங்குறு வேசை
எனினும் விழிமுனம் எதிர்ப்படில் அக்கணம்
அரிய தெய்வமென் றாடுவன் பாடுவன்
அணிகள் அணிவன் அடியும் பணிவன்
எலும்பைச் சுரண்டும் எரிநாய் போலச்
சுற்றுவன் பற்றுவன் தொழுவன் எழுவன்
கணத்தில் உலகெலாங் கண்டே இமைப்பில்
உற்ற விடத்தில் உறுவன் அம்மா
சேய்மை எல்லாஞ் செல்லற் கிளையான்
பித்தோங் கியவன் மத்தனைத் திரிவான்
சொல்வழி நில்லான் நல்வழி செல்லான்
சேர அழைக்கில் சிரத்தே ஏறுவன்
வெட்டிலுந் துணியான் கட்டிலுங் குறுகான்

மலக்கி ஈன்ற மாதினும் பாவி
கள்ளது குடித்துத் துள்ளுவான் போல
மதத்தாற் பொங்கி வழிந்து துள்ளுவன்
முத்தந் தரல்போல் மூக்கைக் கடிப்பன்
மறைசொல் வான்போல் வளர்செவி கிள்ளுவன்
சற்றும் இரங்கான் தனித்துயில் கொள்ளான்
கூவிளிச் செய்வன் கூடுவன் பலரை
கூவி அதட்டினும் கோபங் கொள்வான்
இங்கு முள்ளான் அங்கு முள்ளான்
படைக்கு முன்னே பங்கு கொள்வான்
மடியில் நிறுத்தி வாய்மை வழங்கினும்
வண்ணான் கல்லிடை வறிஞர் சீலையை
ஒலித்திடல் போல உரத்திக் கத்துவன்
என்னைத் தாதையென் றெண்ணான் சொல்லும்
வாய்மை எல்லாம் வண்புனல் ஓவியம்
ஆகக் கொள்வான் அவன்பரி சுரைக்கேன்
பிறந்தவிப் பாவி இறந்தான் இலையே
சென்றநாள் எலாமிச் சிறுவனால் அன்றோ
வருசுகங் காணா வைச்சுமை நேர்ந்தேன்
திறந்திவன் செயலைத் தினைத்துணை விடாது
செப்பின் கற்கள் சிதைந்து கசியும்
கனத்த மரங்கள் கண்ணீர் பொழியும்
கடவுளர் இவன்செயல் காணு வாரேல்
இமையாக் கண்களை இமைத்திடு வாரால்

(இரண்டாவது பிள்ளை)

காசிபன் மனைவிமுன் கடுந்தவம் புரிந்து
பையுடைப் பாம்பைப் பயந்தது போன்று
புத்தி என்னும் புத்திரன் றன்னை
ஈன்றனள் அவனோ எளியரில் எளியன்
வாய்மையுந் தூய்மையும் வதிதரு வாழ்க்கையன்

தாயொடும் பழகான் தமையனோ டிணையான்
தறுக ணாளரிற் குறுகியுற வாடான்
பாவம் என்னிற் பதறி அயர்வான்
பாடு படற்குக் கூடான் உலகர்
கயங்கு நெறியில் உயங்கி மயங்குவன்
பாழ்நிகர் புந்தியர் பாலிற் பொருந்தான்
எப்பா டும்படான் எவரையுங் கூடான்
கபடரைக் காணிற் காதம் போவான்
கங்குலும் பகலுங் கருதுவிவ காரத்
தடத்திடை வீழ்ந்து தயங்குறு நயங்கள்
சாருவன் கூறுவன் தருக்குவன் எவைக்கும்
அடங்குவன் வறிதே அமைதல் இல்லான்
இவனை மடியில் இருத்தித் திடமொழி
செப்பிடச் சோர்வு செறிவ தெனக்கே
இவன்பாற் செய்வ தேதும் அறியேன்

(மூன்றாவது பிள்ளை)

செறிதரு கோளுள சேயிழை யாள்பினும்
நையப் புணர்ந்து நாள்பட வருந்தி
நாடி நாடி நாயையீன் றதுபோல்
உணர்விலி என்றே உலகர் ஓதும்
சித்தம் என்னுஞ் சிறிய குழவியைப்
பயந்து கரத்திற் பதற எடுத்தனள்
கரைதரு விண்ணீர்க் கடிதடம் ஆகக்
கதிர்விடும் உடுக்கள் கறங்குமீ னாக
மதியைத் தாமரை மலராய் மதித்ததில்
மூழ்கப் பிடிக்க முன்னங் கொய்திட
எண்ணுவன் எழுவன் எட்டுவன் சிறிதும்
நேரா தினைத்தே நிலைகள் பற்பல
வான்கண் டவன்போல் வாயாற் கொஞ்சுவன்

எனையுங் கூவுவன் இவனிடர் பலவே
இடர்பல இயற்றி இழுக்குங் கொடியன்

(இளைய பிள்ளை)

இவன்செயல் நிற்க இவன்தாய் வயிற்றில்
தாருகன் என்னுந் தறுகண் களிற்றைத்
தந்தமா யைக்குத் தனிமூத் தவளாய்
அகங்கா ரம்எனும் அடங்காக் காளை
அவனி மூன்றும் அதிர்ந்து கவிழக்
கடைமுறை பெற்றுக் களித்தனள் அவன்செயல்
கருதவும் பேசவும் கனிவாய் கூசுமே
கூற்றுவர் கோடி கொண்டுதித் தாலென
முளைத்து வளர்ந்தனன் மூத்தவன் மூழை
இளையவன் காளை எனுமிலக் கியமாய்
முன்னுள மூவரை முடுகி ஈர்த்தே
எண்ணில் விளையாட் டெழுப்புந் திறத்தன்
எல்லா ஆற்றலும் என்பால் உளதெனத்
தருக்குவன் இவன்றன் சங்கடம் பலவே
தன்னைத் தானே தகைமையில் மதிப்பன்
தரணியிற் பெரியார் தாமிலை என்பான்
மாதின் வயிற்றில் வந்தவன் எனாது
தானே பிறந்த தன்மைபோற் பேசுவன்
விடியும் அளவும் வீண்வா திடுவன்
வாயால் வண்மை வகைபல புரிவன்
ஓதவன் பெருமை ஈதவன் இயல்பே
சொல்லினுங் கேளாத் துரியோ தனனென
வானவர் தமக்கும் வணங்கா முடியன்
முன்வினை யாவும் முற்றுந் திரண்டே
உருக்கொடிங் கியம்பொணா ஊறுகள் இயற்றுவன்
பிள்ளையும் அல்லன் கொள்ளியும் அல்லன்

இன்னும் இவன்செயும் இடர்பல வற்றை
எவர்பாற் சொல்லி என்துயர் ஆற்றுவேன்

[அவனது மூன்றும் மணவினைக் கர்த்தாவும்
மூன்றும் மனைவியும்]

பாதகி துன்பம் பவக்கடல் ஏழும்
மக்கள் துன்பம் மலையோர் எட்டும்
நீளல்போ தாதென நெஞ்சில் நினைத்தோ
அவளது சூழ்ச்சி அற்புதம் அற்புதம்
தொல்லை மரபில் தொழில்பல கற்ற
உலவுறு காமிய ஒண்டொடி என்னும்
கபடவஞ் சகியாங் களத்தினைக் கொணர்ந்து
பேய்பிடித் தவன்பாற் பெரும்பூதங் கூட்டித்
தான்மணந் ததுபோ தாதிங் கென்றுபின்
மாற்றுகா லுக்கு மறுகால் ஆக
மாட்டி மிகமன மகிழ்ந்தாள் கூர்வேல்
கண்ணிணை யாணொடுங் கடல்சூழ் உலகில்
நிறைந்துள யாரையும் நெருங்குவள் கணத்தில்
இவள்செயும் வீரம் எண்ணி விளம்ப
உடலெலாம் நாவாய் உறினும் ஒண்ணு
ஒருத்தியே இரண்டங் குருகொடவ் வவற்றில்
பலவாய்ப் பலவுளும் பற்பல வாயுரு
பொருத்த முறவே புரிவளவ் வவற்றில்
பலகால் புணர்ந்து பயன்வலி போக்கி
ஓருருக் கரும்பும் ஓருருக் காஞ்சியும்
ஓருரு வமுதமும் உண்ண வளிப்பள்
விட்டிவை எல்லாம் பட்டினி யாக்குவள்
ஓருரு வடிவால் உயர்பஞ் சணைமேல்
அகமகிழ் சுரதம் அளித்துக் களிப்பள்
ஓருருத் தன்னால் உறுநிலப் பாய்மேல்

என்பு நோவ இழுத்தே அணைவள்
இங்ஙனம் பற்பல ஏழைக் குறும்புகள்
இயற்றி எவருமே ஏக்கங் கொளவே
இவள்முன் நம்செபம் என்றுஞ் சாயா
அரகர என்றே அரற்றி மெலிவேன்

[அவள் பெற்ற மூவர்]

இவ்வா றென்னை யிழைத்திடுங் கொடியாள்
முக்குண மூன்று மூவுரு எடுத்தே
வயிறு கிழிய வந்த சிறார்கள்
மூவர் தமையுமம் மூவரும் அறியார்
வெலவரும் இவரால் மேலொடு கீழ்நடு
ஆய உலகும் அவ்வுல குயிரும்
பற்பல நெறியிற் பாடுபட் டாரெனில்
எளியேன் பாடிங் கியம்பவும் படுமோ
இவர்கடம் இயல்பை எண்ணவும் பயமாம்
பாரெலாந் தாமாய்ப் பரவும் இவர்தாம்
ஏற்றுவர் இறக்குவர் எங்கு நடத்துவர்
இயற்றுவர் கீழ்மேல் எங்கு மாக
உவகை ஊட்டுவர் உறுசெவி மூடத்
திட்டுவர் பலவாய்த் திரண்டு திரண்டே
ஆற்றுறு மாற்றலை ஆற்றல் அரிதாம்
இவ்வுல கதனில் என்கண் காண
ஆயிழை யாளை ஆய்ந்து மணந்த
நாளில் தொடங்கியிந் நாள்பரி யந்தம்
மனஞ்சலித் திடவே வலிய விலங்கினைத்
தாளி விட்டுத் தயங்கி அலைந்தேன்
வீண்சஞ் சலமென விளம்புந் துகளை
முடிமூழ்க வாரி முடித்திட் டேனால்
ஈட்டிய பொருளால் இற்பசு வீந்தே

எருமை தன்னை அருமையா யடைந்(ெ?)தனோ
ஆற்ற முடியா தலைவேன் எனவும்(?)
குறித்தங் கெடுத்திடுங் கூவல் நீரை
விழற்கு முத்துலை வேண்டிட் டிறைத்துத்
துணைக்காரஞ் சலித்தே துயருற் றேனோ
காற்றினும் விரைந்தே காரான் பாலைக்
கமரிடை ஏனோ கவிழ்த்துங் கலங்குவேன்
கலநீர் தன்னைக் கண்ணிற் சிந்திக்
கழறிக் குழறிக் கனியுடல் களைக்கச்
சிலைநேர் நுதலிற் சிறுவியர் வரும்ப
அருந்தொழிற் செய்திங் கடைந்த பொருளைச்
சிவபுண் ணியத்திற் செலவிற் கலவாது
பெண்சிறு குக்குப் பெரிதும் ஒத்தேன்
பகலு மிரவும் பாவிகள் அலைத்தனர்
இவர்கள் சல்லியம் ஏற்பவர் ஆரெனக்
கூக்குரல் கொண்டு குழறுவ னெழுவன்
கிணற்றில் மண்ணைக் கெல்லப் பூதம்
தோன்றிய தென்னுஞ் சொல்லை ஒத்தது
இவரு டாட என்றால் முடியுமோ
அவனுக் கிவள்தான் அறியவந் தாளெனும்
மூன்று மாதரும் முழுப்பாய் சுருட்டிகள்
இவர்களில் ஒருவரும் இசையவந் தாரலர்
இச்சை வழியே இணங்கி வலிவில்
மணமது கொண்டு வாழ்ந்து வருகையில்
சண்டன் மிண்டன் தலைவர் என்ன
புவிமிசைப் பாதகர் போந்திங் குதித்தனர்
இவரால் நேர்ந்த எண்ணிலாத் துயரைப்
பொறுப்ப தரிதாம் வெறுப்பது விதியே
பாவ மின்னும் பற்பல உளவே

[இக்குடும்பம் குடியிருக்கக் கொண்ட வீடு]

குடும்பத் துடனே குடித்தனஞ் செய்யக்
குடிக்கூ லிக்குக் கொண்ட மனையில்
கண்ட காட்சிகள் கனவிரோ தங்கள்
இராமா யணத்தும் பாரதத் துமிலை
இழிவினும் இழிவது எண்சாண் உள்ளது
மலமுஞ் சலமும் மாறு ஒழுக்கது
சுற்றினும் ஒன்பது பொத்தல் உடையது
சீழுங் கிருமியுஞ் சேர்ந்து கிடப்பது
என்புதோல் இறைச்சி எங்குஞ் செந்நீர்
ஆய்ந்து செய்த ஆகர முற்றது
அகலல் அணுகல் புகலல் இகலல்
அணிகள் துணிகள் அணிவ தாய
சால வித்தைகள் சதுரிற் கொண்டது
கிடந்தும் இருந்தும் நடந்தும் பற்பல
பகரிம் மனையால் படும்பா டதிகம்

[அவ்வீட்டுத் தலைவரும் குடிக்கூலி நிர்ப்பந்தமும்]

இம்மனைத் தலைவராய் எழுந்த மூவர்
தறுகட் கடையர் தயவே இல்லார்
பணிசிர முதலாய்ப் பாதம் வரையில்
வாது செய்திடும் வண்கால வாதி
பெருகுறு கள்ளினும் பெரிதுறு மயக்கம்
பேதைமை காட்டும் பெருந்தீப் பித்தன்
கொடுவிடம் ஏறிடுங் கொள்கைபோ லிரக்கங்
கொள்ளா திடர்செய் குளிர்ந்த கொள்ளி
இவர்கள் என்னோ டிகல்வர் இரங்கார்
எனக்கு நேரும் ஏழ்மையும் பாரார்
பிண்ட மென்னும் பெருங்குடிக் கூலி

அன்றைக் கன்றே நின்று வாங்குவர்
தெரியா தொருநாள் செலுத்தா விட்டால்
உதரத் துள்ளே உறுங்கனல் எழுப்பி
உள்ளும் புறத்தும் எண்ணெரி ஊட்டி
அருநோய் பற்பல வடிக்கடி செய்வர்
இவர்கொடுஞ் செய்கை எண்ணுந் தோறும்
பகீரென உள்ளம் பதைத்துக் கொதித்து
வெதும்பும் என்னில் விளம்புவ தென்னே

[குடும்பத்தலைவனின் வெளி விவகாரம்]

சினமிகும் இவர்தம் செய்கைகள் கனவினும்
நினைந்து விழித்து நேர்வதன் முன்னர்
மற்போர் கருதி வந்தவர் போல
ஓதும்வே தாந்தம் உரைப்பர் சிலபேர்
வாட்போ ரினுக்கு வந்தவர் போல
வயங்குசித் தாந்தம் வழங்குவர் சிலபேர்
தண்டா யுதப்போர் தாங்குவார் போல
இதிகா சத்தை யிசைப்பவர் சிலபேர்
உலக்கைப் போரை உற்றார் போல
இலக்கண நூலை இயம்புவர் சிலபேர்
கற்போர் விளக்கக் காட்டுவார் போலச்
சமய நூல்களைச் சாற்றுவர் சிலபேர்
வாய்ப்போ ருக்கு வந்தவர் போல
விவகா ரங்கள் விளம்புவர் சிலபேர்
மடிபிடி போர்க்கு வாய்ந்தவர் போல
மததூ ஷணைகள் வழங்குவர் சிலபேர்
கட்குடியர் வந்து கலக்குதல் போலக்
காம நூலைக் கழறுவர் சிலபேர்
விழற்கு நீரை விடுவார் போல
வீண்கதை பேச விழைவார் சிலபேர்
இவர்கள் முன்னே இவருக் கேற்ப

குரல்கம் மிடவுங் குறுநா உலரவும்
அழலை யெழவும் அவரவர் தம்பால்
சமயோ சிதமாய்ச் சந்ததம் பேசி
இயன்ற மட்டில் ஈடுதந் தயர்வேன்

[அவனது உள் விவகாரம்]

பின்னர் மனையின் பின்புறத் தேகிக்
கலக்கு மலத்தைக் கடிதே கழித்துக்
கல்லில் அழுக்கைக் கழற்றுதல் போன்று
பல்லின் அழுக்கைப் பண்பின் மாற்றிச்
சோமனைப் போலவெண் சோமனைத் துவைத்து
நன்னீர் ஆடி நறுமலர் கொய்து
தேவருக் கேற்ற திரவியங் கூட்டிப்
பாவையை வைத்துப் பாடி யாடும்
சிறாரைப் போலச் செய்பணி யாற்றி
மண்ணின் சுவர்க்கு வண்சுதை தீட்டல்போல்
வெண்ணீ றதனை விளங்கப் பூசிப்
புகழ்ருத் ராக்கப் பூணை என்ன
உற்ற செபவடம் உருட்டி யுருட்டிக்
குரண்டகம் போன்று குறித்த யோகம்
செய்த பின்னர் சிறிது நேரம்
அருத்தியிற் பூசனை அமர்ந்தங் காற்றி
ஊன்பிண் டத்திற் குறுபிண்ட மீந்து
குடிக்கூ லிக்கடன் குறையறத் தீர்த்துப்
பகல்வே டத்தாற் பலரை விரட்டி

[அவன் பரத்தையோ டயர்தல்]

நித்திரைப் பரத்தையை நேர்ந்து கூடவும்
பொழுதுஞ் சரியாய்ப் போகின்றதுவே.

1. திருமுகம் முற்றிற்று.

## 2. திருமுகக் குறிப்பு

### (1) திருநெறி வேட்கை 6

*கட்டளைக் கலித்துறை*

1.

வானோ ரமரர் வருந்திக்
கடைந்த மருந்துவந்து
தானே யொருசிறு நாய்க்குக்
கிடைத்த தகவெனவெம்
மானோர் துறைசைநற் றண்டவ
ராய மணியெனது
பானோர் கிடைத்தும் பயன்கொள்கி
லேன்வெறும் பாவியனே.

2.

வருந்துக் கனவினுஞ் சோறறி யானை மணத்தி....
விருந்துக் கழைப்பது போலேநின் பொற்பத...
மருந்துக்கு மெய்சொல வாராத வென்றனை....
தருந்துக்க வூழ்விட மாட்டாது தாண்டவ....

3.

மின்னோர் சடைமுடித் தாண்டவ
ராய வியன்றவநின்
றன்னே ரடைதற் கெளிதாக
நான்பெற்றுந் தாழ்த்துகின்றேன்
பொன்னே கொடுத்து மெனுநா
லடியின் பொருட்கிலக்கா
யென்னே யிருந்துழ லென்னேழை
வன்மதி யென்மதியே.

---

6 2-வது 4-வது பாட்டுக்களில் புள்ளியிட்ட இடங்களில் ஏடு சிதைந்திருக்கிறது.

4.

வாய்மட் டுமோமன மட்டோவென் னுருயிர்ம....
போய்மட் டுறுமின் சுவைமய மாக்குமின் பொன்மலர்...
ஆய்மட் டமுதஞ் செவிக்கேற முன்முய லாமையிந.
நாய்மட் டுமோதந்தை தாய்மட்டு மாஞ்சைவ நி....

## (2) உலகியல் 7

*கட்டளைக் கலித்துறை*

சோடில்லை மேல்வெள்ளைச் சொக்கா
  யிலைநல்ல சோமனில்லைப்
பாடில்லை கையிற் பணமில்லை
  தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறுப்பு
  மில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்ச மேயெந்த
  வாற்றினி னண்ணினையே.

## (3) அன்புநெறி 8

*அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்*

படிப்பதுநன் றெனத்தெரிந்த பாங்குடையாய்
  மன்றுள்வெளிப் பரம னன்பே
தடிப்பதுநன் றெனத்தேர்ந்த சதுருடையாய்
  அறநவின்ற தவத்தாய் வீணில்

---

7 இது சென்னைச் சபாபதி முதலியார் வீட்டுக் கல்யாண அழைப்புச் சம்பந்தமாக எழுதி விடுத்தது.

8 இது பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்கட்கு அவர்களிடம் கல்வி பயின்ற சிதம்பரம் வடிவேலுப் பிள்ளை சம்பந்தமாக வடலூரிலிருந்து எழுதி விடுத்தது.

துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர்
உடையாய்என் றோழ கேள்நீ
அடிப்பதுமச் சிறுவர்களை யடிப்பதுநன்
றலவென்மேல் ஆணை யாணை.

---

## (4) இறைவன் 9

*அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்*

திருவோங்கு பொற்சபையுஞ் சிற்சபையு
நம்பெருமான் செய்யா நின்ற
உருவோங்கும் ஆனந்தத் தாண்டவமுங்
கண்டினிதாங் குறைக யானுந்
தருவோங்கு தில்லைநகர்க் கோரிருபா
னுள்வரைக்குட் சார்கின் றேன்நம்
இருவோங்கள் குறையுமிறைக் குரைத்தகற்றிக்
கொளலாநீ யினையே லையா.

---

## (5) தீவிர நட்பு

*அறுசீர் ஆசிரிய விருத்தம்*

பண்ப னேகமுந் திரண்டுரு
வாகியெம் பாக்கியம் போல்வந்த
நண்ப னேநினைப் பிரிந்தநாண்
முதலிந்த நாள்வரை புணவெல்லாம்
புண்ப னோர்ந்தபோ துண்டவாங்
கண்டுநிற் புல்லிநின் னுடனிங்கே
உண்ப னேலஃ துணவென
மதிப்பனி துண்மையென் றுணர்வாயே.

---

9 இது பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்கட்கு வறுமை தீர வழி காட்டி விடுத்தது.

## (6) பரிவு

அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

திருவளருந் திறத்தா யென்கண் ணணையாய்
நீயனுப்பச் சிறியேன் றன்பால்
வருகடிதந் தனையெதிர்கொண் டிருகைவிரித்
தன்பினொடு வாங்கி நின்றேன்
உருவளரு மணிமுடியாய்ச் சூட்டினேன்
கண்களிலே யொற்றிக்கொண்டேன்
பொருவருமோர் முத்தமிட்டேன் பூசித்தேன்
வாசித்தேன் புளகுற் றேனே.

## (7) அருமருந்து 10

நிலைமண்டில ஆசிரியப்பா

இறையருள் நிரம்ப இருத்தலான் மகிழ்ந்து
பிறையென வளருநம் பிள்ளை மணிக்கு
ஊருவிற் கட்டி உடனே உடையும்
அதுகுறித் தையநீ அஞ்சலை அஞ்சலை
இதுகுறித் தருள்நீ றிதற்குள் அடக்கஞ்
செய்துவைத் தனன்அத் திருநீ றெடுத்து
எய்துமப் போதும் இடுகமற் றதன்மேல்
கொவ்வைச் சாறும் கோள்வெடி யுப்பும்
கவ்வக் கலந்து காய்ச்சிப் பூசுக
பூசுக உடைந்தபிற் பூரம் பூசுக
பாசுறு முருங்கைப் பட்டைச் சாற்றினில்.

உ. திருமுகக் குறிப்பு முற்றிற்று

க. செய்யுள் நடை முற்றிற்று

10 இது கூடலூர் தேவநாயகம் பிள்ளை அவர்கட்கு எழுதியது

## ௨. உரை நடை

## 1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய திருமுகங்கள்

### திருமுகம் ௧.

உ

சிவமயம்

அருளறி வொழுக்க முதலிய சுபகுணங்களிற் சிறந்த சிரஞ்சீவி ரத்தின முதலியார்க்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் உண்டாவனவாக. தமது சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

மகா-௱-௱ ஸ்ரீ நாயக்கரவர்களுக்கு தற்காலமிருக்கின்ற தேகபக்குவத்தை தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற விசாரம் மிகவும் உடையவனாகவிருக்கின்றேன். நான் அவசியம் இரண்டு அல்லது நான்கு மாதத்திற்குள் அவ்விடம் வருவேன். அதை நாயக்கரவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அவசியம் வருவேன். தாங்களும் சாக்கிரதையோடிருக்க வேண்டும்.

சிரஞ்சீவி நமசிவாயப் பிள்ளை அவ்விடம் படிக்க வேண்டுமென்று வருகின்றான். அவனை படிப்பின் விஷயத்தில் மாத்திரம் அடிக்கடி விசாரிக்கவேண்டும். தங்களுடையவும் நாயக்கருடையவும் க்ஷேம சரித்திரங்களை வி(ை)ரவில் தெரிந்துக்கொள்ளவேண்டும். மனம் அவலங் கொள்ளுகின்றது. ஆகலில் தெரிவிக்க வேண்டும்.

சிரஞ்சீவி சிரஞ்சீவி
இங்ஙனம்
**சிதம்பரம்**
**இராமலிங்கம்.**

இஃது
சிரஞ்சீவி இரத்தின முதலியாரவர்களுக்கு [11]
கொடுப்பது

---

திருமுகம் உ.

உ

சிவமயம்

சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேலுண்டாவதாக. இந்தக் கடிதம்கொண்டு வருகிற சி. குமாரசாமி பிள்ளை படிக்க வேண்டுமென்று விரும்பி யிருக்கிறபடியால், அவனுக்கு எந்த விதத்தில் படிப்பித்தால் படிப்பு வருமோ அந்த விதத்தில் படிப்பிக்கவேண்டும். சிரஞ்சீவி நமசிவாயத்துக்கும் இதுவே. இது விஷயத்தில் உனக்கு—விரித்து எழுதுவதி லுனக்கு மனம் சலிக்கும் என்று இந்த மட்டில் நிறுத்தினேன். உன்னுடையவும் ௱-௱ திருவேங்கட முதலியார் முதலானவர்களுடையவுமான விபவ க்ஷேமங்களை தெரிவிக்கவேண்டும். மேலும் தெ. வீட்டுக்கார அம்மாளுக்கு என் வந்தனத்தைக் குறிப்பிக்க வேண்டும். மற்ற சங்கதிகளைப் பின்பு தெரிவிக்கிறேன். நானும் இன்னும் இரண்டு மாசத்தில் வருகிறேன். வேணும் சிரஞ்சீவி.

---

11 இவர் தம் இளமை தொட்டே சுவாமிகள் திருவடிகட்கு மீளா ஆளெனத் தொண்டு பூண்ட பேரன்பர்.

உ

சிவமயம்

சிரஞ்சீவி முருகப்பிள்ளை மாப்பிள்ளைக்கு[12] சகல பாக்கியமும் புத்திரசம்பத்தும் தீர்க்காயுளும் மென்மேலுண்டாவதாக. சிரஞ்சீவி குமாரசாமி அவ்விடம் வருகிறபடியால் அவனுக்கு படிப்பும் முயற்சியும் ஊதியமும் உண்டாகின்ற வகை எவ்வகை—அவ்வகை ஆராய்ந்து கூட்ட வேண்டும். இதுவன்றி உனக்கு முக்கியம் தெரிவிக்க வேண்டுவது ஒன்று என்னென்றால்—பழமை பாராட்டலும் கண்ணோட்டம் செய்தலும் சுற்றந் தழுவலும் அவசியம் சமுசாரிக்கு வேண்டும் என்பது நீ மாத்திரம் அடிக்கடி கவனிக்கவேண்டும். நீ இப்போது முனமாப்பிள்ளையல்ல, புதுமாப்பிள்ளை. எம்போல்வார் மேல் ஞாபகமிராது. ஆதலால் ஞாபகப்படுத்தினேன். நானும் சில மாதத்தில் வருகிறேன். வேணும் சிரஞ்சீவி.

காளயுக்தி வையாசி கக

இங்ஙனம்
சீ. இராமலிங்கம்.

இது
சென்னை சி. வி. இரத்தின முதலியாருக்கு
விடுக்கப்பட்டது.

---

12 இத் திருமுகம் முன்னதோடு இங்கு அசசிட்டிருக்கும் வாறே வேற்றுமையின்றி இணைக்கப் பட்டிருக்கிறது.

## திருமுகம் ௩.

உ

சிவமயம்

இது ரகசியம்

அன்பு அறிவு இரக்கம் ஒழுக்க முதலிய நற்குணங்களாற் சிறந்து நமது கண்மணிபோல் விளங்குகின்ற அன்புள்ள தங்களுக்கு சிவபெருமான் திருவருளால் சிவஞானமும தீர்க்காயுளும் சிந்தித மனோரத சித்தியும் மேன்மேல் உண்டாவதாக. நாளது வரையில் இவ்விடத்தில் ம-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்களும் யானும் க்ஷேமம். தங்களுடைய க்ஷேம விபவங்களை அடிக்கடி தெரிவிக்கவேண்டும். எனக்கு எழுதிய கடிதம் இரண்டும் வரக்கண்டு அறிந்தேன். அந்தக் கடிதங்களில் குறித்தபடி இதன் அடியில் சில சிவசந்நிதான சாட்சியாகத் தெரிவிக்கிறேன்.

பிர்ம விஷ்ணு ருத்திராதிகளுடைய பதங்களும் அந்தக் கர்த்தாக்களும் அவர்களால் சிருட்டி திதி சங்காரம் செய்யப்பட்டு வருகிற தேகாதி பிரபஞ்சங்களும் அனித்தியம். ஆகலில் நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மை யுள்ளதாகியும் சச்சிதானந்த வடிவமாகியும் அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள். அன்றியும், தாய் தந்தை குரு தெய்வம் சிநேகர் உறவினர் முதலியவர்களும் மேற்குறித்த சிவத்தின் திருவருளே யல்லது வேறில்லை. நாம் பல சனனங்களையுந் தப்பி மேலான இந்த மனிதப் பிறவி யெடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறு

வதற்கே. எவ்வகைப் பிரயாசத்தினுலாவது அந்த அருளை அடையவேண்டும். அந்த அருள் எவ்வகையால் வருமென்ருல்—எல்லா வுயிர்களிடத்தினும் தயவும் பிரபஞ்சத்தில் வெறுப்பும் சிவத்தினிடத்தில் அன்பும் மாருது நம்மிடத்திருந்தால் அவ்வருள் நம்மை யடையும். நாமும் அதனை யடைந்து எதிரற்ற சுகத்தி லிருப்போம். இது சத்தியம். இனி மேற்குறித்த சாதனத்தை நாம் பெறுவதற்கு சிவபஞ்சாக்ஷரத் தியானமே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆகலில், இடைவிடாது நல்ல மனத்தோடு அதனை தியானிக்க வேண்டும். அதனை யிதனடியில் குறிக்கின்றேன்.

ஓம் சிவாயநம

“ நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்.” 13

“ சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க் கபாய மொருநாளு மில்லை.” 14

---

13 நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனுயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான
ஊனுரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.
திருவாசகம்—திருவேசறவு.

14 சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்(கு)
அபாய மொருநாளு மில்லை—உபாயம்
அதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். ஔவையார்—நல்வழி.

"நான் செய்த புண்ணியம் யாதோ சிவாயநம வெனவே ஊன் செய்த நாவைக்கொண் டோதப் பெற்றேன்."[15]

இதனைக் கண்டு தியானித்து வந்தால் பின்பு எல்லாம் விளங்கும்.

தைமீ௳ எ௨ சி. இராமலிங்கம்.

இதை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டப் படாது[16]

இது

சிரஞ்சீவி மகா-ள-ள ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களுக்குக் கொடுப்பது.

சிவானுக்கிரகம் விளங்க.

---

15 நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமவெனவே ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப் [பவரார்
வானசெய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத் தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே.
திருஅருட்பா—திருவருண் முறையீடு.

16 இவ் உபதேசத் தெய்வத் திருமுகமானது ஸ்ரீ இறுக்கம் இரத்தின முதலியார் வாழ்நாட்களுக்குப் பிறகு சிற்சில அகவின ஆன்ம நேயர்கள் கைக்கு எட்டி அவரவர்களாலும் தமக்கும் தம்மைச சார்ந்தவர்க்கும் பயன்படுமாறு பிரதி செய்யப்பட் டிருக்கிறது. சன்மார்க்க சாதகா யாவரும் அறிந்தனுபவிக்கும் பொருட்டு இஃது இங்கு அச்சிடப்பட் டிருக்கிறது. திருவருட் பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க.

## திருமுகம் ச.

உ

சிவமயம்

சிரஞ்சீவி நமது ரத்ந முதலியாருக்கு சிவகடாக்ஷத்தினால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக. தாம் எழுதிய கடிதம் வரக் கண்டு அதிலுள்ளவைகளை அறிந்து கொண்டேன். பரமசிவத்தினிடத்தே மாறாது மனத்தை வைத்துக்கொண்டு புறத்தே ஆயிரம் பெண்களை விவாகஞ் செய்துக் கொள்ளலாம். அன்றியும், விவாகஞ் செய்துக் கொண்டாலும் அதனால் வருத்தப்பட நம்மை சிவபெருமான் செய்விக்கமாட்டார். ஆதலால் சந்தோஷமாக விவாகத்துக்குச் சம்மதிக்கலாம். தாம் தடை செய்யவேண்டாம். எந்தக் காலத்தில் எந்த இடத்தில் எந்த விதமாக எந்த மட்டில் எதை அநுபவிக்க வேண்டுமோ அதை அந்தக் காலம் அந்த இடம் அந்த விதம் அந்த மட்டு பொருந்தப் பொசிப்பிக்கின்றது திருவருட் சத்தியா யிருந்தால், நமக்கென்ன சுதந்தரமிருக்கின்றது. எல்லாம் திருவருட்சத்தி காரியமென்று அதைத் தியானித்திருக்க வேண்டும். உண்மை இது. இதைக்கொண்டு தெளிந்திருக்கவேண்டும்.

சிரஞ்சீவி சுந்தரப்பிள்ளை தமக்குக் கொடுக்க வேண்டிய ரூ. ௧௦-ம் இன்னம் இரண்டு மூன்று மாசத்தில் கொடுப்பார். அவ்வளவு காலமும் சகித்திருந்து வாங்கிக்கொள்ளவேண்டும். தாம் சிவத்தி

யானத்தை விடாது செய்யவேண்டிய காரியங் களைச் செய்து வரவேண்டும். வாழ்க வாழ்க.

**சிதம்பரம் இராமலிங்கம்.**

ரௌத்திரி ௵
வையாசி ௴
௧௯௳

இஃது
மகா-௱-௱ ஸ்ரீ இரத்ந முதலியார் அவர்களுக்கு[17]

---

**திருமுகம் ௫.**

உ

சிவமயம்

சிரஞ்சீவி ரத்ன முதலியாரவர்களுக்கு நட ராஜானுக்கிரகத்தால் சிவக்கியானமும் தீர்க்காயு ளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக. தங்கள் மணக்கோலத்தை காணக் கொடுத்து வையாதவனுக விருந்தாலும் கேட்டு மகிழும்படி பெற்றேன். தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி தெரிவிக்க வேண்டும். தாங்கள் சிவசிந் தனையை விடாமல் சர்வ சாக்கிரதையோடு லௌகீ கத்தை நடத்தி வரவேண்டும். அசலார் யாராவது இவ்விடம் வருகின்றவர்களிடத்தில் ஒன்று அல் லது இரண்டு லாங்கிளாத்து பீசு வாங்கி அனுப்பி ஞல் அதன் கிரயத்தை பின்பு செலுத்திவிடலாம்.

---

17 பாக்கி விலாசமும் எழுதி ஒட்டியிருந்த ஒரு துண்டுத் தாள் தவறி யிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| Half Anna Postage Stamp) | (Local seal name indistinct) 10-6-60 | Porto Novo. 1860 June 11 | G. P. O. Madras June 13 1860 |

மறைமலையடிகள் நூல் MARAIMALAI AUIGAL

இதற்கு பிரயாசம் வேண்டாம். இதற்குள் வைத்த கடிதங்களில் ஒன்று ம-ா-ா-ஸ்ரீ சூரி செட்டியார் சோமு செட்டியார் வசம் கொடுக்கவேண்டும். தாங்களே போய்க் கொடுக்கவேண்டும். கேட்டால் மனிதர் மூலியமாக வந்ததாகச் சொல்லவேண்டும்.[18] மற்றொன்று நாயக்கரவாள் தாயார் இருக்கிற ராணிப் பேட்டைக்கு தபால் மூலமாக அனுப்பவேண்டும். நான் இன்னும் சில நாள் பொறுத்து வருகிறேன். வேணும்.

இது ரகசியம்.

இங்ஙனம்

ஆடிமீ˜ கசுவ சி. ராமலிங்கம்.

ஆறுமுகப் பிள்ளை அத்தான் கடிதம்—கிஷ்ணப்ப நாய்க்கன் அக்கிராரம் ராமாஞ்சு கட்டடத் தெருவு கீழண்டை வாடை செல்லப்ப முதலியார் கடிதம் சேர்க்க வேண்டும்.

இஃது

நல்லண்ண முதலியார் தெருவு சுப்பராய பிள்ளை வீட்டுக் கெதிர்வீடு மஹாராஜஸ்ரீ ரத்தன முதலியாரவர்களுக்கு.[19]

18, 19 இத்திருமுகத்தில் தபால் தலை முத்திரை ஒன்றும் இல்லை. இதுவும் இதனோடு அனுப்பிய சோமு செட்டியார் கடிதம் உள்பட்ட நான்கும் மனிதர் மூலமாக அனுப்பப்பட்டனவே யனறித் தபால் மூலமாக அனுப்பப்பட்டவை அல்ல என்பது தெளிவு. இப்படியே முன்னும் பின்னும் உள்ள மற்ற திருமுகங்களுக்கும் கொளக.

## திருமுகம் ௬.

உ

சிவமயம்

சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு அம்பலவாணர் அநுக்கிரகத்தினல் தீர்க்காயுளுஞ் சிவக்கியானமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாவதாக. தமது சுப விபவங்களும், ௱-௱ திருவேங்கட முதலியார் முதலியவர்களது சுப சரித்திரங்களும் அடிக்கடி கேட்க விரும்புகிறேன். இங்ஙனம் யானும் ௱-௱ நாயக்கரவர்களும் க்ஷேமம். தாம் முன்னர் எழுதிய கடிதமும் பின்னர் எழுதிய கடிதமும் அதன் பின்னர் பங்கியில் வரவிடுத்த வத்திரமும் அது அது வரத்தக்க காலங்களில் வரக்கண்டுகொண்டேன். வருத்தம் பாராது வரவிடுத்த ஒரு பீசும் ஒன்பது லக்ஷம் பீசுகளாகக் கொண்டேன். இதுவே அமையும். இனி வருத்தம் எடுத்துக்கொள்ள வேண்டாம். பின்பு பார்த்துக் கொள்ளலாம். இதுவன்றி என் பொருட்டு வேறு வகைகளாலும் பிரயாச மெடுத்துக்கொள்ள வேண்டாம். தாமாத்திரம் க்ஷேமமாக சிவானுக்கிர(க)த்தால் சலிப்பற நெடுங்காலம் வாழ்வுற நான் கண்டு களிப்பதே எனக்குப் போதுமான திர்ப்த்தி. இது உண்மை உண்மை. நான் சிலகாலஞ் சென்று அவ்விடம் வருவதற்கு எண்ணங் கொண்டிருக்கிறேன். ஆனல் எமது ஆண்டவன் திருவுள்ளம் எவ்வண்ணமோ தெரிந்ததில்லை. ஆயினும், நான் அங்ஙனம் வருதற்குள் தாம் இங்ஙனம் வருதற்குக் கூடுமான கால நேரிடின் தாம் வரவும் நான் காண

வும் ஆவலுள்ளவனாகவே இருக்கின்றேன். கூடு மான கால நேராவிடில் வரவேண்டுவதில்லை. நான் வந்து காண்கிறேன். அன்றி தாம் சாக்கிரதையாக தமது தேகத்தை உபசரித்து வரவேண்டும். வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டும். இனி விசேடமான அலுவல் நேரிடுகிற பரியந்தம் இப்பொழுது நேரிட்டிருக்கிற அலுவலைப் பார்த்து வரவேண்டும். என் எண்ணத்தின்படி ஆண்டவன் விரைவில் தமக்கு விசேஷ சவுக்கியத்தை யுண்டு பண்ணுவார் என்கிற நம்பிக்கையை யுடையவனாக இருக்கிறேன். தாம் இடைவிடாது பரம சிவமே பொருளெனக் கொண்டுப் பஞ்சாக்கரத்தையே சிந்தித்து வரவேண்டும். நான் ஙா-ஙா சோமு செட்டியார்க்குக் கடிதம் எழுதவே மாட்டேன். அவர் கல்யாணத்துக்கு எனக்கொரு கடிதம் எழுதினார். அதற்குப் பதிலாகவும், அவர் அன்பை சோதிக்கும் பொருட்டாகவுமே எழுதி தம்மாற் கண்டு கொண்டது. இவரைப்போல் ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம். நமக்கு இவர்களெல்லாம் ஒரு திரணமாகத் தோற்றுகின்றார்கள். இவர்கள் லக்ஷியம் வேண்டுவதில்லை. நாம் சிவபெருமான் திருவடிகளுக்கு அடிமையானோம். நமக்கு ஒரு விதத்தாலும் குறைவில்லை. இது உண்(மை)ம. சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சி. ராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை ஏழுகிணற்றண்டை வீராசாமிப் பிள்ளை தெருவில் ௩அ-வது கதவு நெம்பர் வீட்டில்

மஹா-ள-ள-ஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்களுக்கு சேர்ப்பிக்க வேண்டும். 20

---

திருமுகம் எ.

உ

சிவமயம்

அன்பு அறிவு முதலிய நற்குணங்களிற் சிறந்து சிவநேசத்தான் மேம்பட்டெமது கண்மணி போன்று விளங்கிய சிரஞ்சீவி ரத்தின முதலியாருக்கு சிவக்கியானமும் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

அவ்விடத்திய சுபசரித்திர விவபங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தாம் ரிஜிஸ்டர் செய்வித்து அனுப்பிய கடிதமும் அதற்குள் அடங்கிய இருபத்தைந்து ரூபாய் நோட்டும் தாமசப்படாமல் வந்து சேரப் பெற்றுக்கொண்டேன். இது விஷயத்தில் தமக்கு விசேஷம் பிரயாசம் நேரிடச் செய்கிறேன். ஆயினும் அந்தப் பிரயாசம் சிவகடாக்ஷத்தால் நேரிட்டதாகலின் பின்பு தமக்கும் எனக்கும் தடைபடாத நிம்மதியையும் சத்துவ சந்தோடத்தையும் உண்டுபண்ணு மென்கிற நிச்சயத்தினால் நானது தெரிவிக்க நேரிட்டது. ஆனால் இது குறித்து விசேஷ முயற்சியும் பிரயாசமும் தமக்கு நேரிடுமே என்ன செய்வது என்கிற விசாரமும் ஒரு பக்கம் உடையவனாகவே யிருக்கிறேன். இனி வேறு வகையாற் பலவாக விரிப்பதென்ன. நானே தாமாகவும் தாமே நானாகவும் பழமை தொட்டு

---

20 Half Anna Postage (Stamp) — S. A. Dt. 13-8-1860 Chiddumbrum — Porto Novo. 1860 Aug 14 — G. P. O. Madras Aug. 16 1860 2nd Delivery

வந்த அபேத நேயத்தை எண்ணி, மற்ற இடங்களில் கனவிலும் லக்ஷியஞ் செய்து குறிக்கப்படாத குறிப்பை தம்மிடத்தே குறித்தேன். இது எம்பெருமானுக்கும் சம்மதமாக விருக்கும். ஆகலில் தமக்கும் சம்மதமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். இவை தாம் வாங்குகிற இடமும் வாங்குகிற வகையும் அதற்கு எல்லையிட்டுக் கொண்ட வண்ணமும் மற்றவைகளையும் தெரிவிக்க வேண்டும். இவ்விடத்தில் ம-ா-ா-ஸ்ரீ நாயக்கர் அவர்களும் யானு மற்றவர்களும் க்ஷேமம். இங்ஙனம்

சிதம்பரம் இராமலிங்கம்.

புரட்டாசிமீ உ௨

இஃது
சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன் பேட்டை ஏழுகிணற்றுக்கு அடுத்த கீழண்டை வீராசாமி பிள்ளை தெருவில் ா-ா சுப்பராயப் பிள்ளையவர் வீட்டுக்குளதிர் வீட்டில் இருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ரத்தன முதலியாரவர்களுக்குக் கொடுப்பது. 21

சளூர் சளூர்.

---

**திருமுகம் அ.**

௨

சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய நற்குணங்களிற் சிறந்து எனது கண்மணி போன்று எனது இதயத்

---

21 Half Anna (Local Postage seal (Stamp) indistinct) — Cuddalore 19 Sep. 60 Paid 19-9-60 — G. P. O. Madras Sep. 20 1860 2nd Delivery — R. House No. I

திருக்கும் சிரஞ்சீவி ரத்ந முதலியார்க்கு சிவக்கி யானமுந் தீர்க்காளுஞ் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

தாம் அனுப்பிய கடிதமும் பங்கியில் அனுப்பிய புத்தகங்களும் வந்து சேர்ந்தது. சேர்ந்தவென்று தெரிவிப்பதற்கு அமைதியின்மையில் கால நீட்டித்தது. ஆகலின் அது குறித்து வேறு நினைக்க வேண்டா.

இவ்விடம் வருவதற்கு எவ்விதத்தாலும் தடையில்லா திருந்தால் வரல் வேண்டும். அன்றி அலுவலால் காலத்தால் இடத்தால் வேறு வகையால் சிறிது சிறிது தடை நேரினும் தாம் இங்கு வரல் வேண்டா. யான் அவசியம் தை மாசி அல்லது பங்குனி இவைக்குள் அங்கு ஓர் காரியம் பற்றி வருவதாக நிச்சயித்திருக்கின்றேன். ஆகலில் தடை யுண்டாயின் வருதல் தவிர்க. இன்றாயின் வருக. இங்ஙனம் யானும் ம-ா-ா நாயக்கரவர்களு மற்றவர்களும் க்ஷேமம். தமது சுப சரித்திரங்களும் ம-ா-ா திருவேங்கட முதலியார் சுப சரித்திரங்களும் அடிக்கடி வெளிப்படுத்துக.

வேணும் சிரஞ்சீவி.

கார்த்திகை மீ
உகூ௳

சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது
சிரஞ்சீவி நமது இரத்ந முதலியார் அவர்கட்கு.

## திருமுகம் ௪.

உ

சிவமயம்

நற்குணங்க ளெல்லாவற்றிற்கும் இடமாகிய நன் மனக் கருவியொடு எனது இதயத் திடைவிடாது இருக்கின்ற சிரஞ்சீவி இரத்தின முதலியாரவர் கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவ ஞானமும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாவ தாக.

நாளது வரையில் இவ்விடத்தில் யானும் ஈ-ஈ நாயக்கரவர்களும் க்ஷேமம். தமது சுபசரித்திரங் களை கேட்க ஆசையுள்ளவனாக விருக்கின்றேன். எனக்கும் நாயக்கரவர்களுக்கும் தபால் மார்க்க மாகத் தாம் அனுப்பிய கடிதங்கள் வந்து சேர்ந்து சங்கதிகளை தெரிந்து கொண்டேன்.

நான் சென்னப்பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதிவைக்க வேண்டுமென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால் அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன. ஆயினும் அவைகளைச் சேர்ப்பிக்க சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆகலால் நான் பங்குனிமீ அவசியம் வருகிறேன். வரும்போது கொண்டு வருகிறேன். இது உண்மை. எவ்விதமாவது உ மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன். குமார சாமி பிள்ளை சண்முகப் பிள்ளை ரெட்டியார் இவாள் இடங்களில் தற்காலம் இருக்கின்ற பாடல்கள் சுமார் ருய-க்கு உட்பட்டதாகவே இருக்கும். வெளிப்பட்ட பாடல்கள் பலபல. ஆகலால் மன் னிக்க வேண்டும்.

அன்புள்ள என் கண்மணி போன்ற தாம் இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்யப் பிரார்த்திக்கிறேன். அதாவது இந்தப் பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடம் சேருகின்ற பரியந்தம் நான் ஒருவேளை போசனந்தான் செய்வேன் என்று எழுதியதைப் பார்த்த பின்பு நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருந்தவில்லை. பட்டினி கிடந்தவனைப் போல இருக்கிறேன். ஆகலால் என்னை நிம்மதியுள்ளவனுக்க எண்ணங் கொண்டு ஒரு வேளை போசனம் கொள்ளுகிற நிபந்தனை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பைத் தவிரேன். ஒருவேளை போசனம் உள்ளவனுகவே யிருப்பேன். இது சத்தியம். என் மேல் ஆணை. தாம் மேற்குறித்த நிற்பந்த ஏற்பாட்டைத் தவிர்த்து உடனே எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். உ மாதத்திற்கு பின்பு பாடல்கள் அவசியம் சேரும்.

மார்கழி மீ ௰அவ — சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது
சென்னபட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை ஏழு கிணத்துக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத் தெருவில் கலக்டர் கச்சேரி ௱-௱ சுப்பராயப்பிள்ளை யவர்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் ௱-௱ ரத்தின முதலியார் அவர்களுக்கு வருவது. 22

| | | | |
|---|---|---|---|
| 22 Half Anna Postage (Stamp) | (Local seal indistinct) | Cuddalore 1861 Jan. 9 | G. P. O. Madras (date indistinct) |

## திருமுகம் க0.

உ

சிவமயம்

அன்பறிவொழுக்கத்தாற் சிறந்து நமது கண்கள் போன்று விளங்கிய சிரஞ்சீவி ரத்ன முதலியார்க்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் சிவக்கியானமும் மேன்மேல் உண்டாவனவாக. இங்கு ம-ா-ா நாயக்கரவர்களும் யானும் க்ஷேமம். அங்கு தமது சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

தாம் மாசிமீ உசஉ வரைந்து விடுத்த கடிதம் பங்குனிமீ உஉ காணப்பட்டது. அக்கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பரத்தில் வசிப்பது சம்மதமானாலும் இது விஷயத்தில் வசிப்பது சம்மதமின்று. ஏனெனில் சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் இஸ்கூல் கிரமமல்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகிறது. அன்றியும் அவ்வலுவல் இராஜாங்க சம்பந்த அலுவலாக விருந்தால் நன்றாக விருக்கும். அவ்வாறின்றி ஒருமையில்லாத சில இந்துக்கள் சம்பந்தமானதாக விருக்கின்றது. சிதம்பரம் தற்காலத்தில் நமது உயிர்த்துணைவராகிய நடராஜப் பெருமானைப் பற்றி நாம் போவதற்கும் இரண்டொரு தினம் இருப்பதற்கும் தக்கதே யன்றி வேறொரு வகையாலுந் தக்கதாகத் தோன்றவில்லை. ஆயின் அது கலிகால வண்ணம். ஆகலின் இதனடியில் எழுது(ஞ்) சில வரிகளிற் குறித்த வண்ணத்தை முழுதும் நம்ப வேண்டும். அதாவது நான் இந்த மாசக் கடையிலாவது சித்திரை மாச முதலிடை கடையிலாவது அவ்விடம் வருவேன். வந்த பின்பு என் கருத்தை வெளிப்

படுத்துகிறேன். எந்த விதத்தாலும் தாம் என் சமீபத்தி லிருக்கவேண்டு மென்றே இரவும் பகலும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். என் பிரார்த்தனைப் பிரகாரம் இன்னுஞ் சில காலத்துள் கூட்டுவிப்பார். இதற்குச் சந்தேக மிராது. ஆத லின் அங்கு நான் வருமளவும் சகித்திருக்க வேண் டும். சிவ பஞ்சாக்கரத்தை சதா கருத்தில் வைத் துக் கொண்டே காரியங்களை நடத்த வேண்டும். எவ்வகையிலும் என் தேகம் இருந்தால் சமீபத்தி லிருக்கும்படி சிவானுக்கிரகத்தால் செய்துக் கொள்ளுவேன். தாம் இது குறித்து சலனப்பட வேண்டாம். தேக முதலான கருவிகளைப் பக் குவமாகப் பாராட்டிக் கொண்டு வர வேண்டும். மேற் குறித்தபடி வருகிறேன். விண்ணப்பக் கலி வெண்பா நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அங்கிரு ந்து இங்கு வந்திருந்து பிரயாணப்பட்டங்கு வரு கின்ற பெரிய தமக்கையார் வசத்தில் சுமார் ஒரு மாதமாயிற்று கொடுத்தனுப்பினேன். அவாள் மத்தியில் கருங்களவால் கையில் மெய்யில் உள் ளவைக ளெல்லாம் இழந்து விட்டதாகக் கேள்விப் பட்டேன். அவாள் இன்னு மத்தியில் பந்துக்க ளிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆகலில் அவர்கள் அவ்விடம் வந்தவுடன் மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பிப்பதும் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். மற்ற சங்கதிகளெல்லாம் நான் அவ் விடம் வந்த பின்பு பேசிக் கொள்ளலாம். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

பங்குனிமீ ௯௨ இங்ஙனம்

**சிதம்பரம் இராமலிங்கம்.**

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை ஏழுகிணற்றுக்குக் கீழண்டை வீராசாமிப் பிள்ளை வீதியில் ம-ா சுப்பராயப் பிள்ளையவர்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் ம-ா-ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களுக்கு. 23

ஜரூர் ஜரூர்

---

**திருமுகம்** ௧௧.

உ

என் மனத்தில் இடைவிடாது விளங்குகின்ற குணமணியாகிய சிரஞ்சீவி ரத்தன முதலியாருக்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சிவக்கியானமுஞ் சகல சம்பத்தும் மென்மேல் உண்டாவதாக. தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கிறேன். நான் வையாசி மாசம் ௩௰௳திக்குள்ளே அவ்விடம் வருவேன். அவசியம் தியாகராஜப் பெருமானையும் உன்னையும் காண வேண்டும் என்கிற விருப்பம் விசேஷ முள்ளவனாக விருக்கிறேன். ஆதலால் வருவது நிச்சயம் நிச்சயம். இது அன்றி பகவத் பத்தியிற் சிறந்தவராகிய வரதாசாரிய சுவாமிகள் திருவையிந்திரபுரத்துக்கு வந்ததாகக் கேள்விப் பட்டேன். அந்த சுவாமிகளைச் சென்னப்பட்ட

---

| | | | |
|---|---|---|---|
| 23 Half Anna Postage (Stamp) | (Local seal indistinct) | Cuddalore March 26 1861 | G. P. O. Madras March 27 1861 |

ணத்தில் தாம் கண்டால் ஒன்று சொல்லவேண்டு வது. அதென்ன வெனில்

பாலு நீரும் போலும்
பார்ப்பன சிநேகம்

என்று நான் தெரிவித்ததாகத் தெரிவிக்கவேண்டும்.

வேணும் சிரஞ்சீவி.

சித்திரைமீ — இங்ஙனம்
உ௭ — சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது
சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழுகிணற்றண்டை வீராசாமிப் பிள்ளை தெருவு கலக்டர் கச்சேரி சுப்பராய பிள்ளை அவர்கள் வீட்டிற்கு எதிர்வீடு ம-ா-ா-ஸ்ரீ முதலியார் ரத்தன முதலியார் அவர்கட்கு. 24

---

திருமுகம் ௪உ.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு சிவநேய முதலிய நற்குணங் களிற் சிறந்து என்னிரு கண்மணி போன்றென் னிதயத்திருக்கும் சிரஞ்சீவி சிரஞ்சீவி ரத்தன முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயு ளும் சிவக்கியானமும் சவுக்கிய தேகமும் சகல சம்பத்து மேன்மே லுண்டாவனவாக.

---

**24** Half Anna Postage (Stamp) (Local seal indistinct) — Cuddalore 1861 May 10 — G. P. O. Madras 1861 May 11

தமது சுப சரித்திர வியவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தாம் வைகாசி மாதம் ௯௨-யில் வரைந்துவிடுதத கடிதம ஷை மீ ௬௰ ஆந தேதியில் என்னிடம் வரப்பெற்றேன். அவ்வளவு காலம் கடிதம் தாமசப் பட்டதற்குக் காரணம் கடிதம் மேல் விலாசத்தில் கூடலூர் ஜில்லா தபால் ரயிட்டர் என்று குறித்திருந்தது பற்றி. ஆகலில் இனி வரைந்தனுப்பும்போது பரங்கிப்பேட்டை தபால் ரயிட்டர் பார்வையிட்டு புவனகிரியைச் சார்ந்த கருங்குழி என்று வரையவும். அன்றி கூடலூர் ஜில்லா தபால் ரயிட்டர் மேல்விலாசம் பார்வையிட்டு ஷை துக்குடியைச் சார்ந்த கருங்குழியிலிருக்கும என்றுவது வரையவும். இவ்விரு வகையு மில்லாமல் கூடலூர் ஜில்லா தபால் ரையிட்டர் மேல் விலாசம் பார்வையிட்டு புவனகிரியைச் சார்ந்த கருங்குழி என்று வரைந்தால் நாட் செல்வது மன்றி தபால் கூலியும் இரட்டிக்கும். இது அறிக. இனி,

தாம் தம்முடைய தேகத்தை சாக்கிரதையாக உபசரித்து வரவேண்டும். சாக்கிரதை என்பது அருந்தல் பொருந்தல்களில் மித போசனம் மித போகம. மித போஜனமாவது கோபம் விராகம் அலக்ஷியம் முயற்சி விரைவு இவை முதலிய ஏதுக்களால் குறைத்தல்—விருந்து சுவைவிருப்ப முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல் சமமாகப் புசித்தலாம். மித போகமாவது அதிபரிச்சயம் அதி ஞாபகம் முதலிய ஏதுக்களால் இரவு பகல் தோற்றுது பொருந்தல். விராகம் அலக்ஷிய முதலிய ஏதுக்களால் பொருந்தா திருத்தல். இவை இரண்டுமின்றி மாதத் திரண்டுவிசை மாதரைப்

புல்குவது என்றபடி பொருந்தலாம். ஆகலின் இவ்வாறு நடத்தவேண்டும். இனி மருந்து கொள்ளும் போது நெய் நல்லதாகக்கொண்டு சாப்பிட வேண்டும். பாலும் அவ்வாறே. நான் தம்முடைய தேகத்திற்கு விசேஷம் திடம் உண்டாகத் தக்க அவுஷதம்கொண்டு வருவேன். அது பரியந்தம் முன் குறித்தபடி சாக்கிரதையாக இருக்கவேண்டும். நமக்கு எவ்விதத்தாலும் சிவபெருமான் திருவடியும் சிவபஞ்சாட்சரியும் அன்றி வேறு சகாயில்லை. ஆகலில் அவைகளை இடைவிடாது சிந்திக்க வேண்டும் ம-ா-ா நாயக்கரவர்களுடைய சம்மதமும் இது. வேணும். சிரஞ்சீவி.

வைகாசி மீ
௩ வெ

| சிதம்பரம் 25 |
|---|
| இராமலிங்கம். |

இஃது

சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை ஏழு கிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத் தெருவு கலக்டர் கச்சேரி ா-ா சுப்பராயப் பிள்ளை அவர்கள் வீட்டிற்கு எதிர்வீடு ம-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்கட்கு.[26]

சுளுர் சுளுர் சுளுர்.

---

25 இப்படிக் கையெழுத்திட்டிருக்கக்கூடிய இடம் வழிபாட்டிற்காகக் கத்தரித்து எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மற்ற இடங்களுக்கும் இங்ஙனமே கொள்க.

| | | | |
|---|---|---|---|
| 26 Half Anna Postage (Stamp) | (Local seal indistinct) | Pondichery 1861 July 7 | G. P. O. Madras July 9 2nd Delivery |

திருமுகம் கரு.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய சுபகுணங்களைப் பூண்டு எமது கருத்தினுங் கண்ணினும் உவந்து உலாவுகின்ற சி. இரத்ந முதலியார் அவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவக்கியானமும் சகல சம்பத்தும் மென்மேல் உண்டாவதாக.

தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். தாம் இவ்விடம் விட்டுப் பிரயாணப் பட்ட நாள் தொடங்கி நாளது வரையில் தமது சுபசரித்திர வண்ணம் இவ்வண்ணமென்று விசேஷம் தெரிந்து கொள்ளாதவனாக விருக்கிறேன். ஆதலால் அதை தெரிவிக்க வேண்டும். நான் புரட்டாசி மீ அவ்விடம் பிரயாணப்பட்டு வருவதாக ஓர் காரியம் பற்றி நிச்சயித்திருந்தேன். அந்த நிச்சயத்துக்கு ஓர் தடை நேரிட்டது. என்னெனில் நான் புசித்து வருகின்ற கிரகத்தில் யோக்கியராகவும் தலைவராகவும் இருந்த ரெட்டியார் நாளது மீ உ௰௬ பதவியடைந்தார். ஆதலால் உடனே வருவது ஓர் வகை நிந்தைக்கிடமாக இருக்கின்றது. அதனால் மார்கழி மீ பிரயாணப்படுவதாக எண்ணுகின்றேன். எம்பெருமான் எண்ணம் எப்படியோ தெரிந்ததில்லை. இவ்விடத்தில் மழையில்லாமல் அதிக வெப்பமாக இருக்கின்றது. அவ்விடத்திலே எப்படி யிருக்கின்றதோ தெரிந்ததில்லை. தாம் சிவ பஞ்சாக்ஷர தியான பரராகி சதா சந்தோஷ சகிதராக இருக்க வேண்டுவதே என் வேண்டுகோளாக

விருக்கின்றது. தேக முதலிய கருவிகளைத் தக்க வண்ண நடத்தி வர வேண்டுகிறேன். ௱-௱ திரு வேங்கிட முதலியார் முதலானவர்களுக்கும் வந்த னம் குறிப்பிக்க வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி. இங்கு ௱-௱ நாயக்கரவர்கள் க்ஷேமம்.

துன்மதி ௵
ஆவணி ௴
உ௰உ௨

சிதம்பரம்
இராமலிங்கம்.

இ॰॰து
சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழு கிணற்றுக்கடுத்த வீராசாமிப்பிள்ளை தெருவு கலக்டர் கச்சேரி ௱-௱ சுப்பராயப் பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு ௱-௱-ஶ்ரீ இரத்ந முதலியார் அவர்களுக்கு.27
இருந்துவரும் இடம் கருங்குழி.

---

திருமுகம் ௧௪.

௨

சிவமயம்

அற்புத குணாகரமாகி எம்முள்ளத் தமர்ந்த சிரஞ் சீவி ரத்ன முலியாருக்கு தீர்க்காயுளும் சிவஞான மும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாவனவாக. அவ்விடத்திய சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ளவனாகி யிருக்கிறேன். இதனடியில் வரைகின்ற சில வரிகளின் கருத்து மனத்தைச்

| | | | |
|---|---|---|---|
| 27 Half Anna Postage (Stamp) | (Local seal name indistinct) 9-9-61 | Porto Novo. 1861 Sep. 10 | G. P. O. Madras Sep. 12 1861 2nd Delivery |

சலிப்பிக்கு மென் றுணர்ச்சி தோற்றினும் வரையாது வரைகின்றேன்.

ம-ள-ள-ஸ்ரீ நாயக்கரவர்கள் தங்கள் தாயார் பரமபத மடைந்து விட்டதாகத் தபாலில் கடிதம் வரக் கண்டு அதனிமித்தம் ஆண்டு அடைகின்றனர். முன்போல் பிரயாசம் எடுத்துக்கொண்டு இருபது ரூபாய் கடன் வாங்கத்தக்க இடத்தில் வாங்கிக் கொடுத்தால் நான் அவ்விடம் வந்தபின் அவ்விடத்துத் தமக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் நேரிட்டிருக்கிற நிர்ப்பந்தங்களை யெல்லாம் திருவருட்டுணையால் நிவர்த்தி செய்யக்கூடும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

நான் இன்னும் சிலநாளில் அவசியம் அவ்விடம் வருவேன். ம-ள-ள-ஸ்ரீ திருவேங்கட முதலியார் முதலானவர்களுக்கு வந்தனம்.

இங்ஙனம்

தைமீ உ௲வ சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது

ம-ள-ள-ஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்கட்கு.

---

திருமுகம் கஉ.

உ

சிவமயம்

அன்பு அறிவு ஒழுக்கங்கண் முதலிய சுப குணங்களிற் சிறந்த தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் மேன்மேலுண்டாவனவாக. புண்ணியப் பயனுற் பெற்ற தேகத்

தை கூடிய வரையில் சாக்கிரதையோடு பக்குவ மார்க்கத்தில் நடத்த வேண்டும். நான் பங்குனி மாசக் கடையில் அவ்விடம் வருகிறேன். இதன்றியும் இந்தக் கடிதம் கொண்டுவருகிற அம்மாளுக்குத் தாங்கள் கடன் வாங்குகிற இடத்தில் இரண்டு வராகன் கடன் வாங்கிக் கொடுக்க வேண்டும். தங்களுக்கு இப்படிப்பட்ட விடயத்தில் நேரிடுகிற சல்லியங்களை கடவுள் விரைவில் நிவர்த்தி செய்விப்பார். இது நிச்சயம். தற்காலம் நான் வேறோர் நிமித்தம் தனித்து கூடலூரைச் சார்ந்த நெல்லிக் குப்பம் கரும்பாலையாடுந் தோட்டத்தி லிருக்கிறேன். இந்தக் கடிதம் கொண்டு வருகின்றவர்கள் இவ்விடத்தில் வந்து தேக மெலிவைக் காட்டியபடியால்—இதே சமயத்தில் இவ்விடத்தில் எனக்கு வழக்கமாகக் கடன் கொடுக்கிறவர்கள் சமீபத்தி லில்லை. இவர்கள் தேக பக்குவ நிமித்தம் அவ்விடம் போவதாகக் குறித்தபடி தங்களுக்கு இந்தப் பிரயாசம் வைத்தேன். மற்ற சங்கதிகளை நான் அவ்விடம் வந்தபோது தெரிந்து கொள்ளலாம்.

மாசிமீ
௰ நிஉ

சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது
சென்னையில் மஹாராஜஸ்ரீ இரத்தின
முதலியாரவர்கள் சமுகத்திற்கு.[28]

28 "கட்டளையிட்டபடி உடனே கொடுத்தாயிற்று" என்று பொருள்படும் பின்வரும் ஆங்கிலக்குறிப்பு ஸ்ரீ இறுக்கம் இரத்தின முதலியார் கை யெழுத்தில் எழுதியிருக்கிறது : (Paid immediately what is ordered.)

திருமுகம் கசு.

உ

சிவமயம்

அன்பு அறிவு முதலிய நல்லொழுக்கத்திற் சிறந்து என்னுயிரை யொத்து உள்ளத்திலிருந்த சிரஞ்சீவி ரத்ன முதலியார்க்கு சிவ கடாக்ஷத்தினால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக. அவ்விடத்திய சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தமது கருத்தின் வண்ண முடிதல் வேண்டுமென்றியானுந் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன். அன்றி வேறென் செயக்கடவேன். அன்றி, தமதிதயம் சிவபெருமான் திருவடிக்கண்ணே யன்றிப் பிறவொன்றினும் பொருந்தாதிருத்தல் வேண்டு மென்றும் பிரார்த்திக்கின்றேன். தாம் உலகியற்கண் ஒழுகுங்கால் கழிநடை யொருவன் கட்பார்வை போன்றொழுகல் வேண்டு மென்றும் பிரார்த்திக்கின்றேன். அன்றி உணவுறக்க முதலியவற்றா லுடம்பை மெல்லென நடத்தல் வேண்டும். இஃ தென் வேண்டுகோள்.

இனி ம-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்கள் ம-ா-ா-ஸ்ரீ வேலு முதலியாரிடமாக இருப்பதாக அவரது கடிதத்தா லறிந்தேன். தமதிடத்தி லிருப்பதாகச் சிலர் சொல்லா லறிந்தேன்.

அவரெங்கு இருப்பினும் அவர்க்குத் தாம் அறிவிப்பது—நான் சென்னபட்டணம் அவசியம் வரவேண்டும். ஆகலில் நான் அவ்விடம வருவதற்கு எவ்வளவு காலம் பிடித்தாலும் அதுபரியந்தமும் பட்டணத்தில் தானே இருக்கவேண்டும். நான்

வந்தபின்பு உடன் கூடிக்கொண்டு ஆண்டவன் திருவுள்ளப்படி சஞ்சரிக்கலாம். இதனைத் தெரிவிக்க வேண்டும். தற்காலத்தில் யான் வசிக்குமிடம் இதுவென்று குறிப்பதற்குக் கூடாத பலவிடங்களாக இருத்தலில் இருக்குமிடம் இதுவென்று குறிக்கவில்லை. மன்னிக்கவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி சிரஞ்சீவி.

ஆடிமீ ௨௰௨ — இராமலிங்கம்.

இ௦௦து
சென்னபட்டணம் பெத்து நாயக்கன்பேட்டை ஏழுகிணற்றுத் தெருவுக்கு அடுத்த கீழண்டை வீராசாமிப்பிள்ளை தெருவு கலக்டர் கச்சேரி சுப்பராயப் பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு ம-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியாரவர்கட்கு.29

---

## திருமுகம் கஎ.

உ

சிவமயம்

அன்பு அறிவு செறிவு கல்வி கேள்வி முதலியவற்றினிறைந்து சிவபெருமான் திருவடி நேயத்திற் சிறந்து என்னன்பிற் கியைந்து விளங்கிய சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு சிவ கடாக்ஷத்தால்

---

29 துந்துபி௵ ஆடிமீ ௨௯௨ புதன்கிழமை. (இது தபாலில் சேர்த்த நாள தகவல் போலும்.)

| Half Anna Postage (Stamp) | (Local seal (indistinct) | Cuddalore 1862 July 28 | Too Late | Cuddalore 1862 July 29 | G. P. O. Madras July 30 1862 2nd Delry |
|---|---|---|---|---|---|

சிவக்கியானமும் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மே லுண்டாவதாக.

தமது சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். நான் ஆடிமீ ருஉ புறப்பட்டு கூடலூர்க்குப் போய் ஐப்பசிமீ ௳சஉ கருங்குழிக்கு மீட்டும் வந்தேன். வரினும் இன்னும் இருபது தினத்தில் வடமேற்கே ஓர் ஊர்க்குப் போய் அங்கிருந்து திருவொற்றியூர்க்கு வருவதாக நிச்சயித்திருக்கிறேன். நான் வடமேற்கே போகக் கருதிய ஊர்க்குப் போய் அவ்விடத்தே முடிக்கவேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்படுவதற்கு சுமார் ரு மாசம் பிடிக்கும்போல் தோற்றுகிறது. ஆகலால், தாம் தேக முதலிய கருவிகளை செவ்வனிறுத்தி நடத்தவேண்டுமென்று எழுதுவது தவிர வேறொன்றும் எழுதுவது அவசியமாகத் தோற்றவில்லை. நமது சிவபெருமான் திருவடிகளையும் சிவ பஞ்சாக்ஷரியையும் இடைவிடாமல் தியானஞ்செய்து வரவேண்டுமென்பது ஒன்றே முக்கியம் என்று தமது குறிப்பிற் காணப்பட்டது ஆகலிற் குறித்தேனில்லை. சாக்கிரதையோடு இருக்கவேண்டும் ள-ள திருவேங்கிட முதலியார் முதலானவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்கவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

ஐப்பசிமீ உருஉ **சிதம்பரம் இராமலிங்கம்.**

இஃது

சென்னபட்டணம் ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமி முதலியார் வீதி மஹாராஜராஜஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு.

## திருமுகம் ௧௮.

உ

சிவமயம்

சுப குணங்களிற் றலைமை பெற்றுயர்ந்து எமது கண்மணி போன்று விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிந்தித மனோரத சித்தியும் மேன்மேலும் உண்டாவனவாக. இவ்விடத்தில் நாளது பங்குனிமீ ௨௰௨ புதவாரம் இரவில் நான் பொசிக்கின்ற கிரகத்தில் தற்காலம் எசமானனாக விருந்த ராமகிருஷ்ண ரெட்டியார் என்பவர் வானுலகு அடைந்தார். அவர் சம்மதப்படி அவர் தேகம் சமாதியில் வைக்கப்பட்டது. இந்த சங்கதி தாங்கள் அறியவேண்டுவது. அன்றியும், நமது நாயக்கரவர்களுக்கும் சுந்தரம்மாளுக்கும் தெரியப் படுத்த வேண்டும். அன்றியும், நமது வேலு முதலியார் அவர்களுக்கும் நேரிட்டபோது தெரியப் படுத்தவேண்டும். இதுவன்றியும் சுந்தரம்மாளுக்கும் அத்தானுக்கும் நமது நாயக்கருக்கும் நமது வேலு முதலியாருக்கும் தாங்கள் அவசியம் அறிவிக்கவேண்டுவது ஒன்று. அதாவது சித்திரை வைகாசி இவ்விரண்டு மாதமும் போக ஆனிமீ இருபது தேதிக்குமேல் என் தேகம் இருந்தால் அவசியம் சென்னபட்டணம் வருவேன். இது தவறாது. ஆகலில் அதுபரியந்தம் மனம் பொறுத்திருக்கவேண்டுமென்றும் இவர்களுள் சுந்தரம்மாள் அததான இவர்களுக்கு முககியம் தெரிவிக்க வேண்டுவது ஒன்று. என்னெனில் மேற்குறித்த ஆனி இருபது தேதி பரியந்தம் பட்டபாட்டை பட்டுக்கொண்டு இருந்தால் அதன்பின் அவர்

களுக்கு எந்த எந்த விஷயத்தில் நிற்பந்தங்களோ அவைகளை யெல்லாம் நிவர்த்தி செய்து பிரயாசம் தோன்ருதபடி செய்விக்கலாம் என்று உறுதியாகச் சொல்லவேண்டும். நமது நாயக்கரவர்களுக்கு சொல்லவேண்டுவது தேகத்தைப் பக்குவமாக அதிக முயற்சியால் வருந்தாமல் நடத்தவேண்டு மென்றும், ஆனி இருபது தேதிக்குமேல் தாங்கள் சமீபத்தில் இருக்கப் பெறலாம் என்றும் சொல்ல வேண்டும். நமது வேலு முதலியார் அவர்களுக்கு தற்காலம் தேகம் எந்த பக்குவத்திலிருக்கின்றதோ வென்கிற ஐயுறவோ டிருக்கின்றேனென்று சொல்ல வேண்டும். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையாக வைத்திருக்கவேண்டும். அவசியம் தமக்கைக்கும் ஷெட்டியார்க்கும் கடிதத்தின் வண்ணம் தெரிவிப்பது மன்றி பதில் எழுதவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இங்ஙனம் சி. ராமலிங்கம்.

இஃது

சென்னபட்டினம் பெதது நாய்க்கன்பேட்டை ஏழுகிணற்றுத் தெருவுக்குக் கீழ் பக்கம் வீராசாமிப் பிள்ளை வீதியில் கலக்டர் கச்சேரி ஶ-ஶ சுப்பராய பிள்ளை வீட்டுக்கு எதிர் வீட்டில் ம-ஶ-ஶ-ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களுக்கு.[30]

| | | | |
|---|---|---|---|
| 30 Half Anna (Local Postage (Stamp) | seal indistinct) | S. A. Dt. 13-4-63 Chiddumbrum | Porto Novo 1863 Ap. 14 | G. P. O. Madras Ap. 16 1863 2nd Delry. |

திருமுகம் கக.

உ

சிவமயம்

சற்குண சிரோமணியாகி நமது கண்மணி போன்று விளங்கிய சிரஞ்சீவி இரத்ந முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பதத்துஞ் சிவஞானமு மேன்மே லுண்டாவனவாக. சி. தருமலிங்கப் பிள்ளையின் வசத்திலனுப்புவித்த கழல்களீ ரிரண்டும் பூணப்பெற்றனம.

சுமார் பதினைந்து தினத்திற்குமுன் யாம் விடுத்த கடிதம் அங்ஙனம் வரப்பெற்றதும் பெருததும் புலப்பட்டே மின்று. புலப்படுதற்கு அவாவுகின்ருேம்.

இனி ஈராண்டு பலவகைக் கருவிகளால் பதப்படுத்தி யேழைகள் பலர்க்கும் உபயோகிக்கும் பொருட்டு நம்மாட்டிருந்த ஓர் பேரு(ை)ழப்பு—ஓர் அசாக்கிரதையால் தன்மை கெடப்பெற்றது. இங்ஙனம் பெறினும் நம் பெருமான் றிருவுளக் குறிப்பு அங்ஙனமிருந்த தென்று கருதி அமைதி பெற்ருமாயினும், பிணிகளாற் பிணிப்புண்ட ஏழைகளைக் கருதும்போதெல்லாம் ஒரு சிறிது உளம் புடைபெயர்கின்ருேம். ஆகலின் அப்புடைபெயர்ச்சியை இன்னும் இரண்டு மூன்று திங்களி னீக்கப் பெற்று ஆண்டு அவசியம் வருவேம். யாம் வருமளவும் தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபிரான் றிருவடித்துணை யன்றி வேறு துணை நமக்கு இன்மையின் அவற்றை இடை

விடாது நினைக. வாழ்க வாழ்க. சிரஞ்சீவி. சிவபெருமான் திருவருட்டுணை மேன்மேலுண்டா(க). 31

---

திருமுகம் உ0.

உ

சிவமயம்

கல்வியிற் கேள்வியிற் கடலினுஞ் சிறந்து
அன்பறி வொழுக்கம் அமைந்தென் னிரண்டு
கண்போன் றென்பாற் கனிவுகொண் டமர்ந்த
குணரத் தினநீ குடும்பத் துடனே
தீர்க்க ஆயுளும் செல்வப் பெருக்கும்
நோயற்ற வாழ்வும் நுவலரும் கீர்த்தியும்
சிவந்திகழ் ஞானமும் சித்தியும் பெற்று
வாழ்க வாழ்க மகிழ்ந்தருட் டுணையால்
வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் வரவிடுத்த கடிதத்தை கண்ணுற்றுக் களித்தேன். அந்தக் கடிதத்தில் தாங்கள் குறித்தபடி இன்னுஞ் சில காலத்துக்குள் திருவருள் கூட்டுவிக்கும். இது உண்மை. சந்தேகிக்க வேண்டாம்.

தங்களுக்குப் புத்திரப் பேறு உண்டாயிற்றென்று கேள்விப்பட்டு அளவு கடந்த சந்தோஷத்தை யடைந்தேன். குழந்தையை நன்றாகப் பாராட்டி . . . சகல விஷயத்திலுஞ் சாக்கிரதையா இருக்கவேண்டும். நான் சுமார் அறுபது தினத்துக்குள் அவ்விடம் வருகிறேன். அல்லது பத்து தினம்

---

31 கையெழுத்து தேதி முதலியன இருந்த இடம் கத்தரித்து எடுக்கப்பட்டிருக்கிறது. மேல் விலாசமும் அப்படியே.

அதிகப்பட்டாலும் அவசியம் வருவேன். நமது அன்பராகிய மகா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியார் . . . தற்கு ஆனிமாசம் பிரயாணப்படுவதாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள் வந்தால் என் பிரயாணம் எல்லவர்க்கும் வெளிப்படும். வெளிப்பட்டால் அநேகர் என்னுடன் கூடிவர பிரயாணப்படுவார்கள். ஆரவாரப் பிரயாணமாக முடியும். ஆகலில் தாங்களும் அவர்களுக்கு இது விஷயத்தில் தெரிவிக்க வேண்டும். நான் மாத்திரம் ரகசியமாக வரும்படி நிச்சயித்திருக்கிறேன். அவசியம் வருவேன். தங்கள் மாமனார் மகா-ா-ா-ஸ்ரீ திருவேங்கட முதலியாரவர்களுக்கு . . . அவர்கள் எழுதின கடிதங்களுக்குப் பதில் நான் அவ்விடம் வந்த பின்பு தெரிவிப்பதாக சொலல் வேண்டும். நமது நாயக்கரவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்கவேண்டும். வாழ்க. இங்ஙனம்

சி. இராமலிங்கம்.

வைகாசி ௮௨

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மகா-ா-ா
வேலு முதலியாரவர்கள் மேல் விலாசம்
பார்வையிட்டு ஏழுகிணற்றுக் கடுத்த வீரா
சாமிப் பிள்ளை வீதியில் தங்கள் இஷ்டராகிய
ரத்தின முதலியார் அவர்களிடம் சேர்ப்பிக்கப்
பிரார்த்திக்கிறேன். 32

| | | | |
|---|---|---|---|
| 32 Half Anna Postage (Stamp) | Tindivanam 1864 May 27 | G. P. O. Madras May 28 1864 | Madras Suburban 1864 May 28. |

Recd on Sunday the 29th May 1864.

## திருமுகம் உக.

உ

சிவமயம்

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற்
கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை
எழுப்புகின்ற வுறுவ னேனும்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணும் கருத்த னேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறு ணேதே. —வாழ்க.

சிரஞ்சீவி அன்பு அறிவு முதலிய சுபகுணங்களிற் சிறந்த தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகலசம்பத்தும் மேன்மேல் உண்டாவனவாக. அவ்விடம் இன்னும் சில தினத்தில் அவசியம் நான் வருவேன். வந்த பின்பு தங்கள் வருத்த மெல்லாம் சிவபெருமான் திருவருளால் நிவர்த்தியாய் விசேஷ சவுக்கியநேரிடும் என்று துணிந்திருங்கள். ரா-ரா திருவேங்கட முதலியார் காலஞ்சென்றதைக் குறித்து விசாரப்படுகின்றேன். ஆயினும் அது அரிபிரமாதிகளுக்கும் உள்ள காரியம். ஆதலால் புதிதல்ல வென்று துணிந்தேன். சிவபஞ்சாக்ஷர தியானத்தோடு சாக்கிரதையாக இருங்கள். அஞ்சவேண்டாம். சிரஞ்சீவி.

இங்ஙனம்

**சி. இராமலிங்கம்.**

மனைவி புத்திரர் முதலானவர்களது ஷேமங்களை தெரிவிக்க வேண்டும். தேகத்தை பக்குவமாகப் பாராட்டி வரவேண்டும்.

இஃது

சிரஞ்சீவி இரத்தின முதலியாரவர்கள் சமு
கத்திற்கு. வாழ்க வாழ்க.

---

திருமுகம் உஉ.

௨

அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்கள் வாய்ந்து நம்மிடத்து உள்ளன்பு வைத்த சிரஞ்சீவி இரத்தின முதலியார்க்கு சிவ கடாக்ஷத்தினால் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாவனவாக.

தங்கள் சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தங்களுக்கு இருமலால் தேகம் அபக்குவமாக விருக்கிறதாகத் தபாலில் எனக்குத் தெரிவித்தார். அவர் தெரிவித்தது தொடங்கி என் நினைப்பெல்லாம் தங்களிடமாகவே யிருக்கிறது. நித்திரை பிடிக்கிறதுமில்லை. நான தொடங்கிய காரியங்கள் ஒன்றும் நடக்கிறதுமில்லை. மனம் ஆலைபாய்ந்துக் கொண்டேயிருக்கிறது. உடனே புறப்படுவேன். இவ்விடத்தில் ஒரு பெரிய தடை நேரிட்டிருக்கின்றது. அது இன்னும் பதினைந்து தினத்தில் விடும். அதற்கு மேல் பிரயாணப்படுகிறேன். எவ்விதத்திலும் ஐப்பசி மாசம் கஉ-யில் பிரயாணப்பட்டு வருகிறேன். தாங்கள் நமது சாமி அவர்களைக்கொண்டு உபசாந்தி செய்துக்கொண்டு அதிக உழப்பெடுத்துக் கொள்ளாமல் சாக்கிரதையாக வரவேண்டும். கடினமான அவுஷதங்களைக்கொள்ள வேண்டாம்.

முசுமுசுக்கை சமூலங் கொண்டு வந்து பசும்பாலி லூறவைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு நித்தியம் காலையில் தேயிலைத் தண்ணீர் காய்ச்சி சாப்பிடுவதுபோல சலத்தில் போட்டு சுண்ட வைத்து பசும்பால் சர்க்கரை மிளகுப்பொடி கலந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு வர வேண்டும். இதை சாமிகளுக்குத் தெரிவித்து அவாளைக்கொண்டு செய்வித்து சாப்பிட்டுக்கொண்டு வரவேண்டும். உத்தியோகம் தடையாயிருந்தால் அதை விடுத்து தேகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவமான பின்பு சிவானுக்கிரகத்தால் உத்தியோகம சம்பாதித்துக்கொள்ளலாம். அதுபரியந்தம் கடன்பட்டாவது ஜீவனம் செய்யலாம். அது குறித்து அஞ்சவேண்டாம். மேற் குறித்தபடி நான் அவசியம் வருகிறேன். நமது மெய்யன்பர் வேலு முதலியார்க்கும் நான் வருவது நிச்சயமென்று குறிக்கவேண்டும். நமது நாயக்கரவர்களுக்கும் அப்படியே. இந்தக் கடிதம் கண்டவுடன் தங்கள் தேக நிலையை தபாலில் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் என் மனம் சஞ்சலித்துக்கொண்டே யிருக்கும். ஆகலில் தெரிவிக்க வேண்டும். தாங்கள் 'சிவாயநம வென்று சிந்தித்திருப்பார்க் கபாயம் ஒரு நாளு மில்லை' என்பதை சத்தியமாகக் கடைப்பிடிக்க வேண்டும். தங்கள் அன்பன்,

புரட்டாசிமீ ௯வ     சி. ராமலிங்கன்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல் ஓட்டல் மஹாரா-

ரா-ஸ்ரீ முதலியார் வேலு முதலியார் அவர்கள்

மேல் விலாசம் பார்வையிட்டு பெத்து நாயக்கன்பேட்டை வீராசாமிப் பிள்ளை தெருவில் ம-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களுக்குச் சேர்ப்பிக்க வேண்டும். தங்களுக்கும் கடிதம் இதற்குமுன் எழுதி இதனுடன் தபாலில் விடுத்திருக்கிறேன். 33

---

திருமுகம் உ௩.

உ

திருச்சிற்றம்பலம்

சுபம் உண்டாகுக. கல்வி கேள்விகளிற் பயின்று அன்பறி வொழுக்கங்களிற் சிறந்து அருளொடு கிளர்ந்த வாக்கத்தி னுயர்ந்து குணமணியாகி விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்தும மேன்மேல் உண்டாகுக.

தங்களுடைய சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். அரி பிரமாதிகளெத்துணையும் பெறுதற்கு அரியதாகிய சிவ சம்பந்தத்தை முன் செய்த தவப் பயனாற் பெற்றனம். அங்ஙனம் பெற்ற நாம சிவாநந்த போக சாத்தியத்தை காலமுண்டாக அடைதல் வேண்டும். அதனை அடைதற்கு சிவபஞ்சாக்ஷர தியானமன்றி வேறு ஏதுக்கள் ஒன்றுமின்று. இஃது திருவருளாணை. என்னின், நாம் செல்லுங் காலமெல்லாம் சித்தசுத்தியோடு சிவபஞ்சாக்ஷர தியானத்தில் சர்வசாக்கிரதையைப் பெற்று வரவிற்கு ஒத்த செல

---

33 Half anna Postage (Stamp) (Local seal name indistinct) 26 Sep. 64 G. P. O. Madras Sep. 27 1864 R. G. House No. I

வோடு வாழ்தல் வேண்டும். இஃதே நமது கடமை. இனி இங்ஙனம் இருவர் பிணியாளர் வேறு கதியின்றி என்பாற் புகலடைந் திருக்கின்றனர். அப்பிணி சிறிது சாந்தப்பட்டவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வர நிச்சயித்திருக்கிறேன். சிவபெருமான் திருவுள்ளக் கருத்தறியேன். நமக்குரிய நேயர் முன்னவராகிய ஶ்ரீ-ஶ்ரீ நாயக்கர் முதலானவர்கட்கும் என் வந்தனங் குறிப்பிக்க வேண்டும். வரதாசாரியா ரவர்கள் தற்காலம் எவ்வித நிலையி லிருக்கின்றனர். அந்நிலையும் தெரிதல் வேண்டும். நேயர் ஶ்ரீ-ஶ்ரீ கந்தசாமி முதலியார்க்கும் என் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சித்திரை மீ ௳ சி. இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் பெத்து நாயக்கன்பேட்டை ஏழுகிணற்றுக்கு அடுத்த வீராசாமிப்பிள்ளைத் தெருவில் ம-ஶ்ரீ-ஶ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்கள் சமுகத்திற்கு.[34]

---

திருமுகம் ௨௪.

௳

சிவமயம்

கல்வி கேள்விகளிற் சிறந்து அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்களை அணியாக அணி

34 Half Anna Postage (Stamp) (Local seal indistinct) Cuddalore 25 April 1865 Paid G. P. O. Madras Ap. 26 1865 1st Delivery R.G. House No. I

ந்த சிரஞ்சீவி இரத்ந முதலியார் அவர்களுக்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவனவாக.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மஹா-ரா-ரா-ஸ்ரீ வேலு முதலியார்க்கும் அவர்களிடமாகத் தற்காலத்திருக்கின்ற நாயக்கரவர்களுக்கும் என் வந்தனங் குறிப்பிப்பது மன்றி இக்கடிதத்தி னுள்ளடங்கிய கடிதத்தை அவர்களிடத்திற் சேர்ப்பிக்க வேண்டும். இது நிற்க. அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுவது ஒன்று. என்னெனில் தாங்கள் சென்னப் பட்டணத்தை விட்டு நெல்லூர்க்கு உத்தியோக விஷயமாகப் போகக் கருதி பிரயத்தினஞ் செய்வதாயும் தற்கால அலுவல் தானே நீங்கிவிடுவதாயும் கேள்விப்பட்டேன். கேட்ட நாள் தொடங்கி மனஞ் சஞ்சலித்துக் கொண்டே யிருக்கின்றது. ஆனால் என்ன செய்வது. திருவருள் நடத்த நடக்கின்றே மென்று சமாதானஞ் செய்துக்கொண்டாலும் என் மனம் அமைதி பெறவில்லை. ஆகலில் அவ்வாறு நேரிடில் முன்னதாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். நான் கடவுளைப் பிரார்த்திக்கிறதென்னெனில் சென்னப்பட்டணத்தை விடுத்தால் பட்டணத்துக்குத் தென் பாகத்தில் அலுவல் நேரிட வேண்டுமென்று பிரார்த்திக்கிறது தான். என் பிரார்த்தனை திருச்செவிக்கு ஏறுமோ ஏறாதோ தெரிந்ததில்லை. என்ன செய்வேன். எப்படியானாலும் ஆகட்டும். எனக்கு உடனே பிரயாணத்தின் உண்மை இன்மை தெரிவிக்க வேண்டும். தாங்கள் எழுதிய கடிதம் நாற்பது நாளைக்குமேல் நான் காணப்பெற்றேன். நானும் அவசியம் தை

மாசிக்குள் அவ்விடம் வரப் பிரயாணஞ் செய்கிறேன். வந்தால் ஒரு மாதம் இரண்டு மாதத்துக்குமேல் அவ்விடத்தி லிருக்க சம்மதமில்லை. சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சி. ராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ம-ா-ா-ஸ்ரீ முதலியார்
இரத்தின முதலியார் அவர்கள் திவ்விய
சமூகத்திற்கு.

---

திருமுகம் உரு.

சிவமயம்

அருளறி வொழுக்கங்களிற் சிறந்து கல்விகேள்விகளிற் பயின்று எமது கட்கிமை போன்று விளங்குகின்ற சிரஞ்சீவி ரத்தின முதலியார்க்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சிந்தித மனோரத சித்தியு மேன்மே லுண்டாவனவாக.

தங்கள் சுபசரித்திர விபவங்களும் ம-ா-ா நாயக்கரவர்கள் சுப சரித்திர விபவங்களும் அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கின்றேன். தாங்கள் வரவிட்ட பங்கி தபாலில் அடங்கிய புத்தகமும் கடிதமும் முன்னும் பின்னுமாக வரப்பெற்றேன். இவற்றுள் பங்கி தபாலில் அடங்கிய புத்தகத்தைக் கண்டபோது பசியில்லாதவன் பழஞ்சோறு கண்டாற் போலும் குறிப்பில்லாதவனாக விருந்தேன். ஏனெனில் திருவருள் சாட்சியாகத் திருவடிக்கண் ணன்றி வேறொன்றையும் என்மனம் விரும்புகிறதாகத் தோற்றவில்லை. என்றால் இந்தப்

பனை ஏட்டையும் அதில் வரைந்த சிறுபிள்ளை விளையாட்டையுந் தானே விரும்பும். விரும்பாது விரும்பாது. யாரோ தங்களுக்கு வீணாக அலுப் புண்டு பண்ணினார்கள். அதுகுறித்து வியசன மடைந்தேன். ஆனால் அந்த வியசனத்தை உடனே தங்கள் கடிதத்தைக் கொண்டு மாற்றிக் கொண் டேன். எப்படியென்றால் தங்களுடைய க்ஷேம மும் நாயக்கரவர்களுடைய க்ஷேமமும் தெரிய வில்லையே என்று உள்ளபடி எண்ணமிட் டிருந் தேன். அந்த எண்ணத்தை மாற்றிவிடி இருவ ரது க்ஷேமங்களும் அந்தக் கடிதத்தில் குறித் திருந்த படியாலே விசேஷம் சந்தோஷம் உண்டு பண்ணியது. ம-௱-௱ நாயக்கரவர்கள் முளைமூலம் எடுத்துக்கொண்டு இப்போது தான் உடம்பு பக் குவமாகி வருகின்றது என்றபடி இன்னும் தாங்கள் அவர் தேகம் சரியான பக்குவத்தை அடையும் வண்ணம் பாராட்டி வரவேண்டும். தங்கள் தேக முதலிய கருவிகளையும் சாக்கிரதையாகப் பார்த்துப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும்.

நாயக்கரவர்களுக்கு தெரிவிப்பது. எந்த விதத் திலும் இன்னும் நாலைந்து மாசத்துக்குள் சமீபத்தி லிருக்கும்படி சிவ கடாக்ஷ நேரிடும். சந்தேகிக்க வேண்டுவதில்லை. அது பரியந்தம் பொறுத்திரு க்க வேண்டுமென்று தெரிவிப்பது தான். இது வல்லாமலும் தங்களுக்கு நான் தெரிவிப்பது ஒன்று. என்னெனில் நான் எந்தப் பிறப்பிலும் தங்களை விடமாட்டேன். தாங்களும் இன்னும் சில நாள்களுக்குள் சமீபத்தி லிருக்கும்படியாகவே சிவானுக் கிரகத்தால் பார்ப்பேன். உண்மை

உண்மை. ம-ா-ா-ஸ்ரீ நமது உள்ளன்பர் வேலு முதலியார்க்கும் ஸ்ரீ சிதம்பர சாமிக்கும் வந்தனம்.

வேணும் சிரஞ்சீவி.

ஆடிமீ உ௰௩௳          இங்ஙனம்

**சிதம்பரம் இராமலிங்கம்.**

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாயக்கன்பேட்டை ஏழுகிணற்றுத் தெருவுக்கு கீழ்பக்கம் வீராசாமிப் பிள்ளை வீதியில் கலக்டர் கச்சேரி ா-ா சுப்பராய பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு மஹாராஜராஜஸ்ரீ ரத்தின முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு.[35]

சுபமு . . .

---

**திருமுகம்** உக.

௳

சிவமயம்

அன்பறிவாசாரங்களிற் சிறந்து சிவபத்தியினுஞ் ஜீவகாருண்யத்தினுந் தலைநின்றெம துள்ளத்திற் கலந்து விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேலுமுண்டாக.

௲௮௱௬௰௫௵ நவம்பர்மீ ௰௩௳ ரிஜிஸ்டர் செய்தனுப்பிய தங்கள் கடிதத்தைக் கண்ணுற்றறிந்து கொண்டேன்.

அக்கடிதத்திற் குறித்த விஷயம் எனக்கத்துணையவசிய மின்றாயினுந் தங்கள் கருத்தின்படி இறைவ

---

| | | | |
|---|---|---|---|
| 35 Half Anna Postage (Stamp) | (Local seal indistinct) | Cuddalore Aug. 12 (year indistinct) | (G. P. O. seal indistinct) |

னென்னுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும் ம-ள-ள செல்வராய முதலியாரவர் களாயினும் தாங்கள் வரைந்தபடி செய்துக்கொள் ளலாம். இனி எழுதுவதற்கு சமயமின்று. ஆகலின் இங்ஙனம் அமைதி செய்தாம்.

சுமார் இருபது தினஞ் சென்ற பின்னர் சமய முண்டாம்.

ஆண்டு வரைவன வரைதும். சிரஞ்சீவி சிரஞ் சீவி. சிவ சிவ. இங்ஙனம் சிரஞ்சீவி. 36

இராமலிங்கம்.

---

திருமுகம் உஎ.

உ

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங் களாலுஞ் சிறந்த தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேல் உண் டாக.

தாங்க ளனுப்பிய பங்கிக் கட்டும் தபாலும் வந்து சேர்ந்தன. தாங்கள் சிவத்தியான் சகித ராய் வரவுக்குத் தக்க செலவு செய்துகொண்டு தேகத்திற்கு திடமுண்டாகும்படி உபசரித்துக் கொண்டு சாக்கிரதையோ டிருக்க வேண்டும். படிப்பிக்கிற விஷயத்தில் அதிக அதிக்கிரம பிர யாசை எடுத்துக் கொள்ளப் படாது. தங்களுக்கு

36 இந்தப் பிரதி செய்தபோது மேல் விலாசம் எழுதத் தவறி யிருக்கிறதாகத் தோன்றுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Half Anna Postage (Stamp) | (Local seal indistinct) | Cuddalore Nov. 18 1865 | G. P. O. Madras Nov. 19, 1865 3rd Delivery |

இருக்குங் கடனைக் குறித்து அணுவளவும் அஞ்சப் படாது. நான் வைகாசி மாதக் கடைசியில் அவசியம் அவ்விடம் வருகிறேன். இது நிச்சயம். இவ்விடத்தில் நாயக்கர் க்ஷேமமாக இருக்கிறார். ஆயினும் அவர்க்கு இவ்விடத்திலும் நிம்மதியில்லை. அன்றி ஒற்றியூர் பாடல்களையு மற்றவைகளையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப் படுகிறேன். அவைகளை தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடன் இவ்விடத்திலிருக்கின்ற இன்னுஞ் சில பாடல்களையுஞ் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். பின்பு தங்களிஷ்டம். நமது சிநேகிதர் மகா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியாரவர்களுக்கு இதைத் தெரியப் படுத்துவீர்களாக. தங்கள் குடும்ப க்ஷேமமும் சுந்தரம்மாள் . . . புருஷர் . . . சுந்தரப் பிள்ளை முதலானவர்களுடைய க்ஷேமமும் மற்ற சிநேகர் முதலானோர் க்ஷேமமும் தெரிவிப்பீர்களாக. எனக்கு சாவகாச மில்லாமையால் இம்மட்டில் நிறுத்தினேன். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

**சிதம்பரம் இராமலிங்கம்.**

இந்தக் கடிதம் தங்கள் மட்டில் வேலு முதலியார் மட்டில் வழங்கவேண்டும். நாயக்கர் வந்த நாள்தொட்டு தேக அசவுக்கியத்தோடே யிருக்கிறார்கள்.

இ௦௦து

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மகா-ா-
ா-ஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல் விலா
சம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக்கடுத்த வீரா
சாமிப் பிள்ளை தெருவில் மகா-ா-ா-ஸ்ரீ

*ரத்தின முதலியார் அவர்களிடம் சேர்ப்பிக்க கோருகிறேன்.*[37]

---

திருமுகம் உஅ.

*அன்புள்ள தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திட தேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக. தாங்கள் வரைந்து விடுத்த கடிதமும் இப்பாடல்களும் இரண்டு தினத்திற்கு முன் என்னிடஞ் சேர்ந்தன. இன்று குறை நிரம்பப்பெற்றன கொள்க. அன்றி, நான் இத்திசைக்கண் வந்த பின் இங்ஙனமிருந்து தங்களிடத்திற் போந்த சில பாடல்களில் ஒன்றும வெளிப்படாதிருத்தல் வேண்டும். என்னையெனில் நான் இங்ஙனம் வந்த பின்னர் சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாக சுமார் உ௱ மாலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் வெளிப்படும்போது வெளிப்படுத்திக் கொள்ளலாம். இது நிற்க. முன்னோர் கடிதத்தினுள் குறித்த பாயிரத்தை*[38] *இன்னுஞ் சில தினஞ் சென்ற பின்னர் அனுப்புகிறேன், தற்காலம் என்னினைவு விரிதற்கின்மையால். தாங்கள் தேகத்தை சாக்கிரதையாகப் பாராட்டிக்கொண்டு வரவேண்டும். நமது அன்பர் ம-௱-௱ வேலு முதலியார் ம-ரா-ரா-ஸ்ரீ செல்வராய முதலியார் முதலானவர்களுக்கும் நான் அவசி*

---

37 S. A. Dt. 14-2-66 Chiddumbrum Cuddalore 15-2-66 (Madras seal indistinct)

38 இங்குக் குறிக்கும் பாயிரம் இன்னது என்பதும், அது அனுப்பப்பட்டதும், திருவருட்பாவில் அச்சானதும் தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

யம் இரண்டு மாதத்தில் அவ்விடம் வருவதாகக் குறிப்பித்தல் வேண்டும். ம-ா-ா நாயக்கர் சாமிக்கு பித்த விசேஷத்தால் சிறிது குணம் விகற்பித்து அடிக்கடி சொல்லாமற் போவதும் பின்பு வருவது மாக விருக்கின்றார். இது நிற்க. தெ(?) ஆறுமுகப் பிள்ளை அவர்களுக்குஞ் சுந்தரம்மாளுக்கும் இன்னும் ஒரு மாதஞ் சென்ற பின்னர் நான் சொன்னபடி செய்விப்பதாகத் தெரியப்படுத்த வேண்டும். அன்றியும் சௌ. விசாலாக்ஷி அம்மையும் அவர் புருஷனும் இவ்விடதநில் நேர்ந்த சொல்ப வருமபடி போதாமை யென்று சுமார் உ0 நாள்களுக்கு முன்னரே இவ்விடம பிரயாணப்பட்டு அவ்விடம் வந்தார்கள். இது நிற்க.

இராமலிஙகசாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை? ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

• ஜீவகாருண்ணியமும் சிவானுபவமும் அன்றி மற்றவைகளை மனத்தின்கண் மதியாதிருததல் வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.[39]

குரோதன௵ இங்ஙனம்
பங்குனிமீ கஎ௳ சிதம்பரம் இராமலிங்கம்.

---

திருமுகம் உக.

௳

அருட்குணங்களனைத்து மமைந்தென் னற்றுணையாய் விளங்கிய தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் திட தேகமும் சகல சம்பத்து மேன்

---

39 36-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

மேல் விளைக. வரைந்து விடுத்த நல்வாசகத்தைக்
கண்ணுற் றறிந்தனன். குடும்ப கோடம், பொது
வேதம், மெய்ம்மொழிப் பொருள் விளக்கம், சன்
மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்
படுத்தக் கருதியபடி வரையாக் கடி(த)ப் புத்த
கம் மூன்றென்னிடத் திருக்கின்றன. அவை
அமையும். ஆகலில் அது விடயத்தில் உழத்தல்
வேண்டா. நான் வருமதிக் கடையில் அங்ஙனம்
போதுதற் குளங்கொண் டிருக்கின்றனன். இஃ
துபாயமன் றுண்மை. அருநெறி செல்வோர்க்கு
மச்சுறுத்தத் தக்க விவ்வெய்ய பருவத்தின்கண்
வான்பெய லறியா வன்னெறிப்பட்டு மெய்வருத்
தங் கோடலொன்றே. எவ்வகையானுங் களைக
ணின்றி பசித்தாரது பசி நீக்குதற் பொருட்டே
திருவருளாற் கிடைக்கும பொருட் கருவியை அங்
ஙனஞ் செலுத்தலின்றி இங்ங(ன)ஞ் செலுத்தும்
வெறுஞ் செயற்பாட்டிற் கொருப்படுங் குறைமை
யுங் கோடற்கிடனும். ஆகலில் இது விடயத்திற்
றுணிந் துரைத்தற்குச் சித்தமு நாவுஞ் செல்வன
வல்ல. முன் குறித்தபடி வரற்குத் தடைநேரின்
அன்று துணிந்து வரைவல். இஃதென் கருத்து.
பின்னர் தங்கள் கருத்தின்படி செய்க. இஃதுல
கியற் பிழைத்த சிலர்க்கு வரைதல்போல் வரைந்த
தன்று. உள்ளமொத்து வரைந்ததென்க. இதனை
நமது உள்ளன்பர் செல்வராய முதலியாரவர்கட்
குங் குறிக்க. என்னையன்றித் தன்னையுங் கருதார்
அன்றிப் பொன்னையுங் கருதார் என்று கருதப்படு
மன்பர் வேலு முதலியார்க்கு ஓர் உத்தர கடிதம்
வரைந்தனன். தாங்கள் எனக்கு இருமையும்
தொடர்ந்த துணைவராக நினைக்கின்றேன். அன்றி

வேறென்னை நினைப்பேன். தங்களுக் கன்றியும் நமது செல்வராய முதலியாரவர்களுக்கும் கடனிருந்தால் திருவருளால் நீங்கிவிடும். அதுகுறித்துச் சலிக்க வேண்டாமென்று குறிக்க. நாயக்கர் சாமி யென்பவர் தற்கால மிவ்வுலகி லிருக்கின்ற தான்றோன்றிச் சாமிகளிற் றலைநின்ற சாமியென்க. என்னை? அறிய வேண்டுவனவற்றை அறிய முயலாமையோடு பித்த மயக்கான் மனஞ் சென்ற வழி சென்று பித்தச்சாமி யென்னும் விசேடப் பேர் ஒன்று மிகையாகக் கொண்டிருக்கின்றனர். ஆகவிற் சூழும் வண்ணம் சூழ்க. அன்றி சிவ சிந்தனையுஞ் ஜீவ கருணையுங் கைவிடாது ஓங்குக. வேறு விடயங்களைச் சந்தி செய்யும் பந்த சந்தி சந்தியாலே மாறாது விழித்திருக்க. சுபம் பெறுக.

அக்ஷய௵ சித்திரை௴ இங்ஙனம்
அவ சிதம்பரம் இராமலிங்கம்

இஃது
சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மஹாரா-
ரா-ஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல்விலா
சம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக் கடுத்த
வீராசாமிப் பிள்ளை வீதியில் மகா-ள-ள-ஸ்ரீ
இரத்தின முதலியார் அவர்கள் சமுகத்திற்கு
தயவு செய்விக்க. சுபம்.[40]

---

| | | | |
|---|---|---|---|
| 40 Half Anna Postage (Stamp) | (Local seal indistinct) | Cuddalore April 21 1866 | G. P. O. Madras April 22 1866 2nd Delivery |

திருமுகம் ௩௦.

உ 41
சிவமயம்

கல்வி கேள்வி அன்பு அறிவு ஒழுக்கந் தயை முதலியவற்ருற் சிறந்து எனக்கோர் துணையாய் விளங்கிய தங்கட்கு குரு கடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். இந்தக் கடித முன்னிலையால் தங்களைக் காணுகின்ற பெரிய புராணீகர்க்கு சுமார் நாலுமாத பரியந்தம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ௪ தாங்கள் கடன் வாங்குகின்ற இடங்களில் வாங்கி மாத மாதம் கொடு . . . வேண்டும். இவ் . . வாங்கிக் கொடுத்தனு . . . அவர் கையில் பணமிருந்தால் விரைவில் செலவழிந்து போம். அது தங்களுக்குந் தெரியும். இந்தக் காலம் மிகவும் உஷ்ண காலமாக விருத்தலால் தாங்கள் தேகத்தை சாக்கிரதையாகப் பாராட்டிக்கொண்டு வரவேண்டும். இந்த பெரிய புராணீகர் தற்காலம் உடம்பு அபக்குவராக வருகின்ருர். தாங்கள் கடிதம் எழுதக் குறிக்கும்போது இவர் தரத்தையும் குறிக்க வேண்டும். எனக்கு தற்காலம் பலர் பல.ர் விவகாரம் முதலிய

41 இவை எழுதப்பட்டிருக்கக்கூடிய இடம் வழிபாட்டிற்காகக் கத்தரித் தெடுக்கப்பட்டிருக்கிறது.

வற்றால் உடம்பு அபக்குவமாக விருக்கின்றது. நான் கூடலூரி லிருக்கின்றேன்.

அக்ஷய ௵

வைகாசி௴ ௩௰௨

சிதம்பரம் 42
இராமலிங்கம்.

நான் அவ்விடம் வருகின்ற காலம் சமீபத்தில் குறிக்கின்றேன்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் மஹாராஜராஜஸ்ரீ முதலியார் ரத்தின முதலியாரவர்கள் திவ்விய சமுகத்துக்கு.

நன்மை.

---

திருமுகம் ௩௧.

உ

சிவமயம்

அன்பு அருள் அறிவு முதலியவற்றாற் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக வென்று பிரார்த்திக்கிறேன்.

தங்கள் தேக விஷயத்தில் அதிகமாக சாக்கிரதையாக சிவத்தியானத்தை விடாமல் வரவுக்குத் தக்கபடி நடக்கவேண்டுமென்று மிகவும் கோருகிறேன்.

முன்னர் நான் பெரிய புராணீகர் விஷயத்தில் எழுதின கடிதத்திற்குப் பதில் தாங்கள் எழுதின கடிதம் வந்து சேர்ந்தது. ஆயினும் என் மனம்

---

42 இங்ஙனம் கையொப்ப மிட்டிருக்கக்கூடிய இடம் வழிபாட்டிற்காகக் கத்தரித் தெடுக்கப்பட்டிருக்கிறது.

இக்கால விகற்பத்தால் விகற்பித்துக் கொண்டிருப்பதால் உடனே பதில் தெரிவிப்பதற்குத் தடையாயிற்று. அது குறித்து வேறு நினைக்கவேண்டாம். நான் இன்னும் இரண்டு மாசத்திற்குள் அவசியம் அவ்விடம் வந்து சுமார் இருபது தினத்திற்குள் பிரயாணப்பட்டுத் திரும்புவதாக நினைத்திருக்கிறேன். அப்போது தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியவை தெரிவிக்கிறேன். தாங்கள் உடம்பு விஷயத்தில் அதிக சாக்கிரதையும் சமுசார விஷயத்தில் அதிக வன்மையு முடையவர்களாக விருங்கள். நமது ஈ-ஈ செல்வராய முதலியார் அவர்களுக்கும் இப்படியே தேக முதலியவற்றில் சாக்கிரதையும் சிவத்தியானத்தை விடாமையும் உள்ளவர்களாக வேண்டுகிறேன். அதையுங் குறிக்கவேண்டும். பெரிய புராணிகர் விஷயத்தில் முன்பு நான் குறித்தபடி இன்னுஞ் சிலகாலம் பிரயாசை எடுத்துக் கொள்ளுங்கள். நான் பின்னே அந்தப் பிரயாசையை மாற்றுகிறேன். சுந்தரம்மாள் அவர் புருஷரைப் பெண்கள் முதலானவர்களுக்கும் நான் வருதலைக் குறிப்பிக்கவேண்டும். அன்றி சிரஞ்சீவி நமசிவாயப் பிள்ளை அவ்விடம் வந்திருக்கிறார். அவர்க்குந் தெரியப்படுத்துங்கள். வேலூர் ஈ-ஈ-வேலு முதலியார் முதலானவர்களுக்கும ஈ-ஈ-கந்தசாமி முதலியார் முதலானவர்களுக்கும் அங்ஙனமே குறிக்க வேண்டும். எழுதுவதற்குத் தருணமல்லாத மனத்தொடும் இதை எழுதினேன். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

ஆடிமீ அஉ

குறிப்பு. சி. நமசிவாயப் பிள்ளைக்கு பதில் இன்னுஞ் சில தினத்தில் தெரிவிக்கிறதாகக் குறிக்க வேண்டும்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல்ஓட்டல் ம-ா-ா-ஸ்ரீ
முதலியார் வேலு முதலியார் அவர்கள் மேல்
விலாசம் பார்வையிட்டு ஏழு கிணற்றுக்கடுத்த
வீதியிலிருக்கும் ா-ா இரத்தின முதலியார்
அவர்களுக்கு சேர்ப்பிக்க வேண்டும். இத
னுடன் தங்களுக்கும் ஒரு கடிதம் எழுதி தபா
லில் போட்டிருக்கின்றது. 43

சுபம் சுபம்.

---

## திருமுகம் ௫௨.

உ

அன்பு அறிவு தயவு கல்வி கேள்வி முதலிய சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக. தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்கவேண்டும்.

பெரியவர் சிவபதம் அடைந்த . . . செவ்வாய்க்கிழமை சாயங்காலம் தெரிந்துகொண்டேன். நான் சமீபத்திலிருக்கவும் சிதம்பரத்தில் சமாதி வைக்கவும் அவர்கள் எண்ணியபடி நேரிடாமல் . . . விட்டதை . . . இது நிற்க.

---

| | | | | |
|---|---|---|---|---|
| 43 Half Anna Postage (Stamp) | Cuddalore July 26 1866 | Cuddalore July 27 1866 Paid | G. P. O. Madras July 28 1866 2nd Delivery | R. G. House No. I |

. . . . .

. . . . .

படத்தொடங்குவார்கள். அதனால் காலமும் செலவும் நீட்டிக்கும். காலமும் வேற்றுமையாக இருக்கின்றது. ஆதலால் சிநேகர் மகா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியாருக்கு கடிதம் எழுதி . . . அந்தக் கடிதப்படி அவர்கள் நடத்துகின்ற பட்சத்தில், தாங்களும் அன்பர் செல்வராய முதலியார் நாயக்கர் முதலானவர்களும் உடனிருந்து நடத்துவிக்க வேண்டும். நான் ஐப்பசி மாசம் அவ்விடம் வருகிறேன். நான் வருவதற்கு முன்பே வேலு முதலியாரவர்கட்கு தெரிவித்து அவர்கள் வந்த பின்பு அவர்களுடன் வருவேன். நான் வந்த பின் அவர்களுக்கு நேரிட்டிருக்கிற கடன் . . . நீங்களும்

. . . . .

. . . . .

. . . . .

கடன் முதலிய சல்லியங்களை ஆண்டவர் விரைவில் நிவிர்த்தி செய்வார். தாங்களாவது முதலியாராவது சஞ்சலிக்கவேண்டாம். . . . வடிவேலுப் பிள்ளை, தாயார், சுந்தரம்மாள், புருஷன் முதலானவர்களுக்கும் இன்னும் இரண்டு மாதத்திற்குள் ஜீவனத்துக்கு இடம் ஏற்படுத்துவார் கடவுள். அவர்களிடம் திடஞ் சொல்லவேண்டும். நமசிவாயப் பிள்ளையை நான் தெரிவிக்குமளவும் அவ்விடந் தானே இருக்கும்படி சொல்லவும். அவன் . . .

. . . . .

. . . . .

பிரசவமான சங்கதி தெரிவிக்கச் சொல்லவும்.

உடனே தாங்கள் எனக்கு கூடலூருக்கு அவ்விடத்திய சங்கதிகளை தபாலில் தெரிவிக்கவேண்டும்.

சிரஞ்சீவி.

**சிதம்பரம் இராமலிங்கம்.**

இஃது
சென்னப்பட்டணம் ராயல் ஓட்டல் மகா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல்விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிப் பிள்ளை தெருவில் மகா-ா-ா-ஸ்ரீ ரத்தின முதலியார் அவர்களிடம் சேர்ப்பிக்கக் கோருகிறேன்.44

---

**திருமுகம் ௩௩.**

உ

கல்வி கேள்விகளாலு மன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக வேண்டும்.

தங்கள் சுப சரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மகா-ா-ா-ஸ்ரீ அப்பாசாமி செட்டியாரவர்கட்குத் தாங்கள் வரைந்த கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பர விஷயமான பாடல்களை தங்கள் கருத்தின்படி அச்சிட்டுக் கொள்ளுங்கள். அன்றியும் 'கண்டா யென்றோழி' என்கிற பாடல்களை வைத்திருக்கின்றவர் தற்காலம் சமீபத்திலில்லை. அவர் வந்தவுடன் வாங்கி யனுப்புகிறேன். 'விண்படைத்த பொழிற்றில்லை அம்பலத்

44 (Local seal indistinct) (Madras date appears to be Sep. 22, 1866)

தான் எவர்க்கு மேலாறு னன்பருள மேவுநட ராஜன் ’ எனல் வேண்டும். இது நிற்க. நான் தற் காலம் அவ்விடம் வருவதற்கு சமயமாகத் தோற்ற வில்லை. ஆயினும் நமது . . . தலைவராகிய கடவுளது திருவுளச் சம்மதிக்கு எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறேன். எந்த இரவில் எந்தப் பகலில் திரு வுளச்சம்மத வுத்தரம் எனக்குக் கிடைக்கின்றதோ, அந்த இரவில் அந்தப்பகலில் பிரயாணப்படுவதற்கு யாதொரு தடையுமிராது. இரவும் பகலும் இதை நினைத்துக் கடவுளை தியானிக்கின்றேன். அவர் உத் தரத்தடையன்றி வேறு தடை யாதொன்றுமில்லை. தாங்கள் தேக முதலியவற்றில் சாக்கிரதையுடைய வராய் சிவத்தியான சகிதராக இருங்கள். அன்றி இ . . . லீவில் இவ்விடம் வருவதற்காவது அல் லது மற்ற எவ்விடம் போவதற்காவது எண்ண மிருந்தால் அதை முன்னதாக எனக்குத் தெரிவிப் பீர்களாக. நமது அன்பர் மகா-ள-ள செல்வராயமுத லியாரவர்கட்கும் இதை குறிப்பிக்க வேண்டும். பெங்களூர் மகா-ள-ள வேலு முதலியார் தற்காலம் என்ன அலுவலில் இருக்கின்றார். தெரிவிக்கவேண் டும். சுந்தரம்மாளுக்கும் அவர் புருஷனுக்கும் வரு மாதத்தில் ஜீவனோபாய விருத்தி உண்டுபண்ணு விப்பதாகச் சொல்லுங்கள். என்னைக் குறித்த மற்றவர்களுக்கும் அங்ஙனங் குறிப்பீர்களாக. சிரஞ் சீவி சிரஞ்சீவி சிரஞ்சீவி. இங்ஙனம்

சி. இராமலிங்கம்.

இதனடியில் எழுதுவதை தாங்கள் ஞாயிற்றுக் கிழமை . . . யாவது அல்லது ஓய்வு ஏற்படும் எந்த தினத்திலாவது மகா-ள-ள வேலு முதலியா ரவர்கட்கு காண்பிப்பீர்களாக.

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங் களாலும் சிறந்த நண்பராகிய மகா-ா-ா-ஸ்ரீ வேலு முதலியாரவர்கட்கு வந்தனம். தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையாக நடத்திக்கொண்டு சிவத்தியான சகிதராக இருங்கள். நான் மகா-ா-ா-ஸ்ரீ ரத்தின முதலியார் அவர்களுக்கு வரைந்த வாசகத்தைப் பாருங்கள். எந்தத் தினத்தில் பிரயாணப்படலா மென்றே இரவும் பகலும் விரைந்து விரைந்து நினைக்கின்றேன். தாங்கள் இந்தப் பக்கம் வரும்படி எண்ணங்கொண்டால் முன் எனக்குத் தெரிவிப்பீர்களாக. எழுதுவதற்கு அசந்தர்ப்பத்தால் இப்படி எழுதினேன். மன்னிப்பீர்களாக. வந்தனம்.

அக்ஷய ஹு
கார்த்திகைமீ கஉ௨

சிதம்பரம்
இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழுகிணற்றுக்குக் கீழ்பக்கம் வீராசாமிப் பிள்ளை தெருவில் மகா-ா-ா-ஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்கட்கு வருவது.

சுபம். 45

---

| | | | |
|---|---|---|---|
| 45 Half Anna Postage (Stamp) | (Local seal indistinct) | Porto Novo. Nov. 27 1866 | G. P. O. Madras Nov. 28 1866 |

திருமுகம் ௩௪.

அன்பறிவு முதலியவற்றிற் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் மேன்மேல் சுபம் உண்டாக.

தாங்கள் குறித்தபடி வரைந்து அனுப்பினேன். இவை மிகவும் விரைவில் வரையப்பட்டன ஆகலால் மிகவும் மெதுவில் பார்க்கவேண்டும்.

சிதம்பரம் இராமலிங்கம்.

மற்றைச் சங்கதிகளைப் பின்னிட்டு தெரிவிக்கிறேன். அன்றி, இதில் குறிக்கின்றவைகளை இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக. அவை—

நடராஜ நிபுணம் - நடராஜ விசித்திரம் - நடராஜ மதுரம் - நடராஜ அலங்காரம் - நடராஜ ஞான நாடகம் - நடராஜ ஆனந்த நாடகம் - சிதம்பர உபதேசம் - சிற்றம்பல நடனம் - பொன்னம்பல நடனம் - பொது நடனம் - தத்துவ நடனம் - ஆநந்த நடனம் - அதீத நிலை - அருள் விளக்கம் - மெய்ப் பொருள் விளக்கம்-மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்-சன்மார்க்க விளக்கம்-சாதன விளக்கம்-கலாந்த விளக்கம் - யோகாந்த விளக்கம்-நாதாந்தவிளக்கம்-போதாந்த விளக்கம்-வேதாந்த விளக்கம்-சித்தாந்த விளக்கம்-அண்ட விளக்கம் - பிண்ட விளக்கம்-பிரகிருதி விருத்தி - தத்துவ விருத்தி - சுத்த சிவராசியம்-பரசிவராசியம்-மந்திரக் கொத்து-மகாவாக்கிய வகை-பொது வேதம்-குடும்பகோஷம்-இயல்வகை-அளவை வகை - ஞாய வகை - இலக்கண விருத்தி-தர்க்க விருத்தி-தென்மொழி விளக்கம்-வடமொழி விளக்கம் - உலகியல் விளக்கம் - கலைமரபு.

இந்த தபால் வந்தவுடன் சேர்ந்த செய்தி தெரிவிக்கவேண்டும். 46

---

திருமுகம் ரு௫.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயை முதலிய சுபகுணங்களிற் சிறந்த உண்மை யன்பராகிய தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன் மேல் உண்டாகவென்று திருவருளை சிந்திக்கின் றேன். தங்கள் சுப சரித விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். மற்றசங்கதிகளை எனக்கு சாவகாசம் நேரிட்டபோது எழுதித தெரிவிக்கின் றேன். தற்காலம் வேண்டுவதை இதனடியில் எழுதுகிறேன். அதாவது பொன்னுரைக்கின்ற உரை கல் ஒன்று வெள்ளியுரைக்கின்ற உரை கல் ஒன்று இவைகளையும் இவைகளுக்கு அடுத்த தராசு முதலிய கருவிகள் வைக்கின்ற பை ஒன்று இம் மூன்றும் வாங்கி பங்கியி லனுப்பவேண்டும். சுமார் ரு பலம் அ பலம் நிறுக்கத்தக்க தராசு நேரிட்டா லும் அதனுடன் அனுப்பவேண்டும்.

தேகத்தை பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு சிவசிந்தையும் ஜீவகாருண்ணியமும் மாறாமல் சாக்

46 இஃது 'ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை' ஆளுடைய 'அரசுகள் அருண்மாலை' 'ஆளுடைய அடிகள் அருண்மாலை' என்னும் நால்வர் ஸ்தோத்திரங்களை கோரியவண்ணம் அனுப் பியபோது அவற்றின் தொடர்பாக எழுதி அனுப்பிய திரு முகக் குறிப்பு. இதன்கண் மேல் விலாசம் முதலியவை இல்லை எனினும் இதுவும் ஸ்ரீ இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழு திய தென்று கருதி இவ்விடத்தில் சேர்த்திருக்கிறது.

கிரதையோடு இருப்பீர்களாக. இதை சமரசவேத சன்மார்க்க சங்கத்தவர் அல்லாதவர்களுக்கு வெளிப்பட வாசிக்கப்படாது. வேணும் சிரஞ்சீவி சிரஞ்சீவி.

விபவஹுல இங்ஙனம்

சித்திரைமீ உகஉ சிதம்பரம் இராமலிங்கம்.

இ ஃது

சென்னப்பட்டணம் ஏழு கிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் கீழண்டை வாடை கெ. ௩அ - வது கதவிலக்கமுள்ள வீட்டில் இறுக்கும் மகா-ா-ஸ்ரீ இரத்தின முதலியாரவர்களுக்கு. 47

---

திருமுகம் ௩௬.

உ

சிவமயம்

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங் களாலுஞ் சிறந்த தங்கட்கு திருவருள் வலத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேலுண்டாக. தங்கள் சுபசரித விபவங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். தாங் கள் அனுப்புவித்த பங்கியில் தாங்கள் கடிதத்தில் குறித்தபடி இருக்கக்கண்டு களிப்பொடு பெற்றுக் கொண்டேன். தாங்கள் அனுப்புவித்த பங்கிவந்த

---

47 Half Anna Postage (Stamp) | Chiddumbrum 1-5-1868 | Cuddalore May 2 1868 | G. P. O. Madras May 3 1868

தினத்திற்றானே எனக்கு ஊர்ப்புறங்களிற் போக அவசியமான பிரயாண நேரிட்டபடியால் உடனே பங்கிவந்த செய்தியை தங்களுக்குத் தெரியப்படுத்துவதற்குக் கூடாமையாயிற்று. இந்தக் கடிதமும் கொள்ளடத்தின் வடகரையில் திருநாவலூரிலிருந்து எழுதினேன். என்னுடன் சுமார் ௨௰ பெயர்கள் வந்திருக்கின்றார்கள். மற்றவர்கள் சாலையிலிருக்கின்றார்கள். நான் சாலைக்கு வந்தவுடன் மற்ற சங்கதிகளைத் தபாலில் தெரிவிக்கிறேன். தாங்கள் சாக்கிரதையோடு தேகத்தைப் பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு சிவசிந்தையோடிருக்க வேண்டும். தங்களுக்கும் நமக்கும் அன்பராகிய செல்வராய முதலியார் அவர்களுக்கும் இங்ஙனம் தெரிவிக்கவேண்டும். வாழ்க வாழ்க வாழ்க. நான் சுமார் பத்து தினததில் தருமச்சாலைக்கு வந்து சேர்வேன்.

விபவ ௵ — சிதம்பரம்
வையாசி ௴ ௰௫ உ — இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமி பிள்ளை வீதியில் 38-வது கதவு இலக்கமுள்ள வீட்டில் மஹாராஜராஜஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு. 48

| | | | |
|---|---|---|---|
| 48 Half Anna Postage (Stamp) | Chiddumbrum 27 May 1868 | Tindivanam 28 May 1868 | G. P. O. Madras 29 May 1868 2nd Delivery |

திருமுகம் ௩௭.

உ

என் பிரியமுள்ள ரத்தன முதலியார் அவர்களு க்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகல சம் பத்தும் மேன்மேல் உண்டாவனவாக.

தாங்கள் எழுதிய கடிதத்தைக் கண்ணுற் றறிந் தேன். சடமும் துக்கமும் அநித்தியமு மாகிய உலகபோகத்தை விரும்புகின்ற மற்றவர்களைப் போல மயங்குதல் வேண்டாம். தங்கள் கருத்தின் படி நமது உயிர்த்துணைவனாகிய நடராஜப் பெரு மான் திருவருளால் அதிசீக்கிரத்தில் கைகூடு மென்று நம்பியிருங்கள். நான் எப்போது கடிதத் தால் தெரிவிக்கிறேனோ அப்போது யாதொரு தடையுஞ் செய்யாமல் அக்கடிதத்திற் குறித்த வண்ணம் என்னிடம் வந்து சேருவதற்கு மன முள்ளவர்களாக விருங்கள். தேகத்தை சாக்கிரதை யாக பாராட்டி வாருங்கள். மற்ற சங்கதிகளை பின் தெரிவிக்கிறேன். இதனுள் வைத்த கடிதத்தை செல்லப்ப முதலியார்க்கு சேர்ப்பியுங்கள். தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் அஞ்சவேண்டாம்.

ஆவணிமீ
௧௨

இங்ஙனம்49
சிதம்பரம்
இராமலிங்கம்.

இ ் து
சென்னப்பட்டணம் ராயல் ஒட்டல் ம-ா-ா-

49 இப்படி எழுதிக் கையெழுத்திட் டிருக்கக்கூடிய இடம் வழி பாட்டிற்காகக் கத்தரித் தெடுக்கப்பட் டிருக்கிறது.

ஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்று வீதிக்கு சமீபம் ம-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு சேர்ப்பிக்க வேண்டும். 50

---

## திருமுகக் குறிப்புகள் 51

### (1) பற்ற வேண்டியவை

நற்குணங்களிற் சிறந்து சிவாநுபவ விருப்பத்தில் சித்தத்தை வைத்து நமது கண்மணிபோல் விளங்கிய . . . ஆக.

உய்வ தாமிது நங்குரு வாணையொன் றுரைப்பேன்
சைவ மாதிசித் தாந்தத்து மறைமுடித் தலத்தும்
நைவ தின்றியாங் கதுவது வாயது நமது
தெய்வ மாகிய சிவபரம் பொருளெனத் தெளிவீர்.

. . . . . . அருட்பெருஞ் சோதி.

இங்ஙனம் சிவபரம் பொருளை அநுபவித்தற்கு முக்கியம் ஜீவகாருண்யம் பாசவைராகம் சிவபக்தி. இவை கிடைத்தற்கு முதற் கருவி சாதுக்கள் சார்பு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்புவேண்

---

50 Half Anna Postage (Stamp) (Seal name indistinct) ...-8-1869

51 இக் குறிப்புகள் ஓர் அன்பரால் ஸ்ரீ இரத்தின முதலியாருக்குச் சுவாமிகள் எழுதிய திருமுகங்களினின்றும் தமக்கு வேண்டியவை என்று கொண்டவற்றை மாத்திரம் எடுத்துக் குறித்திருப்பவை யாகும். அவற்றில் முன் போந்த கள திருமுகங்களில் காணுதவற்றை மட்டும் இங்கு இத்தலைப் பின்கீழ் சேர்த்திருக்கிறது.

டும். நல்லது . . . சாதுக்கள் சார்பு தற்காலத்திற் கிடைப்பினும் கிடையாவிடினும், நம்மை யெழுபிறப் பென்னும் பெருங்கடலைக் கடப்பித்து பேரின்ப மென்னுங் கரையிலேற்றும் சைவப்பதியில் தெய் வப்புணையாக வாய்த்த திருமந்திரமாகிய பஞ்சாக் கரத்தை இடைவிடாது சிந்தித்துக் கொண்டும் சிவ பிரான் திருவடிகளை பாவித்துக்கொண்டும் வருவது முக்கியத்தினு முக்கியம். ஆகலில் நாம் அவசியம் பற்றவேண்டிய காரியம் (இவை.) மற்றவை யன்று.

## (2) நமது நேயம்

தேக முதலிய கருவிகளைச் செவ்வையாக நிறுத்தி . . . பஞ்சாக்ஷரியும் திருவடியும் ஒன்றே நமது நேயம்.

## (3) தியானமயம்

தியான மயமாலுல் பொசிப்பு மாறும்.

## (4) இறைவனது எண்ணம்

கல்வி கேள்விகளாற் சிறந்து மெய்யுணர்வோடு விளங்கிய . . . தாக.

. . . என் எண்ணமொன்று இறைவன் எண்ண மொன்றுனுல் அறிவறிந்த உமக்கு இவ்விஷயத்தில் இன்னும் விரிக்க வேண்டுவதென்ன. இருப்பது என் எண்ணம். கருத்தன் எண்ணம் எவ்வண் ணமோ தெரிந்ததில்லை. தாம் தேகமுதலிய கருவி களை இயற்பட நடத்தல் வேண்டும். சிவத்தியா னத்தோடு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நான் அவசியம் திருவருளை முன்னிட்டு சில காலத் தில் அங்ஙனம் வருவேன் . . . துணிவு . . . திண் ணம்.

### (5) தேகபக்துவமும் சிவத்தியானமும்

என் கண்மணி போன்று என்னுள்ளிருந்த தமக்கு . . . உண்டாவதாகவும். தேகத்தைப் பக்குவமாக வைத்துக்கொண்டு சிவத்தியானஞ் செய்து கொண்டுவர வேண்டியது.

### (6) வாழ்த்து

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலும் சிறந்து நமது நற்றுணையாய் விளங்கிய தங்கட்கு குருகடாக்ஷத்தால் . . . தாக.

### (7) திருவடித்துணை

சற்குண சிரோமணியாகிய நமது கண்மணி போன்று விளங்கிய . . . சிவக்கியானமும் . . . வனவாக.

. . . விடுத்த லிகிதம் அங்ஙனம் வரப் பெற்றதும் பெறுததும் புலப்பட்டே மின்று. புலப்படுதற்கு அவாவுகின்றும். தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபெருமான் திருவடித் துணையன்றி வேறு துணையின்மையின் அவற்றை யிடைவிடாது நினைக.

### (8) நன்னெறி

செல்லும் போது செலுத்துவேன் சிந்தையை
வெல்லும் போது விடுவேன் வெகுளியை.

### (9) அகப்புற மருந்து

இருமலுக்கு முசுமுசுக்கை சமூலங் கொண்டு வந்து பசும்பாலில் ஊறவைத்து உலர்த்தி யிடித்துச் சூரணமாக வைத்துக் கொண்டு கியாழமாக்கிப் பாலொடு கொள்க. ஷெ சூரணத்தில் மிளகு சர்க்கரை சிறுக சமன் சேர்த்தும் கொள்க. இவ்வாறு

கரிசாலையுங் கொள்க. பின்பு பனையோலை சுட்ட சாம்பலை பால்விட்டு அரைத்துப் புடஞ்செய்து நெய் சர்க்கரை வெண்ணெய் தேனிலுங் கொள்க. இதுபோல் ஷை பூ காய்ந்ததை பஸ்பஞ் செய்து கொள்ளத் தீரும். தாங்கள் 'சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒருநாளு மில்லை' என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## (10) திடதேகமும் தியானமும்

தேகதிட முண்டாகும்படி உபசரித்துக்கொண்டு ஜாக்கிரதையோடு தியானித்துக்கொண் டிருக்க.

## (11) முத்திநிலையும் தேகசாதனமும்

அநித்திய மென்பது அரிபிரமாதிகளுக்கு முள்ளது. முத்தியடையும் வரையில் தேகம் வேண்டும்.

தேகமெலிவு ஈளை சுக்கிலக்கெடுதி—இதற்கு பொன்னாங்கண்ணி ஒரு பங்கு கரிசலாங்கண்ணி முக்கால்பங்கு இவை ஒருமுறை வேக வைத்து தண்ணீர் வடித்து, பின்பு வேக வைக்கும்போது மிளகு பொடி போட்டு நெய் விட்டு சீரகத்தால் தாளித்துப் புரட்டிச் சாப்பிடவும்.

நீர்க்கோவை வாதபித்தஆபாசக் கெடுதி மலபந்தம் சூலை—இதற்கு சுக்கு பலம் ௧௨-க்கு சுண்ணாம்பில் ௪ பலம் கவசித்து, மஞ்சளில் ௪ பலம் கவசித்து, எருமைச்சாணத்தில் ௪ பலம் கவசித்து, கவசங்கருக சுட்டு எடுத்து சீவி வைத்துக்கொண்டு, மூன்று தினுசிலும் ௩ விராகனிடை எடுத்து நசுக்கி அரைப்படி சலத்தில் போட்டுக் காய்ச்சி வீசம்படியாகச் சுண்டின பின்பு, பனங்கற்கண்டு நெய் இவைகளைக் கலந்து இளஞ்சூடாக சாப்பிட்டு வரவேண்டும்.

அன்றி தேகவலிவு சரீரத்திடம்—இதற்கு கெட்டி மிளகு பலம் ௨௰—இதைப் பேயன் வாழைக் கிழங்கு சாற்றில் ௩ நாள், இளநீரில் ௩ நாள், கரிசாலைச்சாற்றில் ௩ நாள், பொன்னாங் கண்ணிச் சாற்றில் ௩ நாள், பசுங் கோமியத்தில் ௩ நாள, பசும்பாலில் ௩ நாள் தனித்தனியாக இரவில் ஊறவைத்து, பகலில் நிழலில் காயவைத்து, தேய்த்துப்புடைத்து, முன் போலவே எல்லாவற்றிலும் நனைத்து உலர்த்தி தேய்த்து புடைத்து எடுத்து வைத்துக்கொண்டு, சுமார் ௫ மிளகு அவ்வளவு கல்கண்டும் சேர்த்து சாப்பிட்டு வரவும். கல்கண்டு இல்லாமலும் கொள்ளலாம். சூடு கொண்டால் அறுகம் வேர் கஷாயத்தில் பசுமவெண்ணெய் சேர்த்து சாப்பிடலாம். இவ்விதம் சிலதில் ஊறவைத்து கடுக்காயும் கொள்ளலாம்.

1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய திருமுகங்கள் முற்றிற்று. 52

---

52 இதனடியிற் கண்ட பாசுரமுள்ள திருமுகமாவது அதன் பிரதியாவது இதுகாறும் கிடைக்கவில்லை :—

மெயவிளக்கே விளக்கல்லால் வேறுவிளக்
கில்லையென்றார் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கிவழி
இன்றேனோ புதுமை யன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னநகர்
நண்பர்களே செப்பக் கேளீர்
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கு
மெரிநததுசந நிதியின் முன்னே.

## 2. புதுவை வேலு முதலியார்க்கு எழுதிய திருமுகங்கள்

### திருமுகம் க.

உ

சிவமயம்

*கல்வி கேள்விகளாற் சிறந்து சிவபக்தி ஜீவகாருண்யஞ் சாந்தம் அன்பு முதலிய நற்குணங்களைப் பெற்ற நண்பர்க்கு அனந்தமுறை வந்தனம் வந்தனம் வந்தனம்.*

*தங்கள் சுபசரித்திர விபவங்களைக் கேட்க மிகவும் விருப்பமுள்ளவனாக விருக்கிறேன்.*

*தைமீ ௨ ௰௨௳ தபால் மார்க்கமாகத் தாங்கள் வரவிடுத்த கடிதம் வரப்பெற்று வாசித்தறிந்து கொண்டேன். அதற்குமுன் மேற்படி தைமீ த்தில் தங்களுக்கு நான் எழுதியனுப்புவித்த கடிதம் தங்களிடம் வந்து சேர்ந்ததில்லை போலத் தோன்றுகின்றது. அதை மன்னிக்கவேண்டும். 'நல்லாரெனத் தானனி விரும்பிக் கொண்டாரை அல்லாரெனினு மடக்கிக்கொளல் வேண்டும்' என்றபடி ஈ- ரத்ன முதலியாரைத்[53] தாங்கள் அடக்கிக்கொண்டது பெரிய காரியம். அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் வாக்கினால் சமீபித்தும் மனத்தினால் நெடுந்தூரமாகியும் இருக்கவேண்டும். ஈ- மாப்பிள்ளை முதலியார் முதலானவரிடங்களிலும் இப்படியே இருக்க வேண்டுமென்று நான் சொல்ல வேண்டுவதென்ன, தங்களுக்குத் தெரிந்ததுதானே.*

*ஐயா! தற்காலத்தில் தங்கள்மனத்தில் நேரிட்ட சஞ்சலங்களை நிவர்த்திசெய்து இனியொரு காலங்*

53 இவர் ஸ்ரீ இறுக்கம் இரததின முதலியார் அல்லா என்பது தெளிவு.

களிலும் வாராத வண்ணம் பாதுகாத்து சதா சவுக்கியத்தைப்பெற்று சந்தோஷமடைய அனுக்கிரக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். தாங்களும் இரவும் பகலும் நமது ஆண்டவனை இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டு சாக்கிரதையோடு இருக்கவேண்டுமென்று தங்களையும் பிரார்த்திக்கிறேன். நம்மைப்பெற்ற தாயைப் பார்க்கிலும் அனந்தங் கோடி பங்கு நம்மிடத்தில் தயவுள்ளவன் நமது ஆண்டவன். ஆகலால் நமக்கு ஒரு காலத்திலும் குறைவு நேரிடாது. இது சத்தியம். ஆனால் நாம் நம்பிக்கை தவறாது இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் நான் விரித்துத் தங்களுக்குச் சொல்ல வேண்டுவதென்ன. என் போன்றவர்களைத்தனை பேருக்கோ தாங்கள் சொல்ல வல்லவர்களாக விருக்கின்றீர்கள். தங்களிடத்தில் நான் என்ன காரியம் சொல்லி யிருந்தேனோ அந்தக் காரியம் தங்கள் மனமட்டில் நிற்குமல்லவா. ஆதலால் அந்தக் காரியத்தைக் குறித்தே தற்காலம் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நமது ஆண்டவன் அனுக்கிரஹத்தால் அது முடியுங்காலத்தை இன்னுஞ் சிலநாளில் தெரிந்துகொள்ளலாம். தாங்கள் இப்போது இவ்விடம் விஜயஞ் செய்ய எந்தவிதத்திலும் எண்ணவேண்டுவதில்லை. நான் வந்து விடுகிறேன். தாங்கள் வரவுக்குத் தக்க செலவு செய்துக் கொண்டிருக்கவேண்டும். பின்பு இஷ்டப்படி யெல்லாஞ் செய்ய நமது ஆண்டவன் அனுக்கிரகிப்பான். இதற்குச் சந்தேகம்இராது. இது உண்மை. இந்த உண்மை தங்களுக்குத் தான் தெரியும். ஆதலால் தங்கள் மட்டில் இது தெரிவித்தேன்.

ஐயா! நானோ புத்தி தெரிந்த நாள் தொடங்கி இதுபரியந்தமும் இந்தப் பிண வுடம்பும் இதற்குக் கொடுக்கின்ற பிண்ட துண்டங்களும் பெருஞ்சுமையாக இருக்கின்றதே! ஐயோ! இது என்றைக்குத் தொலையும் (என்று) எண்ணி எண்ணி இளைத்துத் துன்பப் படுகின்றவனாக இருக்கிறேன். இப்படிப் பட்ட இந்த நாய்க்குப் பணம் என்ன செய்ய! ஐயா! என்னைக் குறித்துத் தாங்கள் பண விஷயத்தில் பிரயாசமெடுத்துக் கொள்ளவேண்டாம். தாங்கள் வேறு விதத்திலும் செலவுக்கு இடம் பார்க்க வேண்டாம். தாங்கள் மார்கழிமீ ம-ா-ா-ஸ்ரீ முதலியார் நற்குணமணியாகிய சீனுவாச முதலியார்க்கு எழுதிய கடிதத்தால் அவர்கள் என்னைக் கேட்க நான் மறுக்க, மறித்தும் தங்கள் கடிதம் வர, இதனால் தங்கள் மனத்திற்கு வருத்தமுண்டா மென்று மேற்படி முதலியார் அவர்களிடத்தில் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டேன். மற்றவை அவாளிடத்திற்றானே யிருக்கிறது. இதனைத் தாங்கள் அறியவேண்டும். ா-ா-ஸ்ரீ சீனுவாச முதலியார் மிகவு நல்லவர்கள், சிநேக பாத்திரர்கள், நல்ல புத்திமான்.

தங்கள் மட்டில் எழுதிய இந்தக் கடிதம் தங்கள் மட்டில் தானே இருக்க கிர்பை செய்யவேண்டும். மற்ற சங்கதிகளை பின்பு தெரிவிக்கிறேன். சரணம்.

மாசிமீ ௫௨

இங்ஙனம்[54]
சிதம்பரம்
இராமலிங்கம்.

54 இவ்வண்ணம் எழுதிக் கையெழுத்திட்டிருக்கக்கூடிய இடம் வழிபாட்டிற்காகக் கத்தரித்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இஃது
சென்னப்பட்டணம் ராயல் ஹோட்டல்
மஹாராஜராஜஸ்ரீ முதலியாரவர்கள் பு. வேலு
முதலியார் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு
வருவது. சரூர். சரூர். 55

திருமுகம் உ.

உ

சிவமயம்

அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்களைப் பூஷணமாக மேம்பாட்டிற் பூண்டு என் மனத்தி லிடைவிடாது கண்மணி போன்று இருந்த தங் கட்கு விண்ணப்பம்.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ளவனாக விருக்கின்றேன். சித் திரைமீ உ௰௬வ தாங்கள் அனுப்பிய கடிதம் வையாசிமீ ௫௨வ என்னிடத்தில் வரப்பெற்றேன். நான் கனவினும தங்களை மறக்கின்றவனல்ல. மறந்தவனுமல்ல. ஆனால் கால வேற்றுமையாலே நான் மறந்தவனாகத் தங்களுக்குத் தோற்றுகின் றது. அவ்வாறு எண்ணவேண்டாம். இது சத்தி யம்.

நான் இந்த விசை பிரயாணப்பட்டு வருவது அவசியமானது என்று நம்பிக்கையோடு சொல்லு

---

55 Half Anna (Local S. A. Dt. Porto Madras
Postage seal 15-2-1859 Novo 19 Feb.
(Stamp) indistinct) Chiddambrum 17-2-1859 1859
" மாசிமீ ... ஆன்சா பண்ணேன்—19th Feb. 59 "
என்று ஸ்ரீ வேலு முதலியார் கையெழுத்தி லிருக்கிறது.

வேன். ஆயினும் சில தினம் ஏறும் அல்லது குறையும். அவ்வளவே அன்றி வருவது மாத்திரம் உண்மை. ஆகலில் தாங்கள் வரவேண்டுவதில்லை. அவசியம் நான் வருவேன். வருவேன் வருவேன். ஆனல் நடராஜப் பெருமான் திருவுளம் அறியேன். எவ்விதத்தினும் வருவதற்கு மாத்திரம் சந்தேகமில்லை. தங்கள் ஞாபகம் எக்காலத்திலும் என் மனத்தைவிட்டு நீங்காது. விரித்து எழுதுவதற்கு சமய நேரிடாதபடியால் இந்த மட்டில் நிறுத்தினேன். மன்னிக்கவேண்டும். அனேக வந்தனம்.

வைகாசிமீ இங்ஙனம்

௰கஉ சி. இராமலிங்கம்.

இ௦௦து

சென்னப்பட்டணம் ராயல் ஓட்டல் மஹாராஜ
ராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியாரவர்கள்
திவ்ய சமுகத்திற்கு.[56]

---

**திருமுகம் ௩.**

அன்பு அறிவு கல்வி கேள்வி முதலியவற்றிற் சிறந்து சிவநேயத்தில் நிறைந்து விளங்கிய தங்கட்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றனல்லது வேறொன்றும் விரும்பினேனில்லை. தாங்கள் சுமார் இருபது தினத்திற்கு முன் எழுதி தபாலில் அனுப்பிய கடிதம் கூடலூரில் வந்து சேரப்பெற்று அதிலுள்ள சங்கதிகளையெல்லாம் அறிந்து கொண்டேன். நான் ஐப்பசிமீ ௰சஉ கூடலூரைவிட்டுப் புறப்பட்டு அவ

---

56 "Received on 6-6-62" என்று ஸ்ரீ வேலு முதலியார் கை எழுத்திலிருக்கிறது.

சியமான ஒருகாரியம்பற்றி கருங்குழிக்குவந்தேன். இனி தங்கட்கு முன் குறித்தபடி வட மேற்கே ஒரு ஊர்க்கு வேறொரு காரியத்தின் பொருட்டு சுமார் உ0 தினத்திற்குள் பிரயாணம் செல்வது உண்மை. அங்கிருந்து புறப்பட்டு சென்னபட்டணம் வருவது நிச்சயம். ஆனால் நிறைய மூன்று மாசஞ் செல்லும்போல் தோற்றுகின்றது. தாங்கள் என்மேல் தயவுசெய்து அது பரியந்தம் சகித்திருங்கள். ஈ-ஈ நாயக்கரவர்களுக்கும இவ்வாறே தெரியப்படுத்துங்கள். இது விஷயத்தில் செலவுக்கு ஒன்றும் வேண்டுவதில்லை. வேண்டியிருந்தால் வேண்டியபோது தெரிவிக்கிறேன். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையொடு வைத்துக் கொண்டும் சிவபஞ்சாக்ஷரியையும் சிவபெருமான் திருவடிகளையும் இடைவிடாது சிந்தித்து தியானித்து வர வேண்டுமென்பது என் பிரார்த்தனை. தங்களை ஒரு கணப் போதாயினும் மறந்தவனல்ல. தாங்கள் கூடிய மட்டில் சர்வ ஜாக்கிரதையோடும் இப்போது இருக்கிறபடியே யிருங்கள். இன்னுஞ் சில காலத்துள் விசேஷ சவுக்கியம் நேரிடுமென்று உண்மையாகச் சொல்லுகிறேன்.

வந்தனம் வந்தனம்.

ஐப்பசிமீ — சிதம்பரம்

உகூ — இராமலிங்கம்.

இ௰்து

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மஹா

ராஜராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியா

ரவர்கள் திவ்ய சமுகத்திற்கு.[57]

57 "Received on 21-11-62 P. V." என்று ஸ்ரீ வேலு முதலியார் கை எழுத்திலிருக்கிறது.

திருமுகம் ச.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய சுபகுணங்களிற் சிறந்து நமது கண்மணி போன்றுள்ள நண்பர்க்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

மாசி மாசம் அஉயில் எழுதி தபாலில்விட்ட தங்கள் கடிதம் என்னிடத்து ஷைமீ உ வெயில் வரப்பெற்று அதிலுள்ள சங்கதிகளை அறிந்த நான் துன்பக்கடலில் விழுந்தேன். இன்னும் எழுந்ததில்லை. ஆனால் எழுந்திராம லிருக்கமாட்டேன். தங்களுடம்பிற்கு அபக்குவ மென்று அறிந்த பொழுதே என் மனம் தங்களைப் பார்க்க வேண்டுமென்றும தங்களுக்கு சவுக்கியம் உண்டாகவேண்டுமென்றும் கடவுளைச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. இது மாத்திரமோ, என் கண்கள் தங்களைக் காணவேண்டுமென்று துடிக்கின்ற. என் கால்கள் தாங்களிருக்குந திசையை நோக்கி நடக்கவேண்டுமென்று ஊருகின்ற. இவைகளைத் தற்காலத்தில் ஒரு பெரிய நிர்ப்பந்தந் தடுக்கின்றது. அதை தெரிவிக்கிறேன். நான் போசிக்கின்ற ரெட்டியார் வீட்டில் தறகாலத்தில் எசமானராக விருக்கிற ராமகிருஷ்ண ரெட்டியார் என்பவர்க்கு சுமார் ச மாசந் தொடங்கி உஷ்ண பேதியாகிக் கொண்டிருந்தது. மத்தியில் மத்தியில் நிற்பதும் பேதியாவதுமாக இருந்தது. இப்பொழுது சுமார் இருபது தினமாக வரை கடந்த பேதியாகி எழுந்திருக்க மாட்டாமல்

மலசலம் படுக்கையில்தான் விடும்படியான அவ்வளவு அசத்தியும் மெலிவுமாக இருப்பது. சுமார் எட்டு தினத்திற்கு முன் போய்விட்டதென்று கை விட்டுவிட்டார்கள். பின்பு சிவானுக்கிரகத்தால் அணுமாத்திரம் சௌக்கியம்போல் தோற்றுகின்றது. இப்படிப்பட்ட வேளையில் நான் புறப்பட்டுவந்தால் உலகம் நிந்திக்கும். கடவுளுக்குஞ் சம்மதமிராது. ஆனபடியால் அஞ்சுகிறேன். என்ன செய்வேன். அவர்க்கு உடம்பு சிறிது பக்குவமானால் புறப்பட்டு விடுவேனிற்கமாட்டேன். கடவுள் என்ன நினைத்திருக்கிறாரோ, அதுவுந் தெரிந்ததில்லை. சிவானுக்கிரகத்தால் பக்குவப்படுவதாக விருந்தால் கஉ மாசஞ் செல்லும் சிறிது எழுந்து நடக்கவென்று தோற்றுகிறது. ஆதலால் கொஞ்சம் லகுவானவுடனே பிரயாணப்பட்டு தங்களைப் பார்க்க வருவேன். உண்மை. தாங்கள் கூடியவரையில் சாக்கிரதையாக விருந்து உடம்பை பக்குவஞ்செய்து கொள்ளவேண்டும். நான் இடைவிடாது கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

உ

சிவமயம்

தாங்கள் அஞ்சவேண்டாம். 'சிவாயநமவென்று சிந்தித்திருப்பார்க் கபாய மொருநாளுமில்லை உபாயம் இதுவே மதியா மிதல்லாத வெல்லாம் விதியே மதியாய்விடும்' என்ற அவ்வையார் திருவாக்கு சத்தியம் சத்தியம் சத்தியம். ஆதலால் அதை இடைவிடாது சிந்தித்துக் கொண்டே வாருங்கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம். இதை நம்பவேண்டும். தாங்கள் பயப்படாது இருக்கவேண்டும்.

ம-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்களுக்கு தெரிவிக்கவேண்டியது ஒன்று. என்னெனில் நான் அவசியம் வருகிறேன். அது பரியந்தம் தேக சாக்கிரதை மனே சாக்கிரதை முதலான சாக்கிரதையோடு அஞ்சாமல் இருக்கவேண்டுமென்று தெரிவிக்க வேண்டும். ஸ்ரீ சிதம்பர சாமிகள் ம-ா-ா-ஸ்ரீ ரத்தன முதலியார் முதலானவர்களுக்கும் பார்வதம்மாளுக்கும் என் வந்தனம் குறிப்பிக்கவேண்டும். தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். வந்தனம்.

மாசி மீ — இங்ஙனம்

உ௰௨ — சிதம்பரம்

இராமலிங்கம்.[58]

---

திருமுகம் ௫

உ

சிவமயம்

நற்குணங்களிற் சிறந்த நண்பராகிய தங்கட்கு வந்தனம் வந்தனம். தாங்கள் பங்குனி மீ ௰௮௨ சுக்ரவாரம் காலையில் எழுதிவிட்ட கடிதம் வரக் கண்டு அதிலுள்ள சங்கதிகளை அறிந்து கொண்டேன். இதன் அடியில் எழுதுகின்றவைகளை கவனமாகப் பார்க்கவேண்டும். என்னெனில் நான் பங்குனி மாசக் கடைசியில் வருவதாக முன் குறித்திருந்தது உண்மைதான். ஆனால் நான் ஒருவர் நிமித்தம் ஒப்புக்கொண்ட ஒரு காரியம் இன்னும்

---

58 பிரதி செய்தபோது மேலவிலாசம் குறிக்கத் தவறியிருக்கிறது. Cuddalore 4-3-63 "Received on 12-3-63 P. V.' என்று ஸ்ரீ வேலு முதலியார் கையெழுத்திலிருக்கிறது.

முடிவுபெற இல்லை. அது பங்குனிமீ கடைசியில் முடிந்தாலும் அல்லது சித்திரை மாசத்தில் முடிந்தாலும் முடிந்தவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வருவேன். இது உண்மை. இது நிற்க. எனக்கு நிம்மதி யில்லாமல் தாங்க ளிவ்விடம் வந்தால் தங்களுக்கு எப்படி நிம்மதி வரும். வாராது. ஆதலால் நான் அவ்விடம் வருமளவும் தாங்கள் இவ்விடம் வாராமலிருக்க வேண்டும். இதை அலக்ஷியமாக எண்ண வேண்டாம். எந்த விதத்திலும் நான் அவ்விடம் வரத்தானிருக்கிறேன். வருவேன் வருவேன். அவசரப்பட வேண்டாம். அவசரப்பட்டால் நிம்மதி வாராது. ஆதலால் பொறுத்திருங்கள். எவ்விதத்திலும் என் இஷ்டப்படியே தாங்களிருந்தால் நன்மை. இது உண்மை உண்மை. கடிதம் அகப்படாத குறையால் இந்த மட்டில் எழுதினேன். மன்னிக்கவேண்டும். வந்தனம்.

பங்குனிமீ சி. இராமலிங்கம்.

உ௰அ

ம-ள-ள-ஸ்ரீ முதலியார் வேலு முதலியார் அவர்கள். . .

---

திருமுகம் ௬.

உ

சிவமயம்

அன்பு அறிவு கல்வி கேள்வி முதலியவற்றில் சிறந்த தங்களுக்கு வந்தனம். தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். தங்கள் மனத்திலுள்ள குறிப்பை சிரஞ்சீவி சுந்

தரப் பிள்ளையால் தெரிந்துகொண்டேன். தாங்கள் உலக நடைதெரிந்த விவகாரிகளாதலால் தாங்களே தங்கள் கருத்தின்படி செய்துக்கொள்வதில் யாதொரு விகற்பமும் நேரிடாதென்று நம்புகிறேன்.

நான் அது விஷயத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் தாங்கள் நேரே அவர்களை அழைத்து ஒருமையோடு தங்கள் கருத்தின்படி ஏற்பாடு செய்துக்கொள்வது உத்தமமாகத் தோன்றுகிறது. தங்கள் கருத்தின்படி செய்துக் கொள்வதற்கு நான் தடையானவனல்ல.

ஆகலில் யாவர்க்கும் மனது விகற்பமாகாதபடிக்கும் தயவு வேறுபடாதபடிக்கும் தங்கள் கருத்தின்படி நடத்தலாம். மற்ற சங்கதிகளை தை மாதத்தில் தெரிவிக்கிறேன். வந்தனம்.

மார்கழிமீ இங்ஙனம்

௫௨ சிதம்பரம் இராமலிங்கம்.

தாங்கள் என் விஷயத்தில் மிகவும் சுதந்தரமுடையவர்களாதலால் இப்படி எழுதினேன்.

அன்புள்ள ஐயா

நமது சுந்தரப்பிள்ளை எழுதின பாயிரம் நன்றாயிருக்கின்றது. அதை அச்சிடுவிப்பீர்களாக.59

அன்றி நமது சிதம்பர சாமிகள் பாயிரமும் நன்றாயிருக்கின்றது. அதையும் அப்படி செய்க. வந்தனம்.

## 2. புதுவை வேலு முதலியார்க்கு எழுதிய திருமுகங்கள் முற்றிற்று.

---

59 சுவாமிகளிடம் மன்றாடி இவ்வண்ணம் உத்திரவு பெறுவதற்காகவே ஸ்ரீ சுந்தரப்பிள்ளை அவர்கள் சென்னையிலிருந்து வந்தார் எனத் தெரிகிறது.

## 3. மற்றைய அன்பர்களுக்கு எழுதிய திருமுகங்கள்

### திருமுகம் க.

உ

சுபம் உண்டாக. சுபம்.

அன்பு அறிவு ஒழுக்கம் கருணை முதலிய நன்மைகளாற் சிறந்து சிவத்தைப் பொருளென் றுணர்ந்து சன்மார்க்கத்தில் விளங்குகின்ற தங்கட்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடிகேட்க விருப்பமுடையவனாக விருக்கிறேன்.

அன்புள்ள ஐயா! சுமார் இருபத்தைந்து தினத்திற்கு முன் இவ்விடத்திலிருந்து சிவஞான விருப்பினராகிய ராமலிங்க மூர்த்திகளும் சண்முகப் பிள்ளை என்பவரும் தங்களிடம் போய் வருவதாகக் குறித்து வந்தார்கள். அவர்கள் அவ்விடம் வந்திருப்பதும் வேறிடம் போயிருப்பதுந் தெரியவில்லை. தங்களிடத்தில் அவர்கள் இருந்தால் தற்காலம் அவ்விடத்தில் மழையில்லாமையால் மிகவும் நிர்ப்பந்தமாக விருப்பதாய்க் கேள்விப் படுகிறேன் ஆதலால் தாங்கள் அவர்களை இவ்விடம் வரும்படி செய்யவேண்டும். அவர்கள் தங்களிடத்தில் இல்லாமல் வேறிடத்தி லிருந்தால் அவ்விடம் இவ்விடமென்று எனக்குத் தெரிவிக்கவேண்டும். தாங்களும் சிவத்தியான சகிதர்களாய் தேக விஷயத்திலு மற்றைக் குடும்ப விஷயத்திலும் சர்வ சாக்கிரதையோடு இருக்கவேண்டும். நற்குணத்திலும் சிவபத்தியிலும் சிறந்த தங்கள் தம்பியார்க்கும் தங்கள் புத்திர சிகாமணிக்கும் என் க்ஷேமம் குறிக்கவேண்டும். நான் தற்காலம் கூடலூரிலிருக்கின்றேன்.

வந்தனம். நமது ராமலிங்க மூர்த்திகளுக்கும் வந்தனம்.

இங்ஙனம்

**சிதம்பரம் இராமலிங்கம்.**

அக்ஷய ஹ ஆடி மீ உகூ உ

பதில் உத்தரம் தபால் மார்க்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

இஃது

திருநறுங்குன்றம் மஹாராஜராஜஸ்ரீ நயினார் ராமசாமிநயினாரவர்கள் திவ்வியசமுகத்திற்கு.

---

**திருமுகம் உ.**

சத்குரவே நம:

கல்வி கேள்விகளிற் சிறந்து அருளறி வொழுக்கங்களி னியைந்து விளங்குகின்ற தங்கட்கு அனந்த முறை வந்தனம் வந்தனம். தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ளவனாக விருக்கிறேன். தாங்கள் கொத்தன் வசம் அனுப்புவித்த கடிதமும் நாகவல்லியும் சம்பீர பலங்களும் வரப்பெற்றேம். இவ்விடம் கடிதம் அனுப்புந்தோறும் இந்தப் பிரகாரம் அனுப்புவது பிரயாசம் என்று என் மனம் என்னை வருத்துகின்றது. இது நிற்க. இனி தங்கள் கடிதத்திற்கு உத்தரம் எழுதுகிறேன்.

அதாவது தங்கள் தமயனார் விஷயத்தில் தாங்கள் எத்தன்மை யுடையவர்களாக இருக்கின்றீர்களோ அத்தன்மை நானும் உடையவனா யிருக்கின்றேன்.

சீரகத்தைக் கியாழம்செய்து அந்த கியாழத்தில் சுக்கை ஊற வைத்து சாமம் சென்ற பின்பு எடுத்து உலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு அந்தத் தூள் காசிடை (எடுத்து) அதில் பஸ்பம் அரிசியிடை வைத்து நெய்யில் குழைத்து சாப்பிடவேண்டும். பத்தியம் இச்சாபத்தியம். தலைமுழுக்கு பசுநெய்யில் முழுகவேண்டும். ஆறுதாரத்தில் அறுகதத்தில் சத்தி சிவம் பத்திதழில் இருப்பதாகவே கொள்ள வேண்டும். இரண்டிதழ் ஆசனமாகக்கொள்ளவேண்டும். அன்றியும், பன்னிரண்டிதழில் எட்டிதழ் சத்தியிருப்பு, இரண்டிதழ் சிவத்தினிருப்பு, மற்றையிரண்டிதழ் மேலுங் கீழும் அடையிருப்பு. இது இன்னஞ் சிலநாள் சென்ற பின்பு தங்களுக்கு நன்றாக அனுபவப்படும். கூடலூர்க்கு மனிதனை அனுப்ப அந்த வேஷக்காரன் எவ்விடத்துக்கோ போயிருக்கிறதாக இன்னும் பத்து தினம் சென்ற பின்பு வருவானென்று அவன் பெண்சாதி சொன்னதாகச் சமாச்சாரங் கொண்டுவந்தான். இனி இன்னும் சுமார் ஒரு மாதம் சென்ற பின்பு தங்கள் கருத்தின்படி தெரிவிக்கிறேன். மன்னிக்கவேண்டும் தாங்கள் தங்கள் தேகத்தை பொன்போல சர்வ சாக்கிரதையோடு பாராட்டிக்கொண்டு வரவேண்டும். வந்தனம். மன்னிக்க. வந்தனம். இங்ஙனம்

ஆவணிமீ௳ தங்களிஷ்டன்

௮௳ **சிதம்பரம் இராமலிங்கம்.**

இஃது க்ஷேமம்

மஹா ராஜ ராஜஸ்ரீ பிள்ளை பொன்னுசாமிப் பிள்ளை அவர்கள் திவ்விய சமுகத்திற்கு.

க்ஷேமம்.

திருமுகம் ரு.

உ

சிவமயம்

சத்தியக் கியானனந்த சொரூப சாக்ஷாத்கார சுத்த சிவகுல சிவாசார சிவாநுபவ சிவப் பிரம ஞோத்தமத சிவத்துவ போதக சிகாமணிகளாகிய சுவாமி அவர்கள் பரம கருணாம்பர பத்ம பாதயுகள சந்நிதிக்கு அடிமை பக்தி பூர்வகமாக அனந்த முறை தண்டனிட்டுச் செய்துகொள்ளும் விண்ணப்பம்: சுவாமிகள் கடாக்ஷித்தருளிய நிருபத்தைப் பூசித்து வாசித்து அறிந்தேன். அந்த நிருபத்திற் குறித்தபடி சிவபுண்ணியத் திருவிழாவைத் தரிசிக்கும்படி பிரயாண சித்தனயிருந்தேன். இத் தருணத்தில் இந்தப் பார்வதிபுரத்தில் பிராமணர் இருவர்களுக்கு இராஜாங்க விவகார வழியில் ஒரு பெரிய ஆபத்து நேரிட்டு அவர்களைப் பிடித்துக் கொண்டு போயிருக்கின்றார்கள். அவர்கள் இத்தருணத்தில் சிறிது சகாயம் செய்தால் உயிர் வாழ்வோம் இல்லாவிடில் உயிரிழந்து விடுவோமென்று பரிதபித்து எழுதிய கடிதம் வந்து சேர்ந்தபின் நான் அவ்விடம் வரும் பிரயாணம் ஆலசியப்பட்டது. இங்கு கூடியவரையில் அவர்கள் விஷயத்தில் சகாயம் செய்யவேண்டுவது கருணைக்கு இலக்ஷியமாகலில், என் மனது இவ்விடம் வருவதற்கும் அவ்விடம் போவதற்கும் துணிவுதோற்றுமல் ஊசலாடுகின்றது. இது சிறிது துணிவு பெற்றபின் நான் வருகின்றேன். தற்காலம் அடிமை வந்திருப்பதாகவே சாமிகள் திருவுளங்கொண்டு மேற்குறித்த சிவபுண்ணியத் திருவிழாவைச் சிறப்பாக நடத்து

விக்கவேண்டு மென்றும் சுவாமிகள் திருவடிகளைச் சிந்தித்துப் பிரார்த்திக்கின்றேன். மற்றவைகளை நான சந்நிதியில வந்து விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறேன். அடிமையின்மேல் கருணாநிதியாகிய சாமிகள் திருவுள்ளம் வேறுபடா தென்கிற துணிவுபற்றி இங்ஙனம் விண்ணப்பம் செய்து கொண்டேன். சாஷ்டாங்க தெண்டன்.

விபவ௵ இங்ஙனம்
வைகாசிமீ உ௩௨ சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது
சிதம்பரம் துக்குடி ஆடூரில் சற்குணாகரதயாம்பர சாமிகள் சபாபதி சிவாசாரிய சாமியவர்கள் சுபகுண நடன விபவ சந்நிதிக்குப் பார்வதிபுரத்திலிருந்து வருவது.

---

திருமுகம் ௬.60

௨

உணர்ந்தோராணியல் வகையவின்ன வென்றவற்றிற் பின்மொழி மதிக்கு முன்மொழி மறைக்கு

---

60 இந்த இலக்கணத் திருமுக வரலாறு அடியில் கண்டபடி ஓர் பிரதியில் காணப்படுகிறது:—

"மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்தில் திருவருட்பிரகாச வள்ளலார் ஜக சகாப்தம் உ-ல் நிகழா நின்ற விபவ௵ ஆவணிமீ த்தில் திருக்கழுக்குன்றம் திருச்சிற்றம்பல ஞானிகள் போயிருந்த தருணத்தில்- கடந்த அக்ஷய௵த்தில் கருங்குழி புருஷோத்தம ரெட்டியார் தன் வீட்டிலிருந்து கோபத்தால் மதுரைக்குப் போயிருந்த தருணத்தில் ஷை யாரை யுபசரித்து இவ்விடம் அனுப்பவேண்டு(ெ)மன்று ஷை மடத்து சுவாமிகளுக்கு சி. இராமலிங்கம் பிள்ளை யவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தால் - ஒரு தருணம் நாவலர் மனுஷியர்களி லங்கிருந்த சிலர் திருவருட்பிரகாச வள்ளலார் விசேஷ வித்வானென்று சொல்கிறார்களே

முதலீறு விளங்க முடிப்பதாய பின்மொழி யடை சார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு- பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளை த்து வணக்கஞ் செய்த ககந நீரெழிலென்றும் வான் வழங்கு பண்ணிகாரமென்றும் நாகச்சுட்டு மீனென்றும் வேறு குறிப்பதொன்று

அண்மைச் சுட்டடுதத வேழாவதன் பொருண் மை யும்மையடுத்த பல்லோர்வினைப் பெயர்ப் பொருள் குறிஞ்சியிறைச்சிப் பொருளொன்றனோடு புணர்ப சேய்மைச் சுட்டடுத்த வத்திறததியல் யாது

இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப்பன்மை யாறுவதன் பொருட்டாக்கினோர்க் குய்த்த கற்பிப

யவருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு - என்று சொல்லக்கேட்ட திருச்சிற்றம்பல ஞானியார புகன்றது - அவர்களால் விவகரிக்கும் விவகாரத்திற் சிதறிய இலக்கணத தின் மொழிகளில் கோடியிலொரு கூறிவவுலகி(லிருக்கி)ன்ற தென்று வாதிக்க - அம்மடத்து சுவாமிக எப்படியாகி லந்த சுவாமிகளா விலக்கண விதிப்படி யொரு கடித மனுப்பும் (படி)கேட்டு வருவிக்க வேணுமெனறு கேட்டுக்கொண்ட படி - ஷை ஞானி யிவைகளைக் குறியாமல் சன்னிதானத்துக் கொரு கடித மனுப்பினா - ஷை கடிதத்தினால் இவ்விடத்திப சுகுணங்களையும் அற்புதங்களை யும் இலக்கணவகையாற் றனக் குத் தெரிவிக்க வேண்டுமெனறு பிரார்த்தித்ததால் - அதன பொருட்டெழுதி விடுத்த குசலபத்திரிகை பின் புறங்காண்க.

இலக்கண பத்திரிகை

ச. ஆறுமுக முதலியார் வேலாயுத முதலியா ரிவர்கள் குடி யிருந்த முகப்பிலிருந்து அப்பா அவர்களாற் சில வரியும் மற்றவை ஆக்ஞையின்பேரில் வேலாயுத முதலியாராலும் எழுதியது—"

இக்குறிப்பில்கண்ட "நாவலர் மனுஷியர்களி லவ்கிருந்த சிலா" என்பவர்கள கணக்கிலவதாணி தேவி பட்டினம் முத்துசாமி

லதிகரிப்பின் வருந் தலைமகட் பெயர விரண்டினோ டிரண்டிரண்டேகக் கழிவிலைப் பெயரவு மகார வீற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்ப் பாட்டு வினையெச்சத்தனவாகக் கலம்பகச் செய்யு ளுறுப்பாற் சிறத்தும்

இருவகை முதற்பொரு ளொன்றன் பாகுபாட் டுறுப்பிற் குறித்த வைம்பெரும் பூதத்தோர் விசே டணத் தெதிர்மறை நடுக்குறை யியற்சொற் பெயர வுயிர்ப் பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது சில வினைச் சார்பான் விலங்கு கூடிய வரைவில் வெளியாம்

---

பிள்ளையைத் தலைமையாகக் கொண்ட. சிலர் என்றும், இந்த இலட் கணத் திருமுகத்தைத திருச்சிற்றம்பல ஞானியாா பெற்றபின் மடத்துச் சுவாமிகளை அதைக் கணக்கிலவதானியார்க்குக் காண் பிக்க அவர்க்கு அதன் பொருள் விளங்காமையால் தாம் எழுதும் ஒரு கவிக்குச் சுவாமிகளிடமிருந்து உரை தருவிக்கவேண்டுமென்று வாதித்து இப்பகுதியின் அநுபந்தத்தில் கண்ட "தகர வரி" என் னும் தொடக்கத்தையுடைய வெண்பாவை அமைத்துக் கொடுத் தார் என்றும், அதை ஞானியார் அனுப்பி வேண்டிக் கொண்ட படி சுவாமிகள் அதறகு அவதானியார் கருதிய உரையையும் அவர் கருதப்பெறாத தத்துவ சம்பந்தமான அரிய உரை ஒன்றை யும் வரைந்து விடுத்தனர் என்றும், இவற்றைக் காணப்பெற்ற அவதானியார் அந்த நாள் முதல் அவர் ஆயுள் கால முழுவதும் சுவாமிகள் திருவடிகளுக்கு ஆட்பட்டு வழிபாடுசெய்து வந்தனர் என்றும் ஸ்ரீ ச. மு கந்தசாமிப் பிள்ளை அவர்களின் சுவாமிகளைப் பற்றிய சரித்திரக் குறிப்புகளிலும் வேறு பிரதி ஒன்றில் உள்ள குறிப்பிலும் தகுந்த கேள்வியாலும் தெரிகிறது.

இத்திருமுகம் இலக்கண நுட்பங்கள் அமைந்து பலப்பல சொற்களுக்கும் பொருள்களுக்கும் உள்ள அரிய கருத்தை அறி விப்பதால், தமிழ் இலக்கண வித்துவான்கள் பயன்படுத்திக் கொள்ளுவார்கள் என்று கருதி இப்பதிப்பின் ௩-வது புத்தக மாகிய உரைப் பகுதியில் முன்னரே இது ச. மு. க. பதிப்பில் கண்டபடி சேர்த்திருக்கிறது.

இதனோடிரிருவகைப்பட்டவோர்சார்புதுநிலஞ்
செலவுய்த்தனம் வேண்டுழி வேண்டியாங் குய்க்க
மற்றைய பின்னர் வரைதும்
இற்றே விசும்பிற் கணைச்சலம்

இங்ஙனம்

நங்கோச்சோழன் வீரமணி
சூடியார் திருவாணைப்படிக்கு

---

திருமுகம் ரு.

சுவாமிகளுக்கு வந்தனம்.

தங்கட்குத் தற்காலம் நேரிட்டிருக்கிற ஆபத்தைக் குறித்து அஞ்சவேண்டாம். அஞ்சவேண்டாம். இந்த ஆபத்தால் தேக ஆனி நேரிடாது. கால பேதத்தால் நேரிடினும் நான் தங்களை எவ்விதத்தாலாயினும் திருவருள் வல்லபத்தைக் கொண்டு திரும்பவும் பார்ப்பேன் பேசிக்களிப்பேன். இது சத்தியம் இது சத்தியம். இந்த வார்த்தை யென் வார்த்தையன்று. திருச்சிற்றம்பல முடையார் செல்வப்பிள்ளை வார்த்தை. தேகத்திற்கு ஆனி வருவதாகக் கண்டாலும் அஞ்சவேண்டாம். வந்தால் வரட்டும். திரும்பவும் உடனேயிருந்த விரைவில் என்னைப் பார்த்துப் பேசிக் களிப்பீர்கள். திருவருளாணையிது. சற்றுங் கலங்கவேண்டாம். திருச்சிற்றம்பலம்.[61]

61 இத்திருமுக வரலாறு அடியிற்கண்டபடி ஓர் பிரதியில் காணப்படுகிறது :—"பிரமோதூதஹு தை மாசத்தில் பதுச்சேரி சுவாமிகள் சமாதி திருக்கோயில் புகுமுன்னா சந்நிதானத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டதற்குப் பதில் திருமுகக் குறிப்பு."

# 4. பத்திரிகைகள்

## க. சாலை ஆரம்ப அழைப்பு

(1)

உ

கடவுள் துணை

சாந்த சித்தமுடைய சாமியவர்களுக்கு வந்தனம்.

சிதம்பர தலத்துக்குச் சுமார் இருகாத வழி நடையெல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூரென்றும் பார்வதி புரமென்றும் வழங்கப்படுகின்ற ஊருக்கு வடபுறத்தில் சென்ன நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரிய பாட்டை கஉ௫-வது மயிலில் மஞ்ச குப்பத்திலிருந்து விருத்தாசலம் போகின்ற பாட்டை உ௫-வது மயிலில் பிரபவ௵ வைகாசி௴ ககஉ குருவாரம் உதய காலம் சிங்க லக்கினத்தில் சமரச வேத தருமச் சாலையின் செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலையெடுப்புகளுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன்மேய்ந்த மண்கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகார தரும விருத்தியுந் துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கின்றது.

ஆதலால் அந்தத் தினத்தில் அவ்விடத்தில் அன்பர்களுடன் எழுந்தருளி அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். 62

---

62 ஓர் அன்பரது கையெழுத்துப் பிரதியில் இவ்வளவே காண்கிறது. இது துறவிகளுக்குச் சுவாமிகள் பெயரில் அனுப்பிய சுற்றுக்கடிதத்தின் பிரதி போலும்.

(2)

உ

கடவுள் துணை

அன்புந் தயையுமுடைய ஐயா வந்தனம்.

சிதம்பர தலத்திற்குச் சுமார் இருகாதவழி நடையெல்லையில் கூடலூரைச் சார்ந்த வடலூரென்றும் பார்வதி புரமென்றும் வழங்கப்படுகின்ற ஊருக்கு வடபுறத்தில் சென்ன நகரிலிருந்து கும்பகோணத்திற்குப் போகின்ற பெரியபாட்டை கஉ௫-வது மயிலில் மஞ்ச குப்பத்திலிருந்து விருததாசலம் போகின்ற பாட்டை உ௬-வது மயிலில் பிரபவ௵ வைகாசிமீ ககஉ குருவாரம் உதய காலம் ருஷப லக்கினத்தில் சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டடங்களுக்கு அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுப்புகளுந் தற்காலம் அவ்விடத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட விழன்மேய்ந்த மண்கட்டடச் சாலையில் ஒரு சார் ஆகார தரும விருததியுந துவக்கஞ் செய்யும்படி நிச்சயித்திருக்கின்றது.

ஆகலில் அந்தத் தினத்தில் தாங்கள் தங்கள் மனைவியர் புத்திரர் துணைவர் தநதையர் தாயார் உறவினர் சிநேகர் முதலியவர்களோடும வந்திருந்து அந்தத் தரும விருத்தியை விசேஷ விபவமாக நடத்துவிப்பீர்களென்று நம்புகின்றேம்.

பிரபவ௵
சித்திரைமீ ெசஉ

சமரச வேதத் தருமச்
சாலைத் தலைவராகிய சிதம்
பரம் இராமலிங்க பிள்ளை
யவர்கள்கட்டளைப்படி ஷை

தருமச் சாலையை நடத்து
கின்ற சமரச வேத சன்
மார்க்க சங்கத்தாரில்
ஒருவராகிய[63]
மு. அப்பாசாமி செட்டி

---

## உ. கிளைச் சாலைகள்

சமரச வேத தருமச்சாலையைச் சார்ந்த வைத்திய சாலை, சாஸ்திர சாலை, உபகாரச்சாலை, விருத்தி சாலை, உபாசனாசாலை, யோகசாலை, விவகார சாலை — இவைகளைக் குறித்து சமரச வேத சன்மார்க்க சங்கத்தவர்கள் ஏற்படுத்திக்கொண்ட கையொப்ப ஏற்பாடு. 64

---

## ங. சன்மார்க்க போதினி

. . . . .

. . . . .

ஆபால விருத்தர்கள் வரையில் யாவர்க்கும் பயில்விக்கும் சன்மார்க்க போதினி என்கிற சாஸ்திர பாடசாலை யொன்று நியமிக்கப்படும.

பார்வதிபுரம்
பிரபவஹு ஸ்ரீ உ

---

63 அசசுப் பததிரிகையில் மாதமும் தேதியும் கையொப்பமும் இல்லை. ஓா அன்பாது கை யெழுததுப் பிரதியில் இதில் கண்ட மாத தேதித தகவலும் கையொப்பமும் இருக்கின்றன. ஆனல் அதில் ''ருஷப லக்கினத்தில்'' என்பதற்குப் பதிலாக ''சிங்க லக்கினத்தில்'' என்று இருக்கிறது.

64 இவவளவே 63-வது அடிக் குறிப்பிற் கண்ட அன்பர் கையெழுத்திலுளள அழைப்புப் பத்திரிகைக்குப் பின் பக்கம் எழுதியிருக்கிறது. விஷய ஒறறுமை கருதியும் சுவாமிகளும் கையொப்பக்காரர்களில் ஒருவராக இருப்பார்களென்று அநுமானித்தும் இக் குறிப்பையும் இங்குச் சேர்த்திருக்கிறது.

தமிழ் ஆரியம் இங்கிலீஷ் சன்மார்க்கபோதினி . . . சாலையில் உபய கலாநிதிப் பெரும்புலவர் தொ. வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்களால் . . . 65

---

### ச. சன்மார்க்க விவேக விருத்தி

உ

சற்குரவே நமஃ

சன்மார்க்க விவேக விருத்தி

விளம்பரம்

அறிவுடைய நண்பர்க்கு அன்பொடு வந்தனஞ் செய்து அறிவிக்கை.

நண்பர்களே!

உலகில் வழங்கும் பிறப்புகளுள் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்ட நாமனைவரும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பொருளின் அநுபவங்களைக் காலமுள்ளபோதே அறிந்து அநுபவித்தல் வேண்டும். அங்ஙனமறிந்து அநுபவிப்பதற்குச் சன்மார்க்க விவேக விருத்தியே சாதனமாதலின், அதனை யடைதற்குத் தக்க நன்முயற்சிக் கோர் முன்னிலையாகச் சன்மார்க்க விவேக விருத்தியென்னும் பத்திரிகையொன்று வழங்குவிக்கு நிமித்தம், இதனடியில் தனித்தனி நம்மா லியன்றவளவில் மாதந்தோறும் பொருளுதவி செய்வதாகக் கையொப்பமிட்டு மேற்குறித்த வண்ணம் நமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வழங்குவிப்போமாக.

இங்ஙனம்

**சன்மார்க்க சங்கத்தார்.**

---

65 இவ்வளவே முன்னுள்ள ஏடு கிழிபட்டும் இடையிலும் பின்னுமுள்ளவை எழுதப்படாமலும் ஓர் அன்பர் கையெழுத்தில் இருக்கிறது.

| எண் | ஊர் பேர் | கையொப்பம் | தொகை ரூ. | அ | பை. |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ | சிதம்பரம் | இராமலிங்கம் | ௧ | 0 | 0 |
| ௨ | கூடலூர் | வெங்கடேசய்யர் | ௧ | 0 | 0 |
| ௩ | கூடலூர் | மு. அப்பாசாமிசெட்டி | ௧ | 0 | 0 |
| ௪ | கூடலூர் | துரைசாமி நாயகன் | ௧ | 0 | 0 |
| ௫ | ஷை யூர் | சின்னசாமிப் பிள்ளை | 0 | ௮ | 0 |
| ௬ | ஷை யூர் | கா. அய்யாசாமி | 0 | ௮ | 0 |
| ௭ | கூடலூர் | தேவநாத பிள்ளை | 0 | ௪ | 0 |
| ௮ | கூடலூர் | பழு. சின்னதம்பி | 0 | ௨ | 0 |
| ௯ | ஷை | ம. வீராசாமி | 0 | ௨ | 0 |
| ௧0 | ஷை | கா இரத்தின ஸ்ரீ | 0 | ௨ | 0 |
| ௧௧ | ஷை | கா. மு. தேவநாயகம் | 0 | ௮ | 0 |
| ௧௨ | ஷை | வி. இராஜா | 0 | 4 | 0 |
| ௧௩ | ஷை | இராமையர் | 0 | ௨ | 0 |
| ௧௪ | ஷை | விசுவலிங்க முதலியார் | 0 | ௨ | 0 |
| ௧௫ | புதுவை | குமரப்ப சாதாசிவ செட்டி | 0 | ௮ | 0 |
| ௧௬ | கூடலூர் | விஜயரகுநாதன் | 0 | ௨ | 0 |
| ௧௭ | ஷை | அப்பாவுஞானியார் | 0 | ௨ | 0 |
| ௧௮ | புதுவை | மு. அணு-சுப்பராய ஸ்ரீ | 0 | ௨ | 0 |
| ௧௯ | புதுவை | F. குப்புசுவாமி நாயடு | 0 | ௨ | 0 |
| ௨0 | கூடலூர் | ந. சிவசிதம்பர செட்டி | 0 | ௪ | 0 |
| ௨௧ | புதுவை | கி. துரசாமி | 0 | ௮ | 0 |
| ௨௨ | திருப்பாதிருப் புலியூர் | அ. க. பரமானந்தன | 0 | ௯ | 0 |
| ௨௩ | திருமயிலை | முருகேச முதலியார் | 0 | ௨ | 0 |
| ௨௪ | திருக்கோவலூர் | சுப்பிரமணியன் | 0 | ௨ | 0 |
| 25 | அரசூர் | இராஜகோபாலு | 0 | ௮ | 0 |
| 26 | ஆலப்பாக்கம் | சு. நாயிறுரெட்டி | 0 | ௮ | 0 |
| 27 | கூடலூர் | வரதராசன் | ௧ | 0 | 0 |
| 28 | ஷை புதுப்பாளையம் சிரஸ்ததார் | ரூமச்சந்திர ஸ்ரீ | 0 | ௮ | 0 |

| எண் | ஊர் பேர் | கையொப்பம் | தொகை ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 29 | டிஷி நாஜர் | வா.........ரெட்டி | 0 அ 0 |
| 30 | கூடலூர் | கெ.........தன் | 0 உ 0 |
| 31 | கூடலூர் | குமாரசாமி ஞூ தம்பி ஆறுமுகம் | 0 உ 0 |
| ௩௨ | கூ | ம. அரங்கநாதன் | 0 ச 0 |
| ௩௩ | புதுவை | கநகசபை | 0 ச 0 |
| ௩௪ | நெல்லி | கொமரகுரு | 0 உ 0 |
| ௩௫ | சிதம்பரம் | ஆனந்தநாதசண்முக சரணாலயன் | 0 உ 0 |
| ௩௬ | கல்பட்டு | ராமலிங்கம் | 0 உ 0 |
| ௩௭ | சி. தருமச்சாலை | சண்முக பிள்ளை | 0 உ 0 |
| ௩௮ | க டிஷி | நமசிவாயன் | 0 உ 0 |
| ௩௯ | சி வேட்டவலம் | அரங்கசாமி | 0 உ 0 |
| ௪0 | வேட்டவலம் | அப்பாசாமி பண்டாரியார் | க 0 0 |
| ௪௧ | சிதம்பறம் | குழந்தைவேலு | 0 உ 0 |
| ௪௨ | சிதம்பரம் | பாவாடைப் பிள்ளை | 0 உ 0 |
| ௪௩ | சிதம்பரம் | நா அருணாசலப்பாதேசி | 0 உ 0 |
| ௪௪ | பனப்பாக்கம் | ஆறுமுகம் | 0 உ 0 |
| ௪௫ | பொலவநூர் | வேலாயுதம் | 0 உ 0 |
| ௪௬ | பறங்கிப்பேட்டை | பரங்கிப்பேட்டை காதர் சாயபு | 0 க 0 |
| ௪௭ | வடலூர் | ஆதிப்படையாச்சி | 0 உ 0 |
| ௪௮ | ஒறத்தூர் | அண்ணாமலை நயினார் | 0 உ 0 |
| 66௪௯ | திருநறுங்குன்றம் | சி. தானப்ப நயினார் | 0 உ 0 |

66 இதோடு நின்றிருக்கிறது. இதில் தேதித் தகவல் ஒன்றும் இல்லை. இதன்கண்ணுள்ள ௪௯ வகைப்பட்ட எண் ஊர் பேர் கையொப்பம் தொகை முதலிய தகவல்களெல்லாம் சுவாமிகள் உள்பட அவரவர்கள் கையெழுத்திலேயே இருக்கின்றன. கையொப்பத்தில் முன் பின் உள்ள சிறசில எழுத்துக்கள் தெளிவற்றிருப்பனவற்றைக் கூடியவரையில் யூகித்து இங்குப் பிரதி செய்திருக்கிறது.

## ௫. சாலை விளம்பரம்

உ

திருச்சிற்றம்பலம்

ஜீவகாருண்ய வொழுக்க விளம்பரம்

கல்வி கேள்விகளாற் பகுத்தறியத்தக்க அறிவை யுடைய வுயர்பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்க ளனைவர்க்கும் வந்தனஞ் செய்தறிவிக்கை.

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்க ளிந்தப் பிறப்பினாலடையத்தக்க பிரயோசனத்தைக் காலமுள்ள போதே யறிந்து அடையவேண்டும்.

அந்தப் பிரயோசனம் யாதோ வெனில்: எல்லா வண்டங்களையும் எல்லாப் புவனங்களையும் எல்லாப் பொருள்களையும்[67] எல்லாச் சீவர்களையும் எல்லாச் செயல்களையும் எல்லாப் பயன்களையும் தமது பரிபூரண வியற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற வியற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண வியற்கை யின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற வொப்பற்ற பெரிய வாழ்வை யடைவதே யிந்த மனிதப்பிறப்பினால் அடையத்தக்க பிரயோசன மென்றறிய வேண்டும்.

இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனால்

---

67 ஒரு பிரதியில் "பொருள்களையும்" என்பதற்குப் பதிலாக "உலகங்களையும்" என்றிருக்கிறது.

அடையவேண்டு மெனில்: கடவுளின் இயற்கை விளக்கமாகிய வருளைக் கொண்டே யடையவேண்டு மென்றறிய வேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனல் பெறக்கூடுமெனில்: ஜீவகாருணிய வொழுக்கத்தினற் கடவுளருளைப் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாதென்று உறுதியாக அறிதல்வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவ தெதுவெனில்: எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக் குண்டாகின்ற பசியென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷியமென் றறியவேண்டும்.

ஆகலில் அந்த ஜீவகாருணிய வொழுக்கத்தை நடத்தும்பொருட்டு கூடலூர் ஜில்லா கூடலூர் தாலூக்காவைச் சார்ந்த வடலூரென்கின்ற பார்வதிபுரத்தில் சமரச வேத தருமச்சாலை யென்றொரு தருமச்சாலை யேற்படுத்தப் பட்டிருக்கின்றது. அது பலர் சகாயத்தாலேயே நிலைபெறவேண்டுமாதலால், ஜீவ தயையுடைய புண்ணியர்கள் தங்கள் தங்களாற் கூடியவரையில் பொருண் முதலிய வுதவி செய்து அதனல் வரும் லாபத்தைப் பாகஞ் செய்துகொள்ள வேண்டு மென்பது எங்கள் கோரிக்கை.

உலக முழுதும் ஆளுகின்ற சக்கிரவர்த்தியாகிய அரசனுக்கும் உலக முழுதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்தவீரனுக்கும் மூன்ருசைகளையும் ஒழித்து உண்மை யறிந்து பிரமாநுபவத்தைப் பெற்ற ஜீவன் முத்தர்களுக்கும் பசிநேரிட்டபோது மனமிளைத்தும் வலிகுலைந்தும் அநுபவந் தடை

பட்டும் வருந்துகின்றார்களென்றால், எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டால் என்ன பாடுபடார்கள்! பசி அதிகரித்த காலத்தில் முகம் புலர்ந்து போகின்றது, உச்சி வெதும்புகின்றது, பிரமரந்திரம் அடைபடுகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது, கண் பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்துபோகின்றது, நாசி அழன்று கலைமாறி பெருமூச்சு விடுகின்றது, நாக்கு நீருலர்ந்து தடிப்பேறுகின்றது, மெய் முழுதும் கருகி சத்தியற்று ஸ்மரணை கெடுகின்றது, வாக்குக் குழறித் தொனி மாறுகின்றது, கைகளும் கால்களும் தடதடத்துச் சோர்ந்து தடுமாறுகின்றது, மலசல வழி வெதும்பி வேறுபடுகின்றது, உரோமம் வெறிக்கின்றது, பற்கள் கருகித் தளர்கின்றது, இரத்தமுஞ் சலமும் சுவறுகின்றது, சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது, எலும்புகள் குழைந்து நோக்காடுண்டாகின்றது, நாடி நரம்புகள் வலியிழந்து மெலிந்து கட்டுவிடுகின்றது, வயிறு பகீரென்கின்றது, மனசு தளர்ந்து நினைவு மாறுகின்றது, புத்தி கெட்டு நிலை மாறுகின்றது, சித்தம் கலங்கித் திகைப்பேறுகின்றது, அகங்காரம் குலைந்து அச்சமுண்டாகின்றது. பிரகிருதி சுருங்குகின்றது, கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் மறைபடுகின்றது, தாபசோபங்கள் மேன்மேலுண்டாகின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஏக காலத்திலுண்டாகின்றது எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவேயிருக்கின்றது. ஆகாரமுண்டு பசி நீங்கிய தருணத்தில் தத்துவங்களெல்லாம் தழைந்து கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் அகத்திலும் முகத்தி

லும் வெளிப்பட்டு திருத்தியின்ப முண்டாகின்றது. ஆகலில் நாமனைவரும் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்ட போது மிகவும் கருணையுள்ளவர்களாகி நம்மாற் கூடியமட்டில் அந்தப் பசி யென்கின்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாபமென்று அவசியம் அறியவேண்டும்.

பிரபவ௵
வைகாசி௴ ௧௧௨
பார்வதிபுரம் சமரச
வேத தருமச்சாலை

இங்ஙனம்
சமரச வேத
சன்மார்க்க சங்கத்தார்68

---

௬. சமரச வேத பாடசாலை

௨

திருச்சிற்றம்பலம்

இஃது சமரச வேத பாடசாலை

இதில் வாசிக்க விரும்புகின்றவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகி, நல்லறிவு கடவுள் பக்தி உயிரிரக்கம் பொது நோக்கம் திரிகரணவடக்கம் முதலிய நற்குண வொழுக்கங்களையும் உண்மையுரைத்தல் இன்சொல்லாடல் உயிர்க் குபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாகி யிருத்தல் வேண்டும்.

இதில் வாசிக்கின்றவர்களுக்கு சிலகாலம் வாசித்து ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி நேரிட்டால்,

68 இதற்கு அடியில் " இஃது சி. இராமலிங்க பிள்ளை " என்று ஒரு பிரதியில் காண்கிறது.

அந்தப் பயிற்சிக்கும் அவரவர்கள் குடும்பத்திற்கும் தக்கபடி மாதந்தோறும் பொருளுதவி செய்யப்படும். காலைமாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும். திருச்சிற்றம்பலம்.[69]

பிரஜோற்பத்தி௵
தநுர்மதி - உ௰௯உ

---

உ

## எ. சபை விளம்பரம்

திருச்சிற்றம்பலம்

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே !

அறிவு வந்த காலமுதல் அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும், அடைந்து அறியாத அற்புத குணங்களையும், கேட்டு அறியாத அற்புதக் கேள்விகளையும் செய்து அறியாத அற்புதச் செயல்களையும், கண்டு அறியாத அற்புதக் காட்சிகளையும், அநுபவித்தறியாத அற்புத அநுபவங்களையும், இது தருணந் தொடங்கிக் கிடைக்கப் பெறுகின்றேன் என்றுணருகின்ற ஓர் சத்திய வுணர்ச்சியாற் பெருங் களிப்புடையேனாகி இருக்கின்றேன்.

நீவிர்களும் அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டும் என்று எனக்குள்ளே நின்று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டு

---

69 " இஃது மேட்டுக்குப்பமென்னும் சித்திவளாகச் சன்னிதானத்தில் வெளியிட்ட பத்திரிகை " என்பது ஓர் பிரதியிலுள்ள குறிப்பு.

உரிமைப் பேராசை பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.

இயற்கையிருனே விளங்குகின்றவரா யுள்ளவரென்றும், இயற்கையிற்றனே யுள்ளவராய் விளங்குகின்றவ ரென்றும், இரண்டு படாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும் எல்லா வுலகங்களையும் எல்லாப் பதங்களையும் எல்லாச் சத்திகளையும் எல்லாச் சத்தர்களையும் எல்லாக் கலைகளையும் எல்லாப் பொருள்களையும் எல்லாத் தததுவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் எல்லா வுயிர்களையும் எல்லாச் செயல்களையும் எல்லா இச்சைகளையும் எல்லா ஞானங்களையும் எல்லாப் பயன்களையும் எல்லா அனுபவங்களையும் மற்றெல்லாவற்றையும் தமது திருவருட் சததியால் தோற்றுவித்தல் வாழ்வித்தல் குற்றம் நீக்குவித்தல் பக்குவம் வருவித்தல் விளக்கஞ் செய்வித்தல் முதலிய பெருங்கருணைப் பெருந் தொழில்களை இயற்றுவிக்கின்றவ ரென்றும், எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வகாருணியரென்றும், சர்வவல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றனும் ஒப்புயர்வில்லாத் தனிப் பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புற முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொதுவெளியில் அறிவார் அறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே யாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளை யடைந்து அழிவில்லாத சத்திய

சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல வேறு கற்பனைகளாற் பல வேறு சமயங்களி லும் பல வேறு மதங்களிலும் பல வேறு மார்க்கங் களிலும் பல வேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங் காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்க ளாகிச் சிற்றறிவு மின்றி விரைந்து விரைந்து பல வேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண் போகின்றார்கள்.

இனி யிச்சீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண் போகாமல், உண்மையறிவு உண்மை யன்பு உண்மையிரக்க முதலிய சுப குணங்களைப் பெற்று நற்செய்கை யுடையராய், எல்லாச் சமயங் களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங் களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்குஞ் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பெருஞ் சுகத் தையும் பெருங் களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங் கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய் கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து "இக்காலந் தொடங்கி யளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அளவு குறிக் கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்" என்னுந் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, அருட்பெருஞ் ஜோதியராய் வீற்றிருக்கின்றார்.

ஆகலின் அடியிற்குறித்த தருணங்[70] தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாகிற் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவதும் அன்றி, இறந்தவர் உயிர் பெற்றெழுதல் மூப்பினர் இளமையைப் பெற்று நிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்.

சென்னப்பட்டணம்
இராஜதானியைச் சேர்ந்த
கூடலூர் ஜில்லா ஷை
தாலூகா வடலூர்
அல்லது பார்வதிபுரம்

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்க பிள்ளை.

---

## ௮. சித்தி வளாக விளம்பரம்

உ

திருச்சிற்றம்பலம்

உலக அறிவிப்புப் பத்திரிகை

ஞான சித்திபுரமென்றும் உத்தரஞான சிதம்பரமென்றும் பிரமாணிக்கப்படுகின்ற வடலூர் சத்

---

70 வேறொருவரால் எழுதப்பட்டு சுவாமிகள் கையெழுத்திட்டிருக்கும் இதன் மூலத்தில் இந்தத் தருணத்தின் விவரம் எதுவும் குறிக்கப்பட்டிருக்கவில்லை

" ஷை பத்திரிகை பல பாஷையிலும் அச்சிட்டிருப்பதை அற்புதம் விளங்குங் காலத்தில் தினங் குறித்து ஷை பத்திரிகையைப் பிரசுரஞ் செய்யப்படும் "

என்று ஓர் அன்பர் பிரதியி லுள்ள குறிப்பையும், கிடைத்த பழந் துண்டு ஒன்றில் தேதி வரிசையாக விஷயங்களைக் குறித்திருப்பதில் இதைச் சுவாமிகள் திருக்காப்பிட்டுக்கொண்ட தேதியாகிய ஸ்ரீமுக வருஷம் தைமீ ௰௯-க்கு எதிராகக் குறித்திருப்பதையும் கருதி இந்நாட்குறிப்பை ஒருவாறு உய்த்துணர்க. இத் திருமுகத்தின் உரை நடைச் சிறப்பு முதலியவற்றைக் கருதி ௨-வது புத்தகமாகிய வசனப் பகுதியில் இது முன்னரே சேர்க்கப்பட்டிருக்கிறது.

திய ஞான சபைக்கு முக்கிய சம்பந்தமுடைய தாகி அடுத்த கருங்குழி யெல்லை மேட்டுக் குப்பத் தில் வழிபடப்படுகின்ற சித்திவளாகத்தில் வந் திருக்கின்றவர்களும் வருகின்றவர்களும் வருபவர் களுமாகிய ஜனங்களுக்கு அறிவிப்பது.

மேல் குறித்தவிடத்தில் இநத மாதத்திற் கடுத்த புரட்டாசி மாதம் ஐந்தாந் தேதியில் அற்புத விளக்கம் நேரிடுவதாக ஓர் வதந்தி வழங்கப்படு கின்றது. அது கேள்விப்பட்டு நம்புதலோடு நீர்கள் நீர்களும் பொருள் வகையாலும் தேக வகையா லும் உழைப்படுத்துக் கொண்டு பின்பு நிட்டூரப் பட்டுக் கொள்ளுதல் வேண்டாம். அந்தக் கேள்வி யுண்மையல்ல. இவ்விடத்தில் அற்புதம் விளங்கு வது மெய்யோ பொய்யோ, இந்தக் காலமோ எந் தக் காலமோ. ஆகலில், இந்த அறிவிப்பினால் ஜாக் கிரதையோடு உங்களுங்களுக்கு அடுத்த காரியங்க ளைவையோ அவைகளைச் செய்வீர்களாக.71

ஸ்ரீமுக வருஷ
ஆவணிமீ உ௫௨
மேட்டுக்குப்ப மென்னும்
சித்திவளாகம்

சிதம்பரம்
இராமலிங்க பிள்ளை.

4. பத்திரிகைகள் முற்றுப் பெற்றன.

---

71 இத்திருமுக வரலாறு பின் கண்டபடி ஓர் பிரதியில் காணப் படுகிறது:—

"மேற்குறித்த காலத்தில் விருதா வதந்தியால் விசேஷ கூட்டம் நேரப்போனதைப்பற்றி பெருங்கருணையால் சுஹ ஸ்த லிகிதமாய் அறிவித்த அறிவிப்பு."

## 5. கட்டளைகள்

### க. சன்மார்க்க சங்கம் விளங்கும் காலம்

உ

திருச்சிற்றம்பலம்

இதைத் தூற்றாமல் வைக்க.

சமரச வேத சன்மார்க்க சங்கம் கூடி விளங்கும் காலம் எது? அது நமக்கு அறிவுவந்த நாள்தொட்டு அந்நாள் பரியந்தம் இறந்துபோன நமது சிநேகர் உறவினர் அடுத்தோர் வார்த்திபர் வாலிபர் பாலியர் குமாரர் ஆண்மக்கள் பெண்மக்கள் என்பவர் எல்லாம் உயிர்பெற்று எழுந்து மேற்குறித்த சங்கத்தில் கூடி விளங்கும் காலமாகும். இது விஷயத்திற் றருக்கஞ் செய்யப்படாது. உண்மை.[72]

பிரமோதூத௵
சித்திரைமீ ௰௬உ
உத்தரஞான சித்திபுரம்

---

### உ. அன்பர்களுக்கு இட்ட சாலைக்கட்டளை

உ

திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நம்மவர்களுக்கு அன்புடனறிவிப்பது.

ஒருவனைப் பற்றி அனந்தம் பேர்களுக்கு நன்மை யுண்டாம் என்பதை உண்மையாக நம்பியிருந்

---

72 "ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான தருமச் சாலையில் பிரமோதூத௵ சித்திரைமீ ௰௬உ புதவாரம் சுமார் பகல் ௩ மணி நேரத்தில் வேலூரா ஆனந்தநாத ஷண்முக சரணாலய சுவாமிகள் பெருமானிடத்தில் சாதலைக் குறித்து விண்ணப்பித்த தருணத்தில் பெருமான் திருக்கரத்தால் எழுதித் தந்த பிரதம பத்திரிகை" என்று இதன் வரலாறு ஓர் பிரதியில் காண்கிறது.

கள். என்றாலுங்களுக்கு நன்மை கிடைப்பது சத்தியம். நான் இன்னுங் கொஞ்ச தினத்தில் திருவருள் வலத்தால் வெளிப்படுகின்றேன். அது பரியந்தம் பொறுத்திருங்கள். நான் மிகவும் சமீபத்தில் தானே வெளிப்படுவேன். அஞ்சவேண்டாம். சாலையை லக்ஷுவாய் நடத்துங்கள். திருச்சிற்றம்பலம். 73

---

### ௬. சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை

உ

திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நீங்கள் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு மிகவும் உரிமையுடையீர்களாகலில் உங்களுக்கு உண்மையுடன் அறிவிப்பது.74

நீங்களும் உங்களை யடுத்தவர்களும் சிற்றம்பலத் தந்தையார் திருவருளாற் சுகமாக வாழ்வீர்களாக.

---

73 இது "பிரமோதூதஷு அற்பிசிமீ ௳௪௨ சாலையிலுள்ளார்க்குப் பெருமான் மேட்டுக்குப்பமென்னும் சித்திவளாகத்திலிருந்து எழுதிய திருக்குறிப்பு" என்று ஒரு பிரதியிலும், "இது பிரமோதூதஷு ஐப்பசிமீ ௧௪௨ சாலை நடத்திவந்த புதுவை சதாசிவ செட்டியாருககுப் பெருமான் திருக்கரத்தால் வரைந்தனுப்பியது" என்று மற்றொரு பிரதியிலும் இதன் வரலாறு காணப்படுகிறது.

74 "பிரமோதூதஷு பங்குனிமீ ௳௮௨ சாலை சம்பந்திகளுககுப் பெருமான் மேல் விளையப்போகின்ற அற்புத விளக்கங்களின் திருக்குறிப்பைச் சாலை சம்பந்த முடையவர் வழிபட்டு உண்மை லாபத்தைப் பெற்று உய்யும்பொருட்டு தயவோடு சுஹஸ்த லிகிதமாய வெளிப்படுத்திய அற்புத மஹா பத்திரிகை."

எனறு இத்திருமுக வரலாறும், இத்திருமுகம் அனுப்பப்பட்ட அன்பர்க்கு ஓர் விசேஷக குறிப்பாக

"இந்தப் பத்திரிகையைச் சாலை சம்பந்திகள தவிர மற்றவர்களுக்குக் காட்டொணாது. பணதத்ததாலாயினும் தேகதததா

கர்ம கால முதலிய பேதங்களால் யார்க்காயினுந் தேக ஆனி நேரிட்டால் தகனஞ் செய்யாமல் சமாதியில் வைக்கவேண்டும். இறந்தவர்கள் திரும்பவு மெழுந்து நம்முடன் இருக்கப் பார்ப்போம் என்கிற முழு நம்பிக்கையைக் கொண்டு எவ்வளவுந் துயரப்படாமலும் அழுகூரல் செய்யாமலும் சிற்றம்பலக் கடவுள் சிந்தையுடனிருக்கவேண்டும். புருடனிறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன் வேறு கல்யாணப் பிரயத்தனஞ் செய்யவேண்டாம். பிள்ளைகளிறந்தால் சஞ்சலிக்க வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றுஞ் செய்யவேண்டாம். தெரிவிக்கத்தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்டமட்டில் அன்னவிரயஞ் செய்யவேண்டும். இவ்வாறு உண்மையாக நம்பிச் செய்

---

லாயினும் உழப்பெடுத்துக் கொண்டு உண்மை நம்பிக்கையுடன் இருக்கின்றவர்கள் விஷயத்தில் காட்டத் தடையில்லை. நான் சாலைக்கு வந்தவுடன் தெரிவிக்கின்றேன். அப்போது வரலாம். பெருங் களிப்பை படைவீர்கள். உண்மையுடனிருங்கள்.''

என்று மேல்கொண்டு எழுதப்பட்டிருப்பதும் ஓர் பிரதியில் காணப்படுகின்றன. இங்கு அச்சிட்டிருக்கும் இவ்வற்புத மஹா பத்திரிகை சுவாமிகள் திருவடிகளுக்கு மீளா ஆளெனத் தொண்டு பூண்ட பேரன்பர் சிலர்க்கே சுவாமிகள் சாலையைவிட்டுத் தனித்து வேறிடத் திருந்தபோது அருளிச்செய்யப்பட்டு, அவரவர்களாலும் அவரவர்க்குப் பின் அந்த அந்தக் குடும்பத்தினராலும் சன்மார்க்கப் பரம ரகசியம் ஒன்றாக இதுகாறும் போற்றி வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. கொஞ்ச நாளைக்குமுன் இஃது ஓர் துண்டுப் பிரசுரமாக வழங்கப்பட்டதாதலினாலும், சன்மார்க்க சாதகர்க்காகவே இப்பதிப்பு அச்சிட்டு வருவதாலும், ஓர் மெய்யன்பர் கை எழுத்தில் உள்ளபடி அச்சிடுவது ஒருவாறு அமையும் என்று கருதி இதை இங்குச் சேர்த்திருக்கிறது. திருவருட்பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க.

யுங்கள். செய்திருந்தால், சமரச வேத சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச்சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் சிதம்பரங் கோயில் திருச்சபைகளைப் புதுக்கி நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணை கூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்குந் தருணம் மிகவும் அடுத்த சமீபமாகவிருக்கின்றது—அந்தத் தருணத்தில் சாலைக்கு உரியவர்களாகி யிருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். இது சத்தியம். இது சத்தியம். இந்தக்கடிதம் வெளிப்பட்டறிந்துகொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார். இது வெளிப்பட் டறிந்தபின் தகனஞ் செய்தல் கூடாது. அது சன்மார்க்கத்திற்குத் தக்கதல்ல. ஆகலில் மேற்கண்டபடி உண்மையான நம்பிக்கையுடன் வாழ்வீர்களாக.

எனக்கு உலக அறிவு தெரிந்தது தொட்டு எனது தந்தையார் திருவருளை நான் அடையும் வரையில், என்னுடன் பழகியும் என்னை நம்பி யடுத்தும் என்னைக் கேள்வியால் விரும்பியும் எனக்கு உரிமைப்பட்டும இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்து சமரச சன்மார்க்க சங்கதனை விருத்தி செய்விக்கத் திருவுள்ளத்துக் கருதிய பெருங் கருணை வள்ளல் சாலைக்கு உரியவர்களாகி யிருந்தும் அவநம்பிக்கையுடன் இருக்கின்றவர்கள் விஷயத்திலும் இந்த வுபகாரம் செய்தேயருளுவர். ஆனல் அவர்கள் சன்மார்க்க சங்கத்திற்கு மாத்திரம் அருகராகார்கள். ஆகலில் நம்பிக்கையுடன் இருங்கள்.

பெரிய களிப்பை யடைவீர்கள். இது சத்தியம். இது சத்தியம்.

பிரமோதூத௵ — இப்படி
பங்குனிமீ ௳௮௨ — சிதம்பரம்
பார்வதிபுரம் — இராமலிங்கம்.

---

## ௪. சன்மார்க்கப் பெரும்பதி வருகை

உ

திருச்சிற்றம்பலம்

சுவாமிகளுக்குத் தெரிவிப்பது.[75]

சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந் தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும் சாத்திர பேதங்களும் ஜாதி பேதங்களும் ஆசார பேதங்களும் போய், சுத்த சன்மார்க்கப் பெருநெறி யொழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது ௨௰௯ மாதத்திற்குமேல். இப்போது வருகிற நமது கடவுள் இதற்குமுன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பல வகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள் மூர்த்திகள் கடவுளர் தேவர் அடியார் யோகி ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா

---

75 "ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சங்க சாதுக்களில் சிறந்த ஆனந்தநாத ஷண்முக சரணாலயசுவாமிகள் சந்நிதானத்திற காலஹரண ஹேதுவைப்பற்றி விசாரிக்குங் காலத்தில் பத்திரிகை மூலமாய் தெரிவித்த சரிதம்" என்று இதிருமுக வரலாறு ஒரு பிரதியில் குறித்திருக்கிறது.

மூர்த்திகளும் எல்லாத் தேவர்களும் எல்லாக் கடவுளரும் எல்லாத் தலைவர்களும் எல்லா யோகிகளும் எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அநுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னையடுத்த தாங்களும பெறுதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள், அஞ்ச வேண்டாம்.

பிரஜோற்பத்தி௵
சித்திரைமீ கஉ

---

ரு. சாலையிலுள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை

உ

சிவமயம்

அப்பாசாமி செட்டியா ரவர்களுக்கு.

இந்த சாலையால் எனக்கு மிகவும் சலிப்புண்டா கிறது. அநத சலிப்பு இரண்டு பக்கத்திலும் உபத்திரவம் பண்ணும். ஆதலால் சாலையிலிருக்கிறவர்களெல்லாம் சன்மார்க்கத்திற்கு ஒதது வாயடங்கி மனமடங்கி இருக்கவேண்டும.என்மேற் பழியில்லை. சொல்லிவிட்டேன்.பின்பு வந்தனதப்படவேண்டும்.

பிரஜோதபத்தி௵
மாசிமீ உஅஉ

---

௬. சன்மார்க்கப் பிரார்த்தனை

உ

ஸ்ரீ பார்வதிபுரம் என்னும் உத்தர ஞான சிதம்பரத திருப்பதிக் கண்ணே அகிலாதாரமாய் விளங்

கும் ஸ்ரீ சமரச வேத சன்மார்க்க சங்கத்துப் பெருந்தலைப்பதியாக வீற்றிருந்தருளும் அருட் பெருஞ்சோதியராகிய வெமது ஆண்டவனார் திருச் சந்நிதிக்கு யானெனும் போத நாச வந்தனஞ் செய்த விண்ணப்பம்.

எம்பிறையவரே !

இது பரியந்தம் யானுகத் தேடிய தோர் பொரு ளென்பதில்லை யாகவே, தேவரீர் பெருங்கருணை யால் என்னை உய்யக்கொள்ள வுபகரித்தருளிய உடல் பொருளாவி என்னும் மூன்றையும் அறியா மையால் யான் எனது என்று கொண்டதோர் சுதந் தரமானது துன்ப வின்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப்பற்றி யிருந்ததொன் றை யான் பெரும் பொருளாக வெண்ணி நின்ற னன். ஆதலால் அச்சமரச சன்மார்க்க சங்கத் துச் சாதுக்கள் சமுகத்து நிற்கப்பெற்ற விசேடத் தால் அதத்ற் சுதந்தரப் பொருளைத் தேவரீர் பெருங்கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன். இனி, தேவரீர் அதனை அருள் வசமாக்கி ஏழையா கிய என்னையும் என்னை யடுத்த சுற்றம் என்னோடு பழகிய நட்பினராதியரையும் உய்யக் கொண்டரு ளுக.

| | |
|---|---|
| ஆங்கிரசஹு | இங்ஙனம் |
| வைகாசிமீ முதல்வ | அடிமை[76] |
| மேட்டுக்குப்பம் | க. இராமலிங்கம். |

---

76 "இந்த விண்ணப்பம் கல்பட்டு (இராமலிங்க) சுவாமி களுக்காகச் சந்நிதானமே எழுதி வைத்தது" என்று ஓர் பிரதியில் இத்திருமுக வரலாறு காணப்படுகிறது.

## ஏ. சபை வழிபாட்டு விதி

உ

திருச்சிற்றம்பலம்

### ஞான சபை விளக்க விபவ பத்திரிகை[77]

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்.

இன்று தொடங்கி சபைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞான சபையென்றும் சாலைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையென்றும் சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்கமென்றும் திருப்பெயர் வழங்குதல்வேண்டும்.

இன்று தொடங்கி அருட்பெருஞ்சோதி ஆண்டவரது அருட்பெருஞ்சித்தி வெளிப்படும் வரைக்கும் ஞான சபைக்குள்ளே தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல்வேண்டும், பித்தளை முதலிய வற்றால் செய்த குத்துவிளக்கு வேண்டாம், மேலேற்றுகிற குளோப்பு முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக் கண்ணாடி விளக்கு வைக்குங் காலத்தில், தகுதியுள்ள நம்மவர்கள் தேக சுத்தி கரண சுத்தி யுடையவர்களாய் திருவாயிற்படிப் புறத்திலிருந்து கொண்டு விளக்கேற்றி, பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர் கையிற் கொடுத்

---

77 "ஞான சபைக் கதவை நேர்ந்த காலத்தில் திறந்து நேர்ந்தவர்களுக்குக் காட்டி மரியாதையில்லாது இருந்ததைப் பற்றி ஷை சங்க பிரபுசகளி லொருவராகிய உத்தரவாத முடைய ஆறுமுக முதலியார் சன்னிதானத்தில் விண்ணப் பித்துக் கொண்டதற்கு வெளியான பத்திரிகை" என்பது ஓர் பிரதியில் கண்ட இத்தெய்வத் திருமுக வரலாறாகும்.

தாவது எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியர் கையிற் கொடுத்தாவது, உட்புறவாயில்களுக்குச் சமீபங்களில் வைத்து வரச் செய்விக்க வேண்டும். நாலு நாளைக்கு ஒருவிசை காலையில் மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும் பெரியரைக் கொண்டாயினும் உள்ளே தூசு துடைப்பிக்கவேண்டும். தூசு துடைக்கப் புகும்போது நீராடி சுத்த தேகத்தோடு கால்களில் வத்திரம் சுற்றிக்கொண்டு புகுந்து முட்டிக் காலிட்டுக் கொண்டு தூசு துடைக்கச் செய்விக்கவேண்டும். விளக்கு வைக்கின்றபோதும் இங்ஙனமே செய்விக்கவேண்டும். விளக்குவைத்தற்கும் தூசுதுடைத்தற்கும் தொடங்குகின்ற பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியரும் பொருள் இடம் போகம் முதலியவற்றில் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களாயிருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும்போதும் தூசு துடைக்கும்போதும் நம்மவர்களில் நேர்ந்தவர்கள் புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் துதிசெய்தல் வேண்டும். யாவரும் யாதொரு காரியம் குறித்தும் தற்காலம் உள்ளே போதல்கூடாது. ஞானசபைத் திறவுகோல் ஒருவர்கையிலும் வெளிப்பட விருக்கப்படாது. அத்திறவுகோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப்பெட்டியைப் பூட்டி அப்பெட்டியைப் பொற்சபைக்குள் வைத்து அப்பெட்டித் திறவுகோலை ஆஸ்தானக் காவல் உத்தரவாதியாயிருக்கின்றவர் கையில் ஒப்புவித்தல் வேண்டும்.

தொடர்ச்சி காலம் நேர்ந்த தருணம் எழுது கிறேன்.

இங்ஙனம்

ஆங்கிரச௵ சிதம்பரம்
ஆடி௴ ௩௨ இராமலிங்கம்.

---

அ. சன்மார்க்க சங்கத்தார் பழக்க விதி

சித்திவளாகத்திலும் தருமச்சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை. ஆங்கிரச௵ கார்த்திகை௴ ௫௨

ஆண்டவர் ஒருவர் உள்ளார் என்றும், அவர் பொதுப்பட உலகத்திலுள்ளார் யாவரும சன்மார்க்கப் பெரும்பயன் பெற்று நித்திய வாழ்வு வாழ்தற் பொருட்டு வெளிப்படக் காரியப்படுகின்றனர் என்றும, அதுகாலையில் நாமும் ஆன்மலாபத்தைப் பெற்றுக்கொள்ளுவோம் எனவும நமபி இங்கே வசிக்கும யாவருமட வழிபாடு விஷயத்தில் ஒருதடையும சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம். அன்றியும் கால பேதத்தால் அல்லது மற்ற வகையால் அவ்வத தருணங்களில் நேரிடும் குரோதத்தால் விளையும் துவேஷாதிகள் உண்டாயினும் அல்லது உண்டாகிறதா யிருந்தாலும் உடனே ஜாக்கிரதைப்பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல் வேண்டும். அப்படியிருத்தல் மேல் விளைவையுண்டு பண்ணுதிருக்கும். அப்படி இனிமேல் ஒருவரையொருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத்தக்கதாக வைதாலும் அப்படி வைதவர்களையும் அந்த வைதலைக் கேட்டுச் சகிப்பவர்களோடு மறுபடி அத்துவேஷத்தை ஒருங்கே விட்டு

மறந்து மனக்கலப்புடன் மருவுதல் வேண்டுவது. அப்படி மருவாதவர்களையும் உடனே ஒதுக்கிவிட வேண்டுவது. அல்லது குரோதத்தால் விளையும் அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக் கேட்டு தாங்கள் எதிர்த்து வார்த்தை யாடாமல் கூட்டத்தாரில் அப்போது இருக்க வாய்ந்த இரண்டொருவர்க்குத தெரிவித்தல் வேண்டும். அப்படி தெரிவிக்காதவர்களும் எதிர்த்துச் சண்டை தொடுப்பவர்களும் இங்கிருத்த லனுவசியம். அப்படிப்பட்டவர்களை ஒரு பேச்சுமில்லாமல் இந்த இடம் விட்டுப் போய் விடத் தக்க முயற்சி ஒவ்வொருவரும் செய்தல் வேண்டுவது.

**சி. இராமலிங்கம்.**

---

### ௬. சித்திவளாக வழிபாட்டு விதி

சுவாமிகள் ஸ்ரீமுக ௵ கார்த்திகைமீ ௳ உள்ளிருந்த விளக்கைத் திருமாளிகைப் புறத்தில் வைத்து,

"இதைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன். இனி கொஞ்ச காலம் எல்லோரும்—ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிறபடியால்—உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல், 'நினைந்து நினைந்து'78 என்னும் தொடக்கமுடைய—௨௮ பாசுர

---

78 நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று

மடங்கிய—பாடலிற்79 கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற் செய்யுங்கள். நானிப்போது இந்த உடம்பிலிருக்கின்றேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்.''

என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.80

௰. **சன்மார்க்க சங்கத்தார்க்கு இட்ட இறுதிக் கட்டளை**

ஸ்ரீமுக௵ தைமீ ௰௯உ

"நான் உள்ளே பத்துப் பதினைந்து தினமிருக்கப் போகிறேன். பார்த்து அவநம்பிக்கை யடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது. வெறு வீடாகத்தா னிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார்.''81

5. கட்டளைகள் முற்றுப்பெற்றன.

உ. **உரைநடை முற்றிற்று.**

---

வனைந் துவனைந் தேத்துதுநாம் வம்மினுல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே.

79 ஆறுந்திருமுறை, ஞானசரியை.

80 இஃது சுவாமிகளின் உபதேசத் தெய்வத் திருவாக்காக ஓர் பிரதியில் காணப்படுகிறது.

81 இது சுவாமிகள் (திருக்காப்பிட்டுக் கொண்ட காலத்தருளிய) பரமோபதேசத் திருவாக்காக ஓர் பிரதியில் காணப்படுகிறது.

# அநுபந்தம்

## 1. சுவாமிகளுக்கு அன்பர்கள் எழுதிய திருமுகங்கள்

### திருமுகம் க.

*தாசில்தார் ஸ்ரீ நரசிம்மாசாரியார் எழுதியது*

ஸ்ரீமச் சம்யத்த சத்குணபதி பூற்னராய்— கியாணானுஷ்டான சம்பன்னராய் ராஜயோக சாம்பராச்சி சிங்காசனா சீளராய்—மஹான்களாயி யெழுந் தருளி இருக்கிற மகாராஜராஜஸ்ரீ ராமலிங்க பிள்ளை அவர்களுடைய சன்னிதானத்துக்கு.

கா. நரசிம்மாசாறியாற் யெழுதிய விக்கியாபன பத்திரிகை. இவடம் குடியாத்தத்தில் குசலம். தங்களுடைய ஆத்துமானுப வானந் தாதிசெயங்களுக்கு யெழுதி அனுப்பிவைக்கக் கோருகுறேன். இப்பவுட—

தாங்கள் சிற்காலததுக்கு விசேஷானுக்கிறஹ பூற்வகமாய் யெழுதி அனுப்பிவைத்த ஆக்கியாபத்திறிகை சேற்ந்து மிகவும் ஆனந்தமடையலானேன். தங்களுடைய ஆக்கியாபிறகாறம் சறிகை வெள்ளை தலை உருமாலை பியாங்கி துவாரா இத்துடன் அனுப்பி வைக்கலாச்சுது. சேர்ந்த சங்கதி தெரியப் படுத்தக் கோருகிறேன். இந்த உருமாலையினுடைய கிறயம் யெனக்கு சேற்குறதாக யெழுதிநீற்கள்.

தங்களுடைய ஆக்கியா பிறகாறம் நடப்பிவைக்க வேண்டியதே யென் வேலையே தவிற அதுனுடைய கிறயம் வாங்குகிற வேலை யென்னதல்ல. மஹான்கள் விஷயத்திலே கறணத்திறிய பூற்வகமாய் நடப்பிவைத்த கைங்கறியங்களை குறிச்சு தகுந்த விசேஷம் சு(வா)மியே குடுத்துக் கொண்டிருக்குற விஷயத்தில் அப்பேற்கொத்த கிறயத்தை விட்டுவிட்டு

அல்ப்பமான திறவிய ரூப கிறயத்தை அபேக்ஷிக்குறதுயெங்கையாவதுண்டோ. தாங்களேயோசிக்க வேண்டியது. கோவிந்தாசாறியரேடே சில சங்கதிகள் நான் சொன்னது தங்களுடைய தற்சனம் அப்பிடியாவது நேறிடுமென்னமோ வென்று தாத்பறியத்துனாலேயே தவிற வேரில்லை. இவடம் தாங்கள் யேளி யெனக்கு தரிசனம் குடுக்கவேணு மென்று அபிசந்தி தங்களுக்கு இருந்தாலும் அதுக்கு பிறதிபாதகமாயி இருக்கப்பட்ட மஹாபாபங்களுக்கு ஆகறமான யென்னை தாங்கள் ரொம்பவும் ஸ்தோத்திறம் பண்ணதைக் குறித்து நான் மிகவும் அஞ்சிகுறேன். மஸ்தான் அவற்களுடன் தாங்கள் இவடம் யேளறதாய் யெழுதினீர்கள். அப்பிடி யேளறது தங்கத்துக்குப் பறிமளமுண்டாப்போல சந்தோஷிக்கலாகுறது. தில்ல கோவிந்தருச சுவாமியாருடைய சன்னிதிக்கு வருஷா வருஷமும் * கோஷ்ட்டி சேற்க்க தாங்கள் நினைச்சால் ஒரு அப்பியந்தறமும் இருக்க மாட்டாது. இஷ்டம் சம்பூற்ணமாகாமல் போனதைக் குறித்து வியாகுலம் காணவைத்தீர்கள். "காலோஹிதுரதிக் கிரமணு" என்கிற சீதாபிருட்டி வசனப் பிறகாரம் எல்லாம் காலத்துக்கு உள்பட்டிருக்கிறபடியால் அந்தந்த காலத்து குணங்கள்—* சேதமோதங்கள்—தப்புகிறதில்லை. அதுக்கு சிந்திச்சி பிறயோஜனமும் இல்லையென்று சற்வக்கியற்களாகிய தங்களுக்கு கியாகபகப் படுத்துகிறேன். ம-ா-ா-ஸ்ரீ மஸ்தான் அவர்களுக்கு கோவிந்தாசாறியாற் அவர்களிடத்துக்கு ஒரு கடிதமும் அதுக்குமுன் தபால் மூலமாய் ஒரு கடிதமும் யெழுதியிருக்கிறேன். அதற்கு வெகுனாள் ஆயும் ஜவாபு

வறவில்லை. அதுவும் யென்னுடைய தோஷமாகவே நினைக்குறேன். "கதா திறக்ஷியாமஹே ரூமம் ஜெகதச் சோகனுசனம்" யென்கிறபடி தங்களுடைய தற்சனத்துக்கு விசேஷமாய் அபேக்ஷித்துயிருக்கிறேன். இவ்வளவே சமாசாறம்.

௲௮௱௬௰௬௵

டிசம்பற்மீ உகூஅ కాయ - నరసింహా చార్యు[82]

குடியாத்தம்

க்ஷேமம் - இவை.

இந்தக் கடிதம் சிதம்பறத்தில் ஊ ஸ்ரீமான் தில்ல கோவிந்தராஜ சுவாமி சன்னிதி தற்மகர்த்தருகிய கோமாண்டூர் கிற்ஷணமாசாறியாற் அவர்கள் மேல் விலாசம் பார்த்துக் கொண்டு மஹாறாஜறாஜஸ்ரீ பிள்ளையவற்கள் ரூமலிங்க பிள்ளையவர்கள் சன்னிதானத்தில் குடுக்கத் தகுந்தது. குடியாததத்திலிருந்து.[83]

82 தெலுங்கில் கையெழுத் திட்டிருக்கிறது. முன் பக்கத்தில் நக்ஷத்திரப் புள்ளிகளால் எல்லையிடப் பட்டவை உள்ள இடம் மூலத்தில் மிகவும் சிதைந்திருக்கிறது. ஒருவாறு அரிதில் யூகித்துணர்ந்தபடி அவை இங்கு அசசிடப்பட்டிருக்கின்றன.

83 "சிததூர் ஜில்லா குடியாத்தம் கஸ்பா . . . யெட்தாசில்தா மஹாராஜராஜஸ்ரீ . . . நரசிம்மாசாரியாரவாகள விண்ணப்பம்"

என்று மேல் பக்கத்தில் வேறொருவா கை எழுத்திலிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| Half Anna Postage (Stamp) | Cuddalore Dec. 28 1866 | Chiddumbrum Dec. 29 1866 | (வைத்திருக்கும இன்னும் மூன்று தபால் முத்திரைகளின் விவரம் தெரியவில்லை.) |

## திருமுகம் உ.

ஓர் அன்பர் எழுதியது

உ

ஐயா!

இன்று ராத்திரி நமது வீட்டில் 6 மணிக்கு நடக்கும் சிவகங்கை வயித்திநாதய்யர் பாட்டு கச்சேரிக்குத் தாங்கள் வந்திருந்து சிறப்பிக்கக் கோருகிறேன்.

1867ஹு பிப்பிரவரிமீ 4உ . . . . 84

ம-ா-ா-ஸ்ரீ கூடலூர் கருங்குழி ராமலிங்கம் பிள்ளை யவர்களுக்கு.85

---

## திருமுகம் ந.

கூடலூர் ஸ்ரீ துரைசாமி அவர்கள் எழுதியது

உ

கடவுள் துணை

விண்ணப்பம்

அன்புந் தயவுமுள்ள அய்யா அவர்கள் திருவடிகளுக்கு . . . தெண்டநிட்ட விண்ணப்பம்.

நானும் விசுவலிங்க வுபாத்தியாயரும் நாளதுமீ கஅஉ சனிக்கிழமை ரு மணிக்கு மேல்பட்டு

---

84 கையெழுத்து இங்கிலீஷில் கிறுக்காக எழுதியிருக்கிறது. B. Ramalingiyer என்னும் பெயரோ அல்லது வேறோ என்பது நிச்சயிக்கக் கூடவில்லை. அநேகமாக இந்தப் பெயராக இருக்கலாமென்று தோன்றுகிறது.

85 கருங்குழி என்று பிறகு நெருக்கி எழுதப்பட்டிருக்கிறது. இஃது ஆள்வழியாக அனுப்பிய கடிதம் போலும்.

ஆபீசை விட்டு பிறையாணமாயி வடக்கு நோக்கி ரெட்டிச்சாவடிக்கடுத்த ஒரூரில் தங்கி விடியர்க் காலம் அழசிப்பாக்கம் சிங்கிரி கோவிலுக்குப் போயிப்பகற் போது போசனஞ் செய்துக்கொண்டு ௧௮ நாழிகைக்கு மேல்ப்பட்டு அவிடம்விட்டு பிறையாணமாகினோமப்போது மாடுகளுக்கும் எங்களுக்கும் அருள் துணையாயி மந்தாரமிட்டு தென்றல் வீசுவது போல் கொண்டலடித்தது. செல்லஞ்சேரி தூக்கணாம்பாக்கம் வந்து ராவுகாலமாகையால் ஜீவகாருண்ணியத்துக்குத் தகுதி யல்லாதவராயினு ரொருவர் வுள்ளேரிப்பட்டு வந்து தங்கி விடியர்க் காலை தெற்கு நோக்கி வருகையில் யெனக்கு நெஞ்சிகருத்து கொஞ்சம் பித்த ஜலமும் அஜீரணத்தால் சொர்ப்ப அன்னமும் வெளிப்பட்டது. திருப்பணாம் பாக்கம்........அறிவானது தாண்டச் சீரகம் மிளகு பொடி செய்து சருக்கரை சேர்த்து நெய்யாலுண்டை செய்து நானும் உபாத்தியாயரும் போசித்தோம். உடனே ௯ மணிக்கு கூடலூர் வந்து சேர்ந்து குரு கிருபையால் அவாளவாள் அலுவலைப் பார்த்து வருகிறோம்.

வையாசிமீ ௧௧௳ நடக்கப்போகிற அன்னதானத்திற்கு சுமார் மூன்றுக்குமேல் நெல்லு வண்டிகளும் வொரு வண்டி காயிகரிகளுமாக நான்கு வண்டி தயாராகுமென்று நினைக்குறேன். ஆனால் அருள் கூட்டிவைக்குமென்பதே அடியேன் துணிவு.

வருகிற சனிக்கிழமை சாயரக்ஷை புறப்பட்டு திருமாணிக்குழி பாலூர் பக்கம் போகவேணுமென்கிற ஆசையிருக்கிறது. ஆனால் அடியேன் தேகம் அல்ப்ப பசியோடு கூடியதால் அளவுக்கு மேலிரண்

டொரு கவளம் புசித்தால் முன் சொல்லிய பித்தா திக்கம் அதிகப்படுமே யென்று யோசிக்குறேன். அதர்க்குத் தகுந்த மருந்து அல்லது விபூதிப்பிற சாதம் அனுக்கிரகம் செய்தால் அத்துணைப்பற்றி அன்னதானத்து அடியார்களில் யாரொரு வடியே னாக மதிக்கப் பெறுவேன். அருள்கூட்டி வைக்க வேண்டியது. வேணும்தெண்டநிட்டவிண்ணப்பம்.

இப்படிக்கு
கூ. துரைசாமி.

பிராமண சுவாமிகள் சுவாமிகளை சதா சேவை செய்துக்கொண்டு யிருக்க யென்றைக்கி கிடைக் குமோ வென்று விண்ணப்பஞ் செய்தார்களிக்காகி தத்துடன் அறப்பொடி பலம் அனுப்பிவைத்து யிருக்கிறேன். கோட்டிசு ஆயிரங் காப்பி தயாரா கின்றது. அதில் புருபு காப்பி வொன்று சமுகத் துக்கு அனுப்பியிருக்குது.[86]

---

## திருமுகம் ச.

மற்றும் ஓர் அன்பர் எழுதியது

விற்த்தாஜலம்
பிரபவஸு வையாசிமீ உ௨

என தன்பிற் கடைக்கலமாகிய ஐயாவே!

தங்க ளனுக்கிறஹத்தினு லடியே னிவ் விற்த்த காசியி லாடியபாதத்தவ னுமத்தை சதா தங்கள் பாவினங்களால்ப் பன்னுதல்செய்து காலங்கழித்து வருகின்றேன். யினு மவனது கெண்டா ஓசை யும் ஆராதிப்பவர்களினி தரிசனமு மில்லாதிருப்

---

86 மேல் விலாசமுள்ள காகிதம் இல்லை.

பதினுலேயே யேக்க முற்றிருக்குறே னென்பதை யுள்ளபடி அநுஸனரிந்துக் கொள்ளாதல்ல.

யென் வாழ் நாள் முழுவதிலு மிப்ப நானிருப் பது போல் முக்தி யேக்கத்திலேயே யிருந்து நற்கதி யடைவே னென்கிற நம்பிக்கை யெவ்வளவேனு மில்லாதிருப்பதினு லிவ் வெளியேனை தங்களைவிட வேறே அக் கதியடையச் செய்யத்தக்கவர்க ளில்லை யென்றுங் கருதி இக்கடித மெழுதிக்கொள்ளத் துணிந்த யிவ்வேழையினிடத்தில் கிஞ்சித் திரக்கமு மனவூக்கமும் வைத்து தங்களருகி லிரித்தி யிவ னுடக்களைக் கழிப்பித்துக் கடைத்தேற்றிவைக்க, ஐயா! ஆயிரந்தரமாக வந்தனஞ் செய்குறேன்.

அதாவது, தங்களா லியற்றப்படப் போகிற சமரச வேத தருமச்சாலையில் தகுதியுள்ள வொரு ஆழியநாக்கிக் கொள்ளும்படிக்கித்தா னிவனது கோறுதலாயிருக்குறது.

இதைத் தங்க ளாழ்ந்த கருத்தில் யோசித்துடனே விடை யனுகிரஹிக்கவும். யெப்போது மெதிர்பார்த் திருக்கிற தங்களடிமைகளி லொருவனுனவனது அனேகவித வந்தனமும் சாஷ்டாங்க தண்டமும்.

இப்படிக்கு

. . . . . . 87

இஃது

குறிஞ்சிப்பாடி தபாலாபீசில் பார்த்துக் கொண்டு அடுத்த பார்வதி புரத்தில் வீற்றி ருக்குஞ் சமரசவேத தருமச்சாலைத் தலைவரா

87 கை எழுதது அதிக கிறுக்காக இருக்கிறது. ப. செல்வபதி அல்லது ம. கணபதி அல்லது ம. காளத்தி என்று இருக்க லாம். இதுதான் என்று நிச்சயிக்கக் கூடவில்லை.

இய சிதம்பரம் மஹான் இராமலிங்கப் பிள்ளை அவர்கடிருச்சமுகத்திற்கு. குறிஞ்சிப்பாடி.[88]

---

## திருமுகம் ரு.

சென்னை ஸ்ரீ முத்துகிருஷ்ண பிரமம் எழுதியது

உ

சுபமஸ்து

அருணாசலீஸ்வரன்பேட்டை
பிரபவஞூ வைகாசிமீ அஉ

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூப சாட்சாத்கார சிவசுப்ரமண்யக் கடவுளினது வரப்பிரசாதத்தினால் திருஅவதாரஞ் செய்த என்னருமைக் கண்மணியாகிய சமரச உள்ளம் வாய்ந்த இராமலிங்கமே!

முதலாவது :—முன்னால் சித்திரைமீ முதல் தெய்தி எழுதிய கடிதத்திற்கு பதில் ஒன்றும் காணாமல், ஷூமீ உஉஉயில் எழுதி வரவிட்ட சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டட முதலானதும் நாளதுமீ ௧௨ ரிஷப லக்னத்தில் ஆரம்பஞ் செய்வதற்கு இவனும் வரவேண்டுமென்று குறிப்பிட்ட பத்திரிகை நாளதுமீ எஉ பார்க்க சந்தோடமாயிற்று. ஆனால் இவன் வருவதற்கு நாளில்லாமல் போனதால் நின்று விடலாயிற்று. முந்தி தெரிந்தால் ம-ள-ள வேலு முதலியாருடன் வந்து விடுவேன் அல்லது தனித்தாவது வரலாம். அது என் பாக்கியம். அப்படிக்கிருந்த போதிலும் என்னுடைய மங்கள

---

88 (அதே கையெழுத்து இவ்விடமும் இட்டிருக்கிறது.)

Stamped ...... 14-5-67 Vriddhachalam

வாழ்த்துதலானது ஷை மீ யிகவ முதலாய் ஷை கட்டட முதலாகியதும் நிர்விக்கினமாய் முடிந்தேறி நித்தியோச்சவமாய் தங்கள் உள்ளன்பிற் றேன்றிய சங்கல்பபடி எல்லா தருமங்களும் அபிவிர்த்தியாய் சந்திராதித்தர் உள்ளவரையிலும் நடந்து வரும்படி நமது சிவானந்தக் கருணைசமுத்திரத்தை பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றது.

உ-வது:—இவ்வண்ணம் இக்காலத்தில் இச்சிவ கடாக்ஷமிருந்து முடிப்பிக்குந் தன்மை யுடையது அவரது அடியார்களின் பக்தியின் மகிமையேயாம். அது இத்தன்மை யுடையதென்று அளவிடப்படாதாதலாலும் ப்ரமமத்தை நாடி துறந்தவர்களுக்கும் மற்றையோர்களுக்கும் இவ்வுலகத்தில் இப்போதுதான் இது நூதனமாக ஏற்படுகின்ற அன்னசாலையும் வித்தியானந்தமும் சமரச பக்குவங்களுமான பெரும்பாக்கியமான சிவானந்த செல்வத்தின் அருமையும் மேன்மையும் யோக்கியமும் சிலாக்கியமும் இவ்வளவென்று சொல்வதற்கு ஏடும் போதாது நாவுமில்லை. இச்சிறந்த தெய்வத் தன்மையுள்ள கீர்த்தியானது ப்ரம்மகியானம் அடையும் பொருட்டே இனி திருஅவதாரஞ் செய்யப் போகின்ற புமான்களுக்கும் உலக முள்ளளவும் உண் மகிட்சியை பூரணமாகச் செய்துவைக்குமாதலாலும் இவ்விஷயத்தைக்குறித்து தனங்கொடுத்தவர்களுடைய புண்ணியமும் இதைக் குறித்து வாக்கு சகாயமும் சரீரசகாயமும் செய்தவர்களுடைய உள்ளன்பின் பெருமையும் எததன்மைத்தோ வேதங்களாலும் அளவிடக்கூடாமை யென்று சகல சாஸ்திரமும் சொல்லுமாயின், ஒன்றுந் தெரியாதவனுகிய இவன் சொல்வதென்னை யுள.

௩-வது :—இவனது தேகம் பட்டணத்திலும் உயிர்தங்களிருதயத்திலும் அடியார்களுடைய அன்பிலும் நாளதுமீ டுசெடு முதல் உட்புகுந்து டுெ சிவ கைங்கரிய முடிந்தேறும் பொருட்டு நித்திய மங்கல வாழ்த்துதலோடு நிலைபெற்றிருக்கும். இனியொருகால் அதைக் குறித்து மற்றவை ஆரம்பஞ் செய்யுநாளில் இரண்டு வாரத்துக்கு முன்னர் தெரிவிக்க சித்தமுண்டாயிருந்தால் இந்த தேகம் வந்துவிடும். சித்தமறியவும். இதற்கு பதில் டுெ டுசெடு டுெ கைங்கரியம் ஆரம்பித்து ஆனந்தங் கொண்டாடிய பின்னர் அச்செய்தியை இவனுக்கும் ஒரு வரி யெழுதக் கோறுகின்றனம்.

சுருதிப்பிரமாணம்

ஞானவாசிட்டம்

அறிஞர்க் குலகா னந்தமய மறியா தவருக் கிடர்மயமாஞ், செறியு மிருளா மந்தகர்க்குச் செங்கணுள்ளோர்க் கொளியாகும், பிரிவில் பிரம மனைத்துமென நாடிற் பிரம மவனேயாம், நறிய வமுதுண்டவனமுத மயத்தை நண்ணு கிரானன்றே.

சிருட்டி தொட்டு இந்நாள் பரியந்த முண்டாயிருக்கும் வித்தியாசப் பிராந்தியை நீக்கும்பொருட்டு தங்களாலேற்படும் வித்தியானந்தமும் அன்னசாலையும் வியாச பகவான் சுகருக்கு (ப்ரபஞ்சமதே ப்ரம்மோகமென்று) போதிச்சது போலவே பெத்தனும் முத்தனுமாகிய யாவருடைய அறிவின் கண்ணைத் திறந்து காட்டிவருமென்று நம்புகிறேன். அதற்குமேல் நாரதர் சுகருக்கு (ஏகமேவாத்வைதம் ப்ரம்மோகமென்று) போதித்தது போல் மேற் சொல்லிய பசிவுபாதி நீங்கி வித்தியானந்த முண்டாயிருக்கும் தருமச்சாலையில் நின்றும் சிவபுனிதர்கள் அப்

பேறடைவார்கள் எனத் தோன்றுகின்றது. சுப மஸ்து.

சிவகடாக்ஷந்துணை
திருச்சிற்றம்பலம்

(மேல் விலாசம்)
சென்னைக் கடுத்த அருணா
சலீஸ்வரன்பேட்டை ஷை
கோயிலுக்கு எதிர் உஉச-
வது கதவிலக்கமுள்ள
திருமடத்திலிருக்கும்
இன்னான்.

இங்ஙனம்
தங்களன்பிற்
கூறியன்
திரு. முத்துகிருஷ்ணன்.

௨

கூடலூரில் ம - ா - ா - ஸ்ரீ முத்துகிருஷ்ணா இராமசாமி செட்டியார் குமாரர் அப்பாமி செட்டியார் மேல்....வையிட்டு மகானுபாவரா கிய சிதம்பரம் இராமலிங்க பிள்ளையார் சந்நி தானத்தில் கொடுப்பது. அவ ரெங்கே யிருந் தாலும் தட்சணமே அவரிடத்துக்கு அதி தீவரமாய் அனுப்பிவிடவும்.

அவசரம். சுறார் சுறார். Cuddalore.[89]

---

89 கடிதத்தில் பல இடங்களில் மஞ்சள் பூசியிருக்கிறது.

Suburban No 1 Cuddalore (இன்னும் ஒன்றிரண்டு முத்திரை
1867 1867 கள் தெளிவற்றிருக்கின்றன.)
May 20 May 21 ..

Emergent Bearing.

" இந்த லெட்டருக் குடையவர் குறிஞ்சிப் பாடியைச் சே................தெரிய வருவதால் வாசீசு" என்று எழுதி இங்கிலீஷில் கையெழுத்துச் செய்திருக்கிறது.

## திருமுகம் ௬.

### புதுவை ஸ்ரீ துரைசாமி அவர்கள் எழுதியது

உ

அன்புந் தயையுமுடைய அய்யா அவர்கட் கனந் தானந்த வந்தனமுற் றெழுதிக்கொண்ட தியா தெனின்.

அவிடத்திய சுபயோக க்ஷேமாதி சயத்தை அடிக்கடி கேழ்க்க ஆவலுள்ளவனாகயிருக்கிறேன். நீங்க ளனுப்பிய கடிதமும் ரூபாயும் வந்து சேர்ந்து அதிலுள்ள மிச்ச ரூ. ௯-யும் அனுப்பித்திருக்கி றேன். யென்னாலாக வேண்டியவைகளுக் குத்தர வாக பலவாறு பிரார்த்திக்கின்றனன். ளா-ஸ்ரீ வேலு முதலியாருக்கும் ளா-ஸ்ரீ நாயினா ரெட்டியாருக்குந் தங்கள் கடிதத்தைக் காண்பித்தேன். ளா-ஸ்ரீ வேலு முதலியார் நாளைய தினம் காலமே பிரயாணப்பட்டுப் போறார்கள். நானும் ரெட்டியாரும் திண்டிவனம் வரையில் போய் வழி விட்டுவிட்டு வருகிறோம். யெனக்கு வேண்டிய புத்திமதிகளை அடிக்கடி தெரி வித் தனுக்கிரகிக்கும்படி தங்க ளுபய சரணார விந் தங்களை அஷ்டாங்க பஞ்சாங்க யேகாங்கமாய் பிரார்த்திக்கின்றனன்.

பிரபவ௵ இப்படிக்கு

ஆடி௴ ௩௨ தொண்டன்

கி. துரசாமி.

இவை கூடலூரில் மகாகனம் பொருந்திய அய்யா அவர்கள் சமுகத்துக்குக் கொடுப்பது.[90]

---

90 தபால் தலை முத்திரை ஒன்றும் இல்லாததால் இது ஆள் மூலம் அனுப்பிய தொன் ருகும்

## திருமுகம் எ.

### ஸ்ரீ வாசுதேவன் அவர்கள் எழுதியது

உ

சிவமயம்

எனதாருயிர்க் கோர் பெருந்துணையாய தங்களழகிய திருவடிகளி லனேகமாய் வணங்கி செய்துக் கொள்ளும் விண்ணப்பமாவது.

எதிர் பார்த்துக்கொண்டிருந்த யேழையின் வினை விலக விளக்கிய விளக்கமான தங்கள் கடிதம் கிடைத்து அற்ப புத்திக் கனுகுணமா யடிக்கடி வாசித்து வாசித்து வணங்கா நிற்கின்றேன்.

கிருபை கூற்ந்த னேகம் தடைகளை அணுவாக் கிக் கொண் டடியே னெண்ண மீடேற வருள பிரார்த்திக்கின்றேன்.

சித்திரைமீ உகூஉ ப. வாசுதேவன்.

கூடலூரில் ஶா-ஶா-ஸ்ரீ . . . . பிள்ளையவர்கள் மேல் விலாசம் பார்த்துக் கொண்டு சுவாமி அவர்கள் இராமலிங்க சுவாமியவர்கள் சன்னிதியில் கொடுப்பது. Cuddalore.91

---

91 Stamped Cuddalore 1869 May 8 (இன்னும் ஒரு முத்திரை அரை குறையாய்த் தெரிகிறது.)

## திருமுகம் அ.

### கணக்கி லவதானி தேவிபட்டினம் ஸ்ரீ முத்துசாமி பிள்ளை எழுதியது

வெண்பா

தகர வரிக்குழல்கா மாதியைந்திற் றங்கும்
தகரவரி நாலைந்து சாடும்—தகரவரி [மொரு
மூவொற்றி யூற்பதங்கள் மூன்றுமங்கை யேந்து
சேவொற்றி யூர்பதத்தைச் சேர்.92

1. சுவாமிகளுக்கு எழுதிய திருமுகங்கள் முற்றுப்பெற்றன.

---

92 இப்பகுதியின் 60-வது அடிக்குறிப்பைப் பார்க்க இதுவே கணக்கி லவதானியார் எழுதி உரை வேண்டி மதுரைத் திருஞான சம்பந்த மடத்துச் சுவாமிகளைக் கொண்டு திருக்கழுக்குன்றம் திருச்சிற்றம்பல ஞானியார் வழியாகச் சுவாமிகளுக்கு அனுப்பியது. சுவாமிகள் “ஷை வெண்பாவுக்கு உரை எழுதியபின்பு அவதானியார் அடிமையாகித் தோத்திரஞ் செய்த பாடல் ஒன்று உண்டு” என்று ஒரு பிரதியில் குறித்திருக்கிறது. அது கிடைக்கவில்லை.

## 2. சன்மார்க்க சங்கத்தினர் ஒருவர்க்கொருவர் எழுதிய திருமுகங்கள்

### திருமுகம் க.

கூடலூர் ஸ்ரீ அய்யாசாமி பிள்ளை எழுதியது

கற்றற்பாலன கற்றுங் கேட்டற்பாலன கேட்டு முளங் கொள விளங்கு முணர்ச்சியுஞ் செய்தற் பாலன செய்தும் விடுத்தற் பாலன விடுத்து முழு பயனொடு கெழீஇய வொழுக்கமும் பெறீஇ நிலைத் தலை யமைந்த நேயர்க்கு பல்கால் வந்தனம்.

ஆண் டிறைவ ரரு ணைக்காற் சிறப்புடைத் திருவோ டுவெப்புறல் வண்ண முற்படு வழக்கா னெப்புடை வருந்தோ றுணர்ந் துணர்ந் தத் தலைபுவகை சால்கிற்று மதனு ளிடைக் கிடைவருமா றடுத்தி வண்புரிக வன்றிப் பேருருக்காட்சியா னெடுஞ்சேய்மைக்கட் பிளவுபட்டமையி னுஃற்ற வுறுகட் குட்டஞ் சிற்றுருக் காட்சியா னண்மைக்கட் பலகாற் கூடு நேயத்தி னுற்ற வுவகைப் பெருநீர் நிலையாற் புடைபெயர்ப்பின்றி யடங்கலிற் சிறி தமைதி பெற்றும். வந்தனம்.[93]

---

### திருமுகம் உ.

சென்னை ஸ்ரீ ரத்தின செட்டியார்

கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

. . . . . . . .

அப்பாசாமி செட்டியார் அவர்கள் சமுகத்துக்கு

---

93 "சிதம்பரம் இராமலிங்க பிள்ளை யவர்கள் அநுக்ஞையின் பேரில் ஷையார் மாணுக்கர்களி லொருவராகிய கூடலூர் தெ(?) அய்யாசாமி பிள்ளை வரைந்தது."

என்று பிற்காலத்து நோட்டு புத்தகம் ஒன்றில் இதன் வரலாறு குறித்திருக்கிறது. இது இன்னாருக்கு எழுதியது என்பது அப் பிரதியில் குறிக்கப்படவில்லை.

அநேக நமஸ்காரஞ் செய்து எழுதிக்கொண்ட விண்ணப்ப மென்னவெனில் :

இவிடத்தில் யான் க்ஷேமம். அவிடத்தில் தங்களுடைய க்ஷேமங்களை விரும்புகின்றனன்.

இப்பவும் அவ்விடத்தி லிருக்கும் மகா-ா-ா-பிள்ளை அவர்கள் இராமலிங்க பிள்ளை அவர்கள் பேரால் இத்துடன் மூன்று கடிதம் தங்களைப் பார்வையிட்டு கொடுக்கும்படி எழுதியிருந்தே னல்லவா. அக்கடிதங்கள் மூன்றும் அவாளிடத்தில் கொடுத்திருப்பீர்களோ அந்த சேதியை யடியேன் அறியும்படி தாங்க ளொரு கடித மென் பேரா லனுப்ப வேண்டியது. மேலு மவாள் கூடலூரிலே யிருக்கிறார்களோ அல்லது கருங்குழியி லிருக்கிறார்களோ அல்லது இன்ன மெவ்விடத்திற்காவது போயிருக்கிறார்களோ . . . . . . . . . . . தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

மேலு மவா ளெவ்விடத்தி லிருக்கும்போது என் கடிதங்களைக் கொடுத்தீர்களோ அதையுஞ் சேர்த்து எழுதவேண்டும்.

எனக்கு மேல் விலாசம்:

சென்னப்பட்டணம் பெத்து நாயக்கன்பேட்டைக் குசிலி சவுளி ஊ - தஞ்சா செட்டி மேல் விலாசம் பார்வையிட்டு சை. இரத்தின செட்டிக்குக் கொடுப்பது என்று கட்டேபட்டாகவே தபால் மூலமாயனுப்பவேண்டியது.

இந்தக் காகிதம் பார்த்தவுடனே தயை செய்து கடித மெழுத மன்றாடுகின்றேன். வேணு மனேக நமஸ்காரம். மேலும் பிள்ளை அவர்கள் தற்காலத்தில் வேறொரு இடத்தி லிருந்தால் அவ்விடத்திற்கு

தயால் எழுதவேண்டிய மேல் விலாசமும் எழுதி யனுப்ப வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இக்கடிதம் அவாளிடத்திலேயே நேராய் கொடுக்கவேண்டியது.

இது

கூடலூரில் கடைத்தெருவுக் கடுத்த மகா-ா-ா முதது கிருஷ்ண அப்பாசாமி செட்டியார் அவர்களுக்குக் கொடுப்பது.[94]

---

திருமுகம் ௯.

கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார் மற்ற சாலை அபிமானிகளுக்கு எழுதியது

உ

அன்புந் தயவுமுள்ள ஐயா வந்தனம்.

நாம் ஆன்மலாபததைப் பெற்றுக்கொள்ளு நிமித்தம் கடவுள் சம்மதப்படி யேற்படுத்திக்கொண்ட சமரச வேத தருமச்சாலையின் செங்கற் கட்டடங்களின் அஸ்திவாரங்களும் கிணறு குளம் கேணி முதலிய நீர்நிலை யெடுப்புகளும் தற்காலம் இலேசிலேசாநம்மாற் கட்டுவித்துக்கொண்ட விழுன்மேய்ந்த மண்கட்டடச்சாலையில் ஒருசார் ஆகார தரும விருத்தியும் பிரபவ௵ வைகாசிமீ ௧௧உ குருவாரம் உதயகாலம் சிங்க லக்கினத்தில் துவக்கஞ் செய்வதாகத் தீர்மானித்துக்கொண்டபடி அன்றைய தினத்தில் துவக்கும்போது மூவாயிரம் சனங்களுக்குக் குறையாமல் கூடுமென்று தோற்றுகின்

---

94 Madras Feb. 11 1867 | Cuddalore 1867 Feb. 12 | (இன்னொரு முத்திரை தெளிவாயில்லை.)

றது. ஆகையால் அத்தினத்தில் செல்லுகின்ற செலவு முழுவதும் இந்தத் தருமச்சாலையை யபிமானித்த நாமனைவரும் பாகஞ் செய்துகொண்டு செலுத்துவோமாக.

பிரபவ௵

சமரச வேத தருமச்சாலைத் தலைவ ராகிய சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளையவர்கள் அநுமதிப்படி ௸ தருமச்சாலையை நடத்துகின்ற சமரசவேத சன்மார்க்க சங்கத்தாரில் ஒருவராகிய

மு. அப்பாசாமி செட்டி

---

## திருமுகம் ௪.

கூடலூர் ஸ்ரீ அய்யாசாமி பிள்ளை

தருமச்சாலை ஸ்ரீ நமசிவாயப் பிள்ளைக்கு எழுதியது

என தன்புள்ள நண்பரா மெந்தனக் தங்கட்குப் பன்முறை வந்தனம்.

இங்ஙனம் விடையேற்று தின மிராத்திரி எ மணிக்குக் கிரகத்திற்கு வந்து சேர்ந்தனன். மகா-ள சதாசிவ செட்டியாரவர்கள் கொடுத்த ரூ. ௱-க்கும் ரூ ௧-க்கு கூ ௫ ௨ ஆக சில்லரை மாத்தித் தயார்செய்து வைத்திருக்கின்றேன். அவ்விடத்தில் சந்நிதானந் திருக்கூட்ட சமேதராய் தக்கணமடி பெயர்த்ததாய் கேழ்வியாகின்றேன். இதனுல் சாலையில் விசேஷ கும்பலிராது பற்றியும் விசேஷ செலவிராதுபற்றியும் காசாக அதிக துகை யிருக்கில் விரளமாயிருக்குமானது பற்றியும் ரூ. ௨௫-க்கு வட்டக்காசுகள் பைசுகள் அனுப்பி வைத்திருக்கின்றேன். வரப் பார்த்துகொள்வதன்றி உப்பும் சில

சில்லரை சாமான்களும் அனுப்பியிருப்பதை வரப் பெறுவீர்களாக. அதில் சில்லரை சாமான்களை சதாசிவ செட்டியார் பெரிய தங்கையார் வசம் சேர்ப்பிக்க.

அரிசி ௯-டு தினத்தில் அனுப்புகின்றேன்

புதவாரம் அன்புள்ள நண்பன்
கூடலூர் வந்தனம்

கா. அய்யாசாமி.

உ

வடலூரில் சமரசவேத தருமச்சாலையில் மகா-ா-ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் நமச்சிவாயப் பிள்ளையவர்கள் இடம் கொடுப்பது.[95]

---

திருமுகம் ௫.

ஸ்ரீ இரத்தின முதலியார்
ஸ்ரீ சண்முக பிள்ளைக்கு எழுதியது

உ

சிவமயம்

சமரச வேத சன்மார்க்க சங்கத்தாரி லொருவராகிய ம-ா-ா சண்முக பிள்ளையவர்களுக்கு அனந்தஞ் சரணம்.

இவ்விடத்தி லின்றை வரையில் குரு கடாக்ஷத்தால் யானும் மற்றவர்களும் க்ஷேமம். அவ்விடத்தில் தங்களுடைய சுபசரித்திரங்களையும் சாலையிலுள்ள மற்றவர்களுடைய க்ஷேமங்களையும் அடிக்கடி தெரிந்துகொள்ள ஆவலுடையவனாக விருக்கின்றேன்.

---

95 இது ஆள் வழியாக அனுப்பிய கடிதம் போலும்.

தாங்கள் இந்தமீ உஉவ வரைந்தனுப்பிய கடிதம் உருவ வந்து சேர்ந்து எல்லா சேதிகளும் தெரிய வந்தது. மேலும் சன்னிதானம் கூடலூரிலிருந்து உ௰௩வ சனிவாரம் ம-ா-ா ஆறுமுக முதலியாருக்கு மரவிஷயத்தைக் குறித்து வரைந்து விடுத்த திரு முகத்தாலும் க்ஷேமங்கள் தெரிந்து கொண்டேன். சந்நிதானம் தருமச்சாலைக்கு உ௩வ எழுந்தருளுவ தாக அதில் குறித்திருந்தது. இது நிற்க. கூடலூரி லிருந்து ம-ா-ா விசுவலிங்க வாத்தியார் அனுப்பிய பிரார்த்தனை பத்திரிகைகள் உா-ம் வந்து சேர்ந்து மதுரை இராமனுதபுரம் திருவாவடுதுறை பெங்கு ளூர் முதலிய வூர்களுக்கும் தபாலி லனுப்பிவிட்டு சென்னையிலும் வித்துவான்கள் பிரபுக்கள் பண்டி தர்கள் முதலியோர்க்கும் சேர்ப்பித்தேன். எல் லோரும் அதிக வியப்பையும் சந்தோஷத்தையும் அடைந்திருக்கின்றார்கள். ஆனால் தாமோதரம் பிள்ளைக்கும் ஆறுமுக நாவலருக்கும் அவரைச் சார்ந்த மற்றைச் சில பேர்க்கு மாத்திரம் வெறுப் பையும் கோபதனையும் துக்கத்தையு முண்டுபண் ணிற் றென்று கேழ்விப்படுகிறேன். ம-ா-ா வீரா சாமி வாத்தியார் எழுதிய விஞ்ஞாபன பத்திரி கைக்கு பதிலுத்தரமாக "நல்லறிவுச் சுடர்கொளுத் தல்" எழுதி சென்னையிலுள்ள வொரு சிறுவன் பெயரா லதை வெளிப்படுத்தினர். அதில் வீராசாமி வாத்தியாரை விசேஷம் தூஷணை செய்திருக்கின் றது. இதைதான் சிதம்பரத்திற்கு அனுப்பியிருப் பார்கள். உங்களுக்கு அந்த புத்தகத்தை யனுப்பு கிறேன் பாருங்கள். நான் தருமச்சாலைக்கு வந்தி ருந்தபோது இவ்விடத்தில் ஆறுமுக நாவலர் பிர சங்கஞ் செய்தபோது திருவருட்பாவை தூஷணை

செய்தார். அந்த சமயத்தில் அந்த பிரசங்கத்தை கேட்க. . . .[96] ஒருவர் இதைக் கேட்டு சகியாதவராய் சிலநாள் பொறுத்து "திருவருட்பா தூஷணை பரிகாரம்" என்று ஒரு பத்திரிகையை யெழுதி வெளிப்படுத்தினார். அதை அவ்விடம் அனுப்ப சம்மதியில்லாதவனா யிருந்தேன். ஏனெனில் நாவலர் செய்த தூஷணையை அந்த பத்திரிகையில் அவர் எழுதியிருக்கிறார். அதுபற்றிதான் சம்மதியில்லை. ஆனால் தாங்கள் நாவலர் கொடிய செய்கை யிப்படிப்பட்டதென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு ஒரு பத்திரிகையையும் அனுப்புகிறேன். ம-ள-ள தொ. வேலாயுத முதலியார் நாவலரை லக்ஷியஞ் செய்து இதுவரையிலும் ஒன்றும் எழுதாமலிருந்தார். வீராசாமி வாத்தியார் தொந்திரவைக் குறித்து "நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" என்னும் பத்திரிகைக்கு பதிலெழுத ஆரம்பித்து எழுதிக்கொண்டு வரும்போது பெங்களூரில் முதலியாருடைய மைத்துனர் இறந்துவிட்ட சமாசாரம் கேழ்விப்பட்டு ஷை யாருடைய கர்ம காரியத்திற்கு முதலியார் பெங்களூருக்குப் போயிருக்கிறார். உ-ரு தினத்துக்குள் வந்து விடுவார். வந்தவுடனே அதை யெழுதி முடித்து அச்சிட்டு வெளிப் படுத்துவதாக வீராசாமி வாத்தியார் யோசித்திருக்கிறார். தாங்கள் கேட்டபடி தெய்வ மணிமாலை யாத்திரம் உ௦ புத்தகம் தற்காலம் அனுப்புகிறேன். மனுமுறைகண்ட வாசகம் காப்பியாயிருப்பதால் பயிண்டு செய்து அனுப்பிவிக்க கொஞ்ச நாளாகும். திருத்தணிகைப் பதிகத்தில்

96 இங்குக் காகிதம் சிதைந்திருக்கிறது.

ங ளா . . .97 ஜியார் வீட்டில் விசாரித்தேன் கிடைக்கவில்லை. இது சேதி தாங்களறியவும். ம-ா-ா-ஸ்ரீ செல்வராய முதலியார் பல்லாரிக்குப் போயிருக்கிறார். ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக பிள்ளை சுந்தரம்மாள் முதலானவர்களும் க்ஷேமமாக விருக்கின்றார்கள். ஜீவகாருணிய வொழுக்கம் எழுதிமுடிந்த சங்கதி டெ . . . . . . .98

இந்த எப்பிரல்மீ முதல்௳ தபால் கடிதங்கள் சேர்த்து எழுதி ½ அணாதலை ஒட்டி யனுப்பக்கூடும். ½ ரூபா இடைவரையில் ½ அணா தலை. ½ ரூபா முதல் ௧ ரூபா இடைவரையில் ௧ அணாதலை ஒட்டவேண்டியது. ம-ா-ா வீராசாமி முதலியாரைக் கண்டு விஞ்ஞாபனப் பத்திரிகையை வாங்கி பங்கியில் அனுப்புகிறேன். என் க்ஷேமத்தையும் வந்தனத்தையும் எல்லாருக்கும் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன். சந்நிதானம் எழுந்தருளுகிற தேதியை அவசியம் தெரிவிக்கவேண்டும்.99

இங்ஙனம்

இறுக்கம் - இரத்தினம்.

விபவஹு
பங்குனிமீ ௨௰௨
சோமவாரம்

---

திருமுகம் ௬.

இதுவுமது.

௨

சிவமயம்

சமரச வேத சன்மார்க்க சங்கத்தார்களி லொருவராகிய ம-ா-ா சண்முக பிள்ளையவர்களு

---

97, 98 இங்குக் காகிதம் சிதைந்திருக்கிறது.
99 மேல் விலாசமுள்ள காகிதம் இல்லை.

க்கு வந்தனம். இவ்விடத்தில் குருகடாக்ஷத்தால் இன்றைய வரையில் யானும் ஷை சங்கத்தை யபிமானித்த மற்றவர்களும் க்ஷேமம். அவ்விடத்தில் தங்களுடைய க்ஷேமங்களையும் சாலையைச் சார்ந்த மற்றவர்களுடைய சுபசரித்திரங்களையும் அடிக்கடி தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் விருத்தாசலத்திலிருந்து சித்திரைமீ . . . அனுப்பிய கடிதம் . . . . . . .

. . முடித்தார். இன்னம் அச் . . . வேறே சுத்த பிரதியாக இன்னம் எழுதவில்லை. எழு . . . . . . ளவர்கள் இ . . . . செய்துக் கொள்வதற்கு யாதொரு தடையுமில்லை. ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக முதலியார் . . ான் எழுதிக் குறித்துவிட்டார். . . . . திருக்கிறார் . . . . . அவருடன் நானும் வருவேன். ம-ா-ா-ஸ்ரீ செல்வராய முதலியார் பல்லாரியிலிருந்து இன்னம் வரவில்லை. எனக்கு வைகாசிமீ ௰ௌ முதல் ஆனிமீ ....ௌ வரையில் சுமார் ௩௰௨ நாளைக்கு விடுமுறை. . . . . . . .

ஆறுமுக முதலியார் வந்தால் அவருடன் அவசியம் வந்துவிடுவேன். நாவலருக்கு சூலைநோய் லகுவாயிருப்பதாக சமாசாரம். அது எப்போதோ ஒரு . . . . . . கிறார். . . . மாதத்துக் கொருவிசை அந்த . . . . கஞ்செய்கிறது வழக்கம். அவருக்கு . . . . . ருந்த பல . . . . . . . . . . . . கட்டுக் கோப்புக்காக பிரித்த நிலத் . . . . . ய மரங்கள் சேர்ந்திருக்கிறதா. ரோட்டுவரையில் தெருவின் நீளம் . . . ருக்கிறதா. அந்தக் கட்டடங்கள் சத்திரங்கள் . . . . . தெரியப்படுத்தவும். ம-ா-ா-ஸ்ரீ ஆறு

முக முதலியாருக்கு அவ்விடத்தில் தானே சமு சாரத்தோடு இன்னஞ் சில தினங்களுக்குள்ளாக வந்து விடவேண்டு மென்கிற கருத்திருக்கிறது. ஆகையால் அவருக்கும் கொஞ்சம் இடம் கொடுத்தால் நல்ல கட்டடம் செய்துக்கொள்வார். அதற்கு தடையிராது. ம-ள-ள அப்பாசாமி செட்டியாரவர்கள் தவிர மற்றவர்களின்னொன்று விபரமாய் தெரிவிக்கவும். வீடு கட்ட உததேசஞ் செய்தவர்களார்.

இவ்விடத்திலும் மழையில்லாமல் அதிக வெப்பமாக விருக்கின்றது. இதுவரையில் எவ்வளவு தொகைக்கு கையொப்பமாயிருக்கிறது. அது விபரத்தை தெரிவிக்கவும. ஜீவகாருணிய வொழுக்கம எழுதி முடிந்ததும் முடியாததும் தெரிவிக்காமல் மறந்துவிட்டீர்கள். மறவாமல் அவசியம் தெரிவிக்கவும். இந்த விசை மறக்க . . . ம-ள-ள-ஸ்ரீ ஆறுமுக பிள்ளை சுந்தரம்மாள் இவர்கள் க்ஷேமமாக விருக்கின்றார்கள். என் வந்தனத்தையும் க்ஷேமத்தையும் எலலாருக்கும குறிப்பிக்கவும். 100

சுக்கிலஹு — இங்ஙனம்

சித்திரைமீ ௩௰௪௨ — இறுக்கம் - இரத்தினம்.

---

## திருமுகம் எ.

ஸ்ரீ வேலாயுத முதலியார்

ஸ்ரீ ஆநந்தநாத சண்முக சரணாலய சுவாமிகளுக்கு எழுதியது

உ

பொன்னொரு மணிமன்றுட் புலிமுனியும் பதஞ்சலியும் போற்ற நிற்ப, மின்னொரு மிடைக்கயற்கண்

---

100 புள்ளி வைத்திருக்கும் இடங்களி லெல்லாம் காகிதம் சிதைந்திருக்கிறது. மேல் விலாசமுள்ள காகிதம் இல்லை.

மெல்லியல்வெற் பரையன்மடப் பாவை காண, இன்னுமை யகன்றுலக முயவெடுத்த திருவடிக்கே யெழிலா ரன்பு, பன்னுளும் பிரிவறிய வானந்த நாதவருட் பண்ப போற்றி.

இவ்விடத்தில் அனைவரும் இட்ட பணிக்க ணிருக்கின்றோம். அவ்விடத்தில் இப்போதிருக்கும் க்ஷேமாதிசயங்களைப்பற்றி யடிக்கடி திருமுகம் கட்டளையாக வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

அடிமையினுடைய தேகம் வந்தது தொட்டு சீத நோயான் மிக வருந்தி யிப்போது கரு, ௨0 தினமாகச் சிறிது திருவருட்டுணையால் சுகமாக வருகின்றது. ஆயினும் தேகத்தில் தக்க வலி போதவில்லை யதுவும் திருவருளால் உடனே கூடுமென்று நினைக்கிறேன். அது காரணம் பற்றி தங்களுக்கு அடிக்கடி விண்ணப்பம் எழுதத் தடைபட்டது. ஆயினும் தங்களை யொத்த தாயினும் பெருங் கருணையுடையவர்களே சேயினுடைய வழுக்குற்றங்களைக் கண்டு சினந்து முகம் பாரா தொழியின் பின்பு அக்குழவி என்னை பயன்பெறும். அதுபோல ஏழை நாயடியேனது பெருங்குற்றங்களை யெண்ணி இதுவரையிலும் ஒரு திருமுகமும கருணை செய்யாது விட்டால் என் செய்வது. 'பிழைத்தவை பொறுக்கையெல்லாம் பெரியவர் கடமை போற்றி' என்பதைச் சிந்தித்திருக்கு மெளியேனுடைய நெஞ்சம் அடுத்த பொழுதில் எந்தாயே நின்னருட்டிருமுகம் வரப்பெறுவே னென்னுந் துணிவு கொண்ட வென்கருத்தை முடிப்பித்தருள வேண்டுவது.

அது நிற்க. நம்பெருமான் இப்போது எவ்விடத்தெழுந்தருளியிருக்கின்றது. சாலை என்ன ஸ்திதியி

விருக்கின்றது. அவ்விடத்திய காரியங்களை யார் பராமரிக்கின்றனர்கள். இது விபரங்களையுடனே கட்டளையிடும்படி கோருகிறேன். அந்தப் பக்கங் களிலிருந்து இங்கு வருபவர்கள் தங்கள் தங்களுக் குத் தோன்றியபடியே சிலபல சொல்லுந் தோறு மனந்துடிக்கின்றது. ஆதலால் உண்மை விடயங் களை யுணர வருள் செய்தல்வேண்டும். முதலியா ரவர்கள் ௫, ௬ விசை பிரயாணப்பட்டு தெய்விகத் தடையால் நிற்கும்படி நேரிட்டது. அதன் விவ ரத்தை நாம் நேரிற் காணும்போது தெரிந்துகொள் ளலாம். அப்படியிருக்க முதலியாரவர்கள் நகை விஷயமாக நமது புதுவையிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ கு. சதாசிவ செட்டியாரவர்களுக்கு இரண்டு கடிதம் சந்நிதானத்திற்குத் தெரியாதபடியாய் எழுதியிருந் தும் நாளது வரையில் அதற்கு அவர் பதில் எழு தாமலே யிருக்கின்றார். அது விஷயத்தில் நம் முடைய முதலியாரவர்களுக்கு கொஞ்சம் தொந் தரையாயிருக்கிறது. ஆதலால் தாங்களிது விஷ யத்தை யோராணுவளவும் சந்நிதானத்திற்குத் தெரி யப்படுத்தாமற்படிக்கு வெளியிலும் சங்கதி தெரி யாமற்படி கூடுமாயிருந்தால் சதாசிவ செட்டியாரை எவ்விதத்திலாவது கண்டு ஷை நகைகள் என்ன என்ன நகை எவ்வளவு யாரிடத்திலிருக்கிறது. வட்டி எவ்வளவு ஆயிற்று என்று விவரம் தெரியப் படுத்தும்படி தங்களுக்கு விண்ணப்பித்து சங்கதி தருவிக்கும்படி யுத்தரவு செய்திருப்பதால் இது விவரங்களை யுடனே தெரிவிக்க வேண்டியது. மறந்து விடாம லவசியம் தெரிவிக்க வேண்டும். சாலையிலுள்ள பெரியோர்கள் அனைவர்க்கும் அடி மை வந்தனத்தைக் குறிப்பிக்கவேண்டும். மற்ற

சங்கதி பின்னால் தெரிவிக்கிறேன். வேணும் விண்ணப்பம்.

இங்ஙனம்

சென்னப்பட்டணம்
கஅஎ0ஆறு
ஜுன் மீ அஉ

அடிமை
தொ. வேலன்.

இந்தக்கடிதத்தை வெளிப்படுத்தாமல் தாங்களே பார்த்துக்கொண்டு பதில் உடனே எழுதும்படி கோருகிறேன்.

T. V.

கூடலூர் ஜில்லா குறிஞ்சிப்பாடி குப்பத்தி லிருக்கும் தபால் ரயிட்டர் மேல் விலாசம் பார் வையிட்டு அடுத்த வடலூர் பார்வதிபுரம் சம ரசவேதத் தருமச்சாலையிலிருக்கும் ஸ்ரீமது ஆநந்தநாத ஷண்முகசரணாலய சுவாமிகள் சமுகத்திற் சேர்ப்பிக்கவேண்டியது.[101]

---

திருமுகம் அ.

ஸ்ரீ வேலாயுத முதலியார் முதலிய நால்வர்
ஸ்ரீ ஆநந்தநாத சண்முக சரணாலய சுவாமிகளுக்கு எழுதியது

உ

பொன்னவிருந் திருமார்பன் புதல்வ னோடும் போற்றிசெயு மம்பலத்தெம் புனிதன் பொற்றாள், மன்னிவளர் திருநெஞ்சத் தென்ற னாவி மாதவமே மகிழ்திருகண் மணியே என்றுந், தன்னிகரா நந்தநா தப்பேர் சேர்த்த சண்முகநற் சரணால யத்தெந்தா யே, நின்னிருதாண் மலர்க்கன்றி நீச னேன்புன் னெஞ்சிடங்கொண் டிறுமேயோ நிலத்தின் பாலே.

---

101 Half Anna Postage (Stamp) Stamped 8-6-70 (Two seals indistinct) Cuddalore June 9 1870 Coorinjipaudi 10-6-70 S. A. Dt.

இவ்விடத் தனைவரு நங்குருமணி திருவருட்டுணை யா லிட்ட கட்டளை யினிது புரிந்து வாழ்கின்றேம். அவ்விடத்தி னமரங்களுடைய வரு விலைகளும் ஆளுடையார் திருவாணை யமுதவிருந்தும் அமைந்த வாற்றலுக் கடியரேம் பலகாலு மடுத்தடுத் தறிய உள்ளுணார் வின்மையா லுழிதரா நின்றேமாக. நற் றுணையாயினுய்க் கற்றறி கல்வியின் அற்ற முறுமை யாங்காங் கருள்க.

ஏழை யோர்க ளினிதுயு மாறு
மேவர விடுத்தவிம் மீன ரவியோர்
பதினெட் டாந்தே தியவாய தெய்வத்
திருமுகச் சைவ மாமந் திரவின்
னமுதுபெற் றளவி னெம்மறி யாத
வாரா வின்பத் தளவின் மகிழ்ச்சி
பேராக காதல் பெரிது விளை(ய)
பேறு பெற்றன மவ்வழிப்
பெறுபணி யதுவே யுற்றன முயலுபு
நற்றிற(க்) காட்சி யாகுநா ளெண்ணி
யலமந் தலையப் போகுடை மனத்தேம்
புன்மைநோக் காதுயா மொழுகு றும்வகைத்
தோமறமற்று நற்றிறம் பலவுநல் குமதி
பெற்ற பேற்றிற் பெருந்தவத் தோயே.
வேணும் தெண்டனிட்ட விண்ணப்பம்.102

இங்ஙனம்
ஏழையடிமைகள்
தோ. வேலன்
இ. இரத்தினம்
சி. செல்வாரயன்
ச. ஆறுமுகம்.

சென்னை
பிரமோதூத ௵
மீனரவி ௩௳

102 மேல் விலாசம் உள்ள காகிதம் இல்லை.

திருமுகம் ௧.

கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்
புதுவை ஸ்ரீ இரத்தின செட்டியார்க்கு எழுதியது

உ

சற்குரவேநம

ம-া-ா செட்டியாரவர்கள் இரததின செட்டியாரவர்கட்கு பல முறை வந்தனம் வந்தனம். தாங்கள் நாளதுமீ ௲உ கடைசியாக யெழுதிய கடிதத்தால் சகல சங்கதியும் தெரியலானேன். ஆனால் தாங்களெழுதியபடி நானிப்போது வரக்கூடுமாயில்லை. ஏனெனில் எனக்குக் கண்ணோபாயிருக்கிறது. சவுக்கியமானபிறகு வர சித்தமாயிருக்கிறேன். ஒரு வேளை வர்த்தகாள் அதுவரைக்கும் கார்க்க . . .[103] தில்லையென்று சொல்லும்பட்செத்தில் இப்போது தீர்ந்த பேரஞ் சரியல்லவென்றும் உடையவர்கள் சொல்லுவதாக அவாள் முத்திரையை உடைத்துவிட்டு நகையை தங்கள் கைவசப்படுத்திக்கொண்டால் நான் வந்த பிறகாவது அல்லது எப்படியாவது ஓர் முடிவு செய்துக் கொள்ளலாம். தாங்கள் இதற்காக கார்ப்பதாக விருந்தால் உடனே வரும்படி கோருகிறேன். தங்கள் பெண்டுகளுக்கு சவுக்கியமாயிருக்கும். ஆதலால் அவாளையும் இட்டுக்கொண்டு வந்தால் சந்நிதானத்தை தெரிசித்துக் கொண்டு எல்லாரும் அவடம் மறுபடியும் போய் மேடி காரியத்தை முடிவுசெய்து கொள்ளலாம். ம-া-ா-ஸ்ரீ ஆறுமுக முதலியார் நாளையல்லது உ-நாள் பொறுத்து கண்ணாடி முதலியது வாங்க வருவதாக உத்தேசித்திருக்கிறார். எல்லாம் அவாளைக்

103 இங்குள்ள இரண்டு கூட்டெழுத்துக்கள் தெளிவாயில்லை.

கேட்டால் தெரியவரும். வேணும் பலமுறை வந்தனம்.

பிரஜோற்பத்தி ஹு
அர்ப்பிசிமீ எ௨
தருமச்சாலை

---

**திருமுகம் ௪௦.**

புதுவை ஸ்ரீ இரத்தின செட்டியார்
கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

௨

சற்குருவே நம:

ஸ்ரீமது ம-ள-ள-ஸ்ரீ செட்டியாரவர்கள் கூ. மு. அப்பாசாமி செட்டியாரவர்களுக்கு பலமுறையாய் வந்தனம் வந்தனம்.

இப்பவும் இவ்விடத்தில் யாவத்திருளும்க்ஷேமம். அவிடத்தில் நம்மிட சகோதரரள் யாவத்திருளுடைய க்ஷேமங்களை அடிக்கடி அறிய விரும்புகின்றேன். தாங்கள் நாளதுமீ ஹ௨ யெழுதிய கடிதம் ௨௨ பார்க்க சகலமும் தெரியலானேன். தங்களுக்கு திரேக அசௌக்கியமாயிருந்ததை கேழ்விப்பட்டு ள ஆறுமுக முதலியாரவர்கள் கடுதாசியில் எழுதியிருந்தேன். அதற்கு நம்மிட குருநாதர் கிருபையினுல் சவுககியமா யிருக்குதென்கிற விபறம் தெரியலானேன். நான் பெட்டி வேலையை முன்னிட்டு தசசன் வீட்டிலேயே இருந்து பெட்டி வேலையை முடித்தேன். அப்படியிராமல் சாலைக்கு வந்துவிடுவேனேயானால் பெட்டிவேலை இவ்வளவு சீக்கிரதத்தில் முடியமாட்டாது. பெட்டியை எடுத்துக்கொண்டு சாலைக்கி இன்றைய தினம் காலையில் பிரயாணப்பட்டு வருகிறதாயிருந்தேன். தங்கள் கடிதம்

பார்த்த பின்பு பிரயாணம் தாமதப்பட்டது. அதே னெனில் முதலியார் இவ்விடம் வந்தபோது ரூ. ௱ தயார் செய்து வைக்கவேண்டுமென்று சொன்னார். அது போல நான் உடனே தயார் செய்து வைத்துக்கொண்டு முதலியாரவர்களுக்கு பல தண்டகம் சேதி தெரிவித்து வெகு நாள் காத்துக்கொண்டு இருந்து ஒன்றும் பதி லில்லாததினால் அச்சமயம் தங்களுக்கு பணம் அவசரமில்லை போல தோன்றி இவிடத்தில் செலவாகிவிட்டது. இப்போது அவசர மென்று தாங்களெழுதி யிருப்பதைப்பற்றி இவி டத்தில் பணம் ரொம்பவும் கசாலா யிருப்பதுந் தவிர தாங்கள் எழுதிய அவசரத்தை முன்னிட்டு எவ்வித பிரயாசையாவதுபட்டு ரூ. ௱ தயார்செய் துக்கொண்டும் பெட்டியை யெடுத்துக்கொண்டும் நாளதுமீ ௫௳ யிவிடம் திங்கட்கிழமை தினம் பிர யாணப்பட்டு வந்து சேர முஸ்திப்பா யிருக்கி றேன். சாலையில் திருடர் வந்ததாகவும் சில பேருக் குக் காயம் பட்டதாகவும் புதுவையில் வெகு குபா ரய் பேசிக் கொள்ளுகிறார்கள். கூடுமாயிருந்தால் முதலியார் குதிரை வண்டியை கூட யாகிற செவ் வாய்க்கிழமை காலையில குள்ளஞ் சாவடியில் அனுப்பி வைத்தால் சல்தியில் வந்து சேரக் கூடும். ரூபாயும் பெட்டியும் வருவதை முன்னிட்டு மேற் படி வண்டி வரும்படி எழுதலாயிற்று. மற்றப்படி சேதிக்கும் வேண்டிய காரியங்களுக்கும் அடிக்கடி யெழுதியனுப்பி வைக்கக் கோறுகிறேன். . . . .104 வந்தனம் வந்தனம்

இப்படிக்கு
புதுவை - சு. ரத்தன செட்டி.

---

104 இங்குக் காகிதம் சிதைந்திருக்கிறது.

உ

இஃது கூடலூர் துக்குடி குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த சமரச வேத சன்மார்க்க சங்க தரு மச்சாலையிலிருக்கும் ம-ா-ா- ஸ்ரீ செட்டியாரவர்கள் மு. அப்பாசாமிசெட்டியாரவர்களுக்குக் கொடுப்பது.105

---

திருமுகம் கக.

புதுவை ஸ்ரீ இரத்தின செட்டியார்
கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

உ

ம-ா-ா செட்டியாரவர்கள் மு. அப்பா சாமி செட்டியாரவர்கட்கு புதுவை தா. சு. இரத்தின செட்டி யெழுதிக் கொள்ளும் வந்தனம் வந்தனம்.

இப்பவும் இவடத்தில் யாவத்திருளும் க்ஷேமம். அவடத்தில் யாவத்திருளுடைய க்ஷேமங்களை யறிய விரும்புகிறேன். கூடலூர் அமராவதி செட்டி சங்கதி அன்றையதினம் ராத்திரிக்குள் பைசல் செய்து விட்டு பாரிக்கித்து வாங்கி ஸ்ரீ கோனேரி செட்டியாரிடத்தில் கொடுத்து விட்டு புதுவைக்கு வந்து விட்டேன். மேற்படியார் முதலுக்கு க ஆக வட்டிக்கு தீர்மானம் பெற்றிருந்ததை ஞ ஆகவட்டி போட்டு முதலும் வட்டி சிலவு ரூ. தூாகூ0 கொடுத்து விட்டது. இருளக்குரிச்சியான் மக னருணசல செட்டி இவர்கள் சங்கதிகளை பைசல் செய்து சாட்டி யெங்கள் மூலமாய் விட்டுவிட வேண்டு

---

105 Cuddalore Coorinjipaudi S. A. Dt. (தபால்தலை ஒட்டி
1871 17-12-71 18-12-71 கிழிக்கப்பட்டிருக்
Dec. 16 S. A. Dt. ............ கிறது.)

மென்று சொன்னதற்கு இருளக்குறிச்சியானுக்கு ரூ. ௱௫௰ தம்பி ஐயாசாமி செட்டியார் யேந்துக் கொண்டிருக்கிறுரென்றும் அதையும் யேந்துக் கொண்டால் தங்கள் மூலமாய் சாட்டிவிடுகிறே னென்று அமராவதி செட்டியார் சொன்னுர். மாணிக்க செட்டியார் முதலான பேரும் அது சறி தானென்றும் சொன்னுர்கள். நான் தங்களை ஆலோசித்து யொழுங்கு செய்து கொள்ளுகிறேனென்று வந்து விட்டேன். இந்த சேதிகளெல்லாம் கோனேரி செட்டியாரையும் ஐயரையும் தங்களுக்குக் கடிதம் யெழுதும்படி ஜாக்கிறதை செய்து விட்டு வந்தேன். கோனேரி செட்டியார் சிலவு தொகை ரூ ௰ எடுத்துக்கொண்டு மற்ற ரூபாயை யென்னிடத்தில் கொடுத்துவிட்டார். கிஷ்ணயா துரைசாமி பிள்ளை சங்கதி முதல் ரூ. ௱௫௰ யட்டி ரூ. ௭௨ நிலமை ரூ. கூ ே . . . றுபடி ரசிதுபடி சேரவேண்டியதாயிருந்தது. அதை அவருக்கு வேண்டிய ஞாபங்களைச் சொல்லி வட்டியிலும லாபத்தையும் தள்ளி ரூ. ௫ வட்டிக்குக்கொடுத்து ரசீதை பெற்றுக்கொண்டேன். இது சேதி மேற்படியாருக்கு தெரிவிக்கவும். ௱-௱ ஆறுமுக முதலியாரவர்கள் சென்னப்பட்டணமிருந்து எனக்கு ஒரு கடிதம எழுதி யிருக்கிறுர். மேற்படியார் புதுவை வந்து ரூபில் பேசிக்கொண்டு போவதாய் எழுதியிருந்தார். மேற்படியார் இது வரையில் வரவில்லை. பண்ணுருட்டி மார்க்கமாய் போவதாயும் கேழ்விப்பட்டேன். மேற்படியார் அவடம் வந்து சேர்ந்தவுடன் மேற்படியார்கள் சேதி தெரிவிக்கும்படி நான்ரொம்பவும் க்ஷேமத்தையறிய விருப்பமுடையவனு யிருக்கிறேனென்று சொல்லவும். சமைக்கி வாங்கின சாமான்கள் போக அவசி

யம் வாங்கவேண்டிய சாமான்கள் இருந்தாலுடனே சேதி தெரிவித்தால் வாங்கியனுப்புகிறேன். தேக்க மரம் உ வண்டியிலேத்தி வரதராஜபிள்ளை அனுப்பியிருக்கிறார். மற்ற சேதிகளெல்லாம் நான் நேரில் வந்து பேசிக்கொள்ளுகிறேன். வேணும் வந்தனம் வந்தனம்.

பிரசோத்பத்தி௵ இப்படிக்கு
தைமீ உ அவ புதுவை
சு. ரத்தனசெட்டி.

உ

கூடலூர் துக்குடி குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த சமரச சங்க தருமச்சாலையி லிருக்கும் ம-ா-ா செட்டியாரவர்கள் மு. அப்பாசாமி செட்டியாரவர்கட்கு கொடுப்பது.106

---

## திருமுகம் கஉ.

கூடலூர் ஸ்ரீ அய்யாசாமி பிள்ளை
கூடலூர் ஸ்ரீ அப்பாசாமி செட்டியார்க்கு எழுதியது

உ

திருச்சிற்றம்பலம்

என தன்பரா மெந்தனந் தங்கட்கு வந்தனம்.

சந்நிதானம் நேத்திய தினம் ரூ எ கொடுத்து பஞ்சாமுதம் செய்ய சாமான் வாங்கிவர சந்தைக்கு

---

106 Half Anna Postage (Stamp) — Pondicherry Feb. 9 72 — Cuddalore Feb. 9 72

S. A. Dt. 9-2-72 ............... — Coorinjipaudi 10-2-72 S. A. Dt. — (இன்னொரு முத்திரை தெளிவாயில்லை)

அனுப்பி யிருக்கிறார்கள். சந்நிதானம் சாலைக்கு எழுந்தருளும் அதி சமீபம் விரைவில்வந்து சேர வேண்டியது. அண்ணாஅவர்கள் உத்தரவுப்படிக்கு.

திங்கட்கிழமை. கா. அய்யாசாமி.

தங்களை காலைச் சுற்றிய பாம்பு என்று சந்நிதானம் கட்டளையிட்டது. இந்த வார்த்தை உங்களுக்கு விசேஷ நன்மை யுண்டுபண்ணுமென்று தோற்றுகிறது.

கா. அ.

கூடலூரில் ம-ா-ா-ஸ்ரீ செட்டியார் அவர்கள் மு. அப்பாசாமி செட்டியா ரவர்களுக்கு கொடுப்பது.[107]

2. சன்மார்க்க சங்கத்தார் ஒருவர்க்கொருவர் எழுதிய திருமுகங்கள் முற்றுப்பெற்றன.

---

107 இது ஆள்மூலம் அனுப்பியதெனத் தோற்றுகிறது.

## 3. வடலூர்க் குடிகள் சுவாமிகளுக்குச்

| பட்டா நெம்பர் | பட்டாதாறன் பெயர் | தறம் | சேத்து நெம்பர் |
|---|---|---|---|
| ஜ் | அருணாசலய்யர் | சா | அகஅ |
| | | ஷை | அகக |
| | | கக | அகங |
| | | ச | அகக |
| | | ஷை | அகஅ |
| ச | பறட்டபால பசி | கூ | கூஎஅ |
| | | ஷை | கOOசு |
| சா | அறணாசலம் | கூ | கூஎஅ |
| எ | பொன்னன் வகையரு | சா | அகக |
| | | ஷை | அகரு |
| | | கக | அஉ |
| | | கூ | கூஎக |
| | | ஷை | கOக |
| கூ | ஷை முத்து | கூ | கூஎச |
| | | கக | அஉ |
| கஉ | சமட்டி அழகன் | கூ | கூஎச |
| கச | சின்னான் சின்னபயல் | கூ | கூஎகூ |
| கரு | இவறங்க பசி | கக | அகரு |
| | | சா | அகக |
| | | கூ | கூஎக |
| கசா | தம்பி பசி | சா | அகசா |
| | | கூ | கூஎசா |
| | | ஷை | கூஎ |
| கஎ | முத்து கண்ணு | சா | அக |
| | | ஷை | அகசா |

# லக்காக எழுதிக் கொடுத்த இனும் பத்திரம்

| விஸ்திறணம் | திரவை | ஆக விஸ்திறணம் | ஆகதிர்வை |
|---|---|---|---|
| ௨ ௨ | ௨ ௰௪ ௫ | | |
| ௧ ௨ | ௦ ௫ ௯ | | |
| ௫ ௧ | ௨ ௦ ௩ | | |
| ௦ ௨ | ௨ ௯ ௨ | | |
| ௨ ௧ | ௦ ௬ ௮ | ௫ ௧௦ ௦ | ௮ ௧ ௪ |
| ௮ ௧ | ௦ ௮ ௯ | | |
| ௦ ௩ ௨ | ௦ ௩ ௧௧ | ௦ ௧௪ ௫ | ௦ ௧௬ ௮ |
| ௦ ௭ ௨ | ௦ ௮ ௦ | ௦ ௭ ௨ | ௦ ௮ ௦ |
| ௦ ௭ ௦ | ௧ ௨ ௧ | | |
| ௦ ௧ ௨ | ௦ ௫ ௯ | | |
| ௧ ௬ ௫ | ௨ ௪ ௮ | | |
| ௦ ௫ ௨ | | | |
| ௦ ௩ ௧ | | | |
| ௦ ௯ ௫ | ௦ ௧௦ ௩ | ௨ ௮ ௦ | ௪ ௬ ௦ |
| ௦ ௫ ௨ | ௦ ௫ ௧௧ | | |
| ௨ ௧௧ ௦ | ௪ ௮ ௭ | ௨ ௧௪ ௨ | ௪ ௧௨ ௩ |
| ௦ ௭ ௦ | ௦ ௭ ௬ | ௦ ௭ ௦ | ௦ ௭ ௬ |
| ௦ ௧௬ ௧ | ௧ ௦ ௨ | ௦ ௧௬ ௧ | ௧ ௦ ௨ |
| ௦ ௧ ௧ | ௦ ௨ ௧ | | |
| ௦ ௨ ௫ | ௦ ௩ ௧௦ | | |
| ௦ ௧௦ ௨ | ௦ ௧௧ ௨ | ௦ ௧௪ ௨ | ௧ ௪ ௧ |
| ௦ [illegible] ௦ | ௦ ௧௦ ௦ | | |
| ௦ ௮ ௦ | ௦ ௮ ௩ | | |
| ௦ ௪ ௦ | ௦ ௪ ௫ | ௧ ௦ ௦ | ௧ ௩ ௯ |
| ௦ ௩ ௧ | ௦ ௧௬ ௮ | | |
| ௦ ௪ ௦ | ௦ ௧௦ ௦ | ௦ ௧௦ ௧ | ௧ ௯ ௮ |

| பட்டா நெம்பர் | பட்டாதாரன் பெயர் | தரம் | சேத்து நெம்பர் |
|---|---|---|---|
| கஅ | நாராயணன் | சா | அக |
| | | ௸ | அக |
| | | சா | கைவிட்டது |
| ககூ | சின்ன பசி | [illegible] | அச |
| | | ௸ | அசா |
| உO | ராமலிங்கம் | சா | அச |
| | | ௸ | அக |
| உக | வெங்கிடாசல பசி | கூ | கூஎரு |
| | | ௸ | கூஎஎ |
| ருO | ஆனை பசி | கூ | ருஎஅ |
| | | கக | அஉO |
| | | சா | கைவிட்டது |
| ருக | பிரமன் | கூ | கூஎஅ |
| | | ௸ | கOகக |
| | | கக | அஉO |
| | | சா | கைவிட்டது |
| ருரு | மொட்ட வெங்கடாசலம் | கூ | கூஎஅ |
| | | கக | அஉO |
| | | சா | கைவிட்டது |
| ருசா | சின்னராமன் | கூ | கூஎஅ |
| ருஅ | சின்னதம்பி பசி | கக | அகரு |
| | | ௸ | அகச |
| | | ௸ | அஉO |

| விஸ்தீரணம் | | | தீர்வை | | | ஆக விஸ்தீரணம் | | | ஆக தீர்வை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | ௬ | க | | | | | | | | | |
| 0 | ௩ | உ | | | | | | | | | |
| 0 | ௯ | ௩: | க | ௮ | ௪ | | | | | | |
| 0 | 0 | உ | 0 | க | ௩ | 0 | க0 | க | க | ௯ | ௭ |
| 0 | ௬ | க | | | | | | | | | |
| 0 | ௩ | ௩ | | | | | | | | | |
| 0 | க0 | 0 | க | ௯ | 0 | 0 | க0 | 0 | க | ௯ | 0 |
| 0 | ௬ | க | | | | | | | | | |
| 0 | கக | ௩ | | | | | | | | | |
| க | உ | 0 | உ | க௩ | 0 | க | உ | 0 | உ | க௩ | 0 |
| க | 0 | 0 | | | | | | | | | |
| உ | ௩ | 0 | | | | | | | | | |
| ௩ | ௩ | 0 | ௩ | ௬ | உ | ௩ | ௩ | 0 | ௩ | ௬ | உ |
| | | | | | | கக௯ | க௫ | 0 | ௩௩ | கஉ | ௪ |
| 0 | ௫ | ௫ | 0 | ௫ | ௭ | | | | | | |
| 0 | ௮ | 0 | 0 | க௩ | கக | | | | | | |
| 0 | உ | உ | 0 | ௬ | ௩ | 0 | க௫ | ௩ * | க | ௯ | ௯ |
| 0 | ௫ | க | | | | | | | | | |
| 0 | ௪ | உ | | | | | | | | | |
| 0 | ௯ | ௩ | 0 | க0 | ௪ | | | | | | |
| 0 | ௭ | 0 | 0 | க௩ | ௬ | | | | | | |
| 0 | உ | உ | 0 | ௯ | ௩ | க | ௩ | க | க | க௪ | ௯ |
| 0 | ௫ | க | 0 | ௫ | ௬ | | | | | | |
| 0 | ௮ | 0 | 0 | ௩ | ௬ | | | | | | |
| 0 | உ | க | 0 | க௫ | ௮ | 0 | க௫ | உ | க | ௮ | ௮ |
| 0 | கக | உ | 0 | கஉ | ௩ | 0 | கக | உ | 0 | கஉ | ௩ |
| 0 | கக | 0 | | | | | | | | | |
| 0 | 0 | உ | | | | | | | | | |
| 0 | க௩ | 0 | | | | | | | | | |
| க | ௮ | உ | உ | ௯ | ௪ | | | | | | |

* கூட்டல் தவறியது போலும்.

| பட்டா நெம்பர் | பட்டாதாறன் பெயர் | தறம் | சேத்து நெம்பர் |
|---|---|---|---|
| | | ௬ | ௮௧௫ |
| | | ௸ | ௮௧௬ |
| | | ௯ | ௯௭௯ |
| ௩௯ | பூசாரி சேபெருமாள் | ௯ | ௧௦௦௮ |
| ௪௦ | பூசாரி சேவி | ௬ | ௮௧௪ |
| ௪௨ | பூசாரி ஆனை | ௧௧ | ௮௨௪ |
| ௪௩ | பிள்ளையான் | ௯ | ௧௦௦௧ |
| ௪௮ | சமட்டி பாலன் | ௯ | ௯௭௮ |
| | | ௸ | ௯௭௧ |
| ௫௨ | பொத்தி மொட்டயன் | ௯ | ௧௦௦௯ |
| ௪௭ | பூசாரிசின்னசெபெருமாள் | ௯ | ௮௧௧ |
| ௫௭ | சீனன் சின்ன முத்தன் | ௯ | ௯௭௯ |
| ௪௬ | பூசாரிபரியன் | ௧௧ | ௮௧௩ |
| | | ௸ | ௮௧௪ |
| | | ௸ | ௭௮௩ |
| ௧௪௦ | வெங்கடாசல ஞய்க்கன் | ௯ | ௯௭௪ |
| | | ௸ | ௯௬௯ |
| ௧௪௧ | ஆரியான் | ௧௧ | ௭௮௯ |
| ௧௪௨ | சேவிகான் | ௯ | ௯௭௫ |
| ௧௯௯ | காலிங்கரா́ம பசி | ௯ | ௯௭௫ |
| | | ௸ | ௯௭௬ |
| ௨௨௬ | பெரிய குட்டி வெங்கிடாசலம் | ௯ | ௯௭௯ |

| விஸ்தீரணம் | தீர்வை | ஆக விஸ்தீரணம் | ஆக தீர்வை |
|---|---|---|---|
| ௦ ௧ ௦ | | | |
| ௦ ௨ ௦ | | | |
| ௦ ௩ ௦ | ௦ ௭ ௬ | | |
| ௦ ௭ ௦ | ௦ ௭ ௫ | ௨ ௨ ௨ | ௩ ௮ ௩ |
| ௦ ௧௧ ௦ | ௦ ௧௧ ௮ | ௦ ௧௧ ௦ | ௦ ௧௧ ௮ |
| ௨ ௨ ௨ | ௫ ௬ ௩ | ௨ ௨ ௨ | ௫ ௬ ௩ |
| ௧ ௧௧ ௦ | ௨ ௧௩ ௭ | ௧ ௧௧ ௦ | ௨ ௧௩ ௭ * |
| ௦ ௧௪ ௩ | ௦ ௧௫ ௭ | ௦ ௧௪ ௩ | ௦ ௧௫ ௭ |
| ௦ ௯ ௩ | | | |
| ௦ ௯ ௩ | | | |
| ௧ ௩ ௨ | ௧ ௪ ௯ | ௧ ௩ ௨ | ௧ ௪ ௯ |
| ௦ ௧௧ ௦ | ௦ ௧௧ ௮ | ௦ ௧௧ ௦ | ௦ ௧௧ ௮ |
| ௧ ௧ ௧ | ௨ ௧௧ ௨ | ௧ ௧ ௧ | ௨ ௧௧ ௨ |
| ௧ ௦ ௦ | ௧ ௧ ௦ | ௧ ௦ ௦ | ௧ ௧ ௦ |
| ௦ ௩ ௨ | | | |
| ௦ ௨ ௧ | | | |
| ௦ ௧௧ ௨ | | | |
| ௧ ௧ ௧ | ௧ ௧௩ ௨ | ௧ ௧ ௧ | ௧ ௧௩ ௨ |
| ௨ ௧௫ ௨ | | | |
| ௦ ௭ ௦ | | | |
| ௩ ௬ ௨ | ௩ ௯ ௧௧ | ௩ ௬ ௨ | ௩ ௯ ௧௧ |
| ௦ ௧௨ ௩ | ௧ ௫ ௬ | ௦ ௧௨ ௩ | ௧ ௫ ௬ |
| ௦ ௧௨ ௦ | ௦ ௧௨ ௦ | ௦ ௧௨ ௦ | ௦ ௧௨ ௦ |
| ௦ ௪ ௦ | ௦ ௪ ௩ | | |
| ௧ ௩ ௦ | ௧ ௪ ௨ | ௧ ௭ ௦ | ௧ ௮ ௫ |
| | | ௪௨ ௧௧ ௦ † | ௯௬ ௧௨ ௪ ‡ |
| ௦ ௯ ௦ | ௦ ௯ ௭ | | |

* இந்த வரிசையில் தீர்வை எண்கள் திருத்தப்பட்டுத் தெளி வற்றிருக்கின்றன.

†, ‡ கூட்டல் தவறியது போலும்.

| பட்டா நெம்பர் | பட்டாதாறன் பெயர் | தறம் | சேத்து நெம்பர் |
|---|---|---|---|
| | | ஷெ | ௪௦௦௮ |
| ௨௩௭ | மஞ்சக்கொல்லை ஞன் | ௬ | ௮௧௫ |
| | | ௧௧ | ௮௧௪ |
| ௨௪௬ | பொந்தய சேபெருமாள் முத்துமகன் பாலன் | ௬ | ௮௧௬ |
| | | ஷெ | ௮௧௮ |
| ௨௪௭ | பறட்டமாரி பசி | ௬ | ௮௧௯ |
| | | ௧௧ | ௮௧௧ |
| ௨௭௨ | வெங்கிடசலஞன்வகையரு அஞதிகாரம்பு | ௯ | ௯௭௭ |
| | | ௯ | ௯௭௩ |
| | | ஷெ | ௯௭௨ |
| | | ஷெ | ௯௭௫ |
| | | ௪ | ௭௮௮ |

| விஸ்திறணம் | தீர்வை | ஆக விஸ்திறணம் | ஆக தீர்வை |
|---|---|---|---|
| 0 ௩ ௨ | 0 ௩ ௮ | 0 ௧௨ ௨ | 0 ௧௩ ௩ |
| 0 ௫ ௧ | 0 ௧௩ ௧ | | |
| 0 ௧௩ 0 | ௧ ௫ ௧௧ | ௧ ௨ ௧ | ௨ ௩ 0 |
| ௧ 0 0 | | | |
| ௧ 0 0 | | | |
| ௨ 0 0 | ௫ 0 0 | ௨ 0 0 | ௫ 0 0 |
| ௧ 0 0 | ௨ ௮ 0 | | |
| ௧ ௧0 ௧ | ௨ ௧௨ ௧ | ௨ ௧௧ 0* | ௫ ௪ ௧ |
| ௧ ௩ ௧ | ௧ ௪ ௬ | ௧ ௩ ௧ | ௧ ௪ ௬ |
| ௨ ௮ 0 | | | |
| ௩ 0 0 | | | |
| ௧ ௮ 0 | | | |
| ௭ 0 0 | ௭ ௭ 0 | | |
| ௧ 0 0 | ௩ ௪ 0 | ௮ 0 0 | ௧0 ௧௧ 0 |
| | | ஆக ௧௫ ௧௩ 0 | ௨௫ ௩ ௧0 |
| | | ஆக ௫௮ ௮ 0 | ௯௨ 0 ௨ |

* கூட்டல் தவறியது போலும்.

யிதில் கண்டயிருக்கற நிலங்களை சமறச வேத தர்ம்ம சாலைக்காக யினும் குடுக்கப்பட்டு இதுனடியில் கையெழுத்து வைக்கப்பட்டவர்கள் விவறம்.
2—2—67 ௵.

வையித்தினுதய்யர் கையெழுத்து.
சிவசாமி அய்யர் கைஎழுத்து.
ஆதி பசி கயி எழுது.
மாரி பசி கையெழுத்து.
—இந்த கீறல் மஞ்சக் கொல்லை ஞன் கைனாட்டு.
அருணசல செட்டி கையி எழுத்து.
—இந்த கீறல் பரிய பசி கைனாட்டு.
—இந்த கீறல் சின்னன் சின்னபயல் கைனாட்டு
. . . . . . . 108
வெங்கடாசல பசி கெயிழுத்து.
—இந்த கீறல் தம்பி பசி கைனாட்டு.
—இந்த கீறல் . . .109 பசி கைனாட்டு.
னாரயணான் பசி கைழுத்து.
. . . . 110 ழுது.
. . . . 111 பசி எழுது.
. . . . 112 பசி கை யெழுத்து.
முத்து பசி காயிழுதது.
சின்னதபபி பசி கையிழுத்து.
—இந்த கீறல் மொட்டக்காளை சேபெருமாள் கைனாட்டு.
—இந்த கீறல் பொன்ன பசி தம்பி சின்னது பசி கைஎழுத்து.
பொந்தயி சேபெருமான் அனுமதியில் முத்து பசி கையி எழுத்து.
. . . . 113 கை எழுத்து.

---

108, 109, 110, 111, 112, 113 காகிதம் சிதைந்திருக்கிறது.

—இந்த கீறல் சேவிகான் கைனுட்டு.
—இந்த கீறல் சமட்டிபாலன் கைனுட்டு.
—இந்த கீறல் சே பெ பெருமான் கைனுட்டு.
—இந்த கீறல் பொன்ன பசி கைனுட்டு.
—இந்த கீறல் வெங்கிடாஜல னுன் கைனுட்டு.
—இந்த கீறல் வய்யாபுரி . . .114 யன் கைனுட்டு.
கொமறசாமி படயாசி கையி யெழுத்து
—இந்த கீறல் பூசாரி ஆனை பசி கைனுட்டு.
ருமசாமி க ஏது.
—இந்த கீறல் பூசாரி சேவி கை யெழுத்து.
—இந்த கீறல் குப்ப பசி கைனுட்டு.
—இந்த கீறல் அழகன் சம்மட்டி கைனுட்டு.
—இந்த கீறல் பெரியதம்பி பசி கைனுட்டு.
—இந்த கீறல் சின்னசேபெருமா பசி அனுமதியில் செட்டியார் மகன் அரிய புத்திர பசி கைநாட்டு.
—இந்த கீறல் மொட்டை வெங்கிடாசல பசி மகன் ருமசாமிக்காக கார்டின் செட்டியார் பெண்சாதி அங்கம்மாள் கைநாட்டு.
—இந்த கீறல் பெரியகுட்டி வெங்கிடாசலம் கையி னுட்டு.
—இந்த கீறல் பிறமன் மகன் விடத்திறன் கையி னுட்டு.
—இந்த கீறல் சின்னருமன் கயினுட்டு.

3. வடலூர் குடிகள் சுவாமிகளுக்கு

சாலைக்காக எழுதிக்கொடுத்த இடம் பத்திரம் முற்றிற்று.

---

114 இங்குக் காகிதம் சிதைந்திருக்கிறது.

## 4. சாலைக்குச் சன்மார்க்க சங்கத்தார் உபகரித்த பொருள்களின் அட்டவணை

உ

சிவமயம்

சமரசவேத சன்மார்க்க சங்கத்து தருமச்சாலைக்கு ஷை சங்கத்தாரால் உபகரிக்கப்படும் பொருள் களுக்கு விவரமான அட்டவணை :—115

(1) சென்னப்பட்டணத்தி லிருக்கும் சதரங்கப் பட்டணம் ஆறுமுக முதலியார்—விபவ௵ மார் கழிமீ 18உ அனுப்பிய சாமான்களுக்கு விபரம:

| | | | |
|---|---|---|---|
| சிகப்பு சால்வை | ௧௫ | ஆப் டிம்மி பேப்பர் தஸ்தா | ௬ |
| மல்பீசு | ௧ | லெட்டர் பேப்பர் ரீம் | ௧ |
| லாங்கிளாத்து பீசு | ௨ | பேனா கட்டு | ௨ |
| கார்பெட்டாக்கு என் கிறபை | ௧ | இங்கி பவுடர் | ௬ |
| பயிண்டு செய்த ஆப்டிம்மி பேப்பர் புத்தம் | ௨ | சிலேட்டு பென்சில் பொட்டி | ௧ |
| பிரவுனுபேப்பர்தஸ்தா௬ | | பென்சல் | ௬ |

(2) கஸ்டம் ஆபீசு முருகேச முதலியா ரனுப்பிய சாமான்கள் விவரம் :

பச்சை பட்டுக்குட்டை ௧

(3) சென்னப்பட்டணம் ரத்தின முதலியாரால் வரவு :

| | |
|---|---|
| ஜோடு | ௧ |
| பட்டு அரை நாட் கயிறுகள் | ௨ |

விபவ௵ மார்கழிமீ 18உ வேங்கடேசய்யர்.

115 ஒரு காகிதத்தில் இவ் ஓர் நாளைய வரவே காண்கிறது.

# திரு அருட்பாவின்
# இந்த அடக்கவிலைப் பதிப்பின் விவரம்

## 1. இப்பதிப்பின் நோக்கம்

திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த அமுதினும் இனிய தெய்வத் திருவருட்பாக்களையும், அவர்கள் தம்மையடுத்த அன்பர்களுக்கு எழுதிய திருமுகங்களையும், சன்மார்க்க சங்கத்தார்க்குச் சொன்ன உபதேசங்களையும் இட்ட கட்டளைகளையும், அவர்கள் லோகோபகாரமாய் இயற்றிய நூல்களையும் ஜன சமூகத்திற்கு அறிவித்த பத்திரிகைகளையும், முன்னோர் நூல்களைச் சார்ந்து அவர்கள் செய்த வியாக்கியானங்களையும், வேறு வகையில் அவர்களது சம்பந்தம் பெற்ற மற்ற நூல் முதலியவைகளையும், தெளிவாகப் பாகுபாடு செய்து, சுத்தபாடமாக, நல்ல காகிதத்தில், விளக்கமான அச்செழுத்தில், திறமான கட்டடத்தோடு, பகுதிபகுதியாக, அடக்கவிலையில் வெளிப்படுத்தி வரும் இவ்விருப்ப முயற்சியானது—முத்தி அடைவதற்காகவே திருஅருளால் கொடுக்கப்பட்டிருக்கும் இம்மனிதப் பிறவி அஜாக்கிரதையால் அநியாயமாய் அழிந்து ஒழிதலைக் கண்டஞ்சி ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் இத்தமிழ்நாட்டிலுள்ள மகளிர், சிறுவர், வறியர், முதியர், நோய்வாய்ப்பட்டவர், துறந்தார், சிறு தொழிலாளர், இலக்கிய இலக்கணம் கல்லாதார் எனபவர் உள்ளிட்ட அடியார் இனங்கள் யாவரும் இப்பகுதிகளை எளிதில் கொண்டு, தம் தம் கையுறையாகப் போற்றி நாளும் பயின்று பயின்று, எல்லாம் வல்ல தனித்தலைமைப் பெரும்பதியின் ஒப்புயர்வற்ற திருவடித் துணை கிடைக்கப் பெற்று, இப்பிறவிக்குரிய ஆனம இன்பம் அடைந்துய்ய வேண்டும் என்னும் ஒருமை நோக்கத்தோடு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

## 2. இபபதிப்பின் சிறப்பியல்கள்

**(1) இதுவரையில் எவரும் அச்சிட்டு வெளிப்படுத்தாத பலப்பல அரும் பகுதிகள் இப்பதிப்பில் முதன் முதலாக அச்சிடப்பட்டு வருகின்றன.**

(2) இப்பதிப்பில் வெளிவரும் பகுதிகளில் அடங்கியவை எல்லாம் சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏடுகள், சுவாமிகள் பார்வையிலேயே அச்சான முதற் பதிப்புகள், சுவாமிகளை அடுத்திருந்த பேரன்பர்களின் கையெழுத்துப் பிரதிகள்—ஆகிய இவற்றினின்றும் எடுத்த சுத்த பாடங்களாகும்.

(3) இப்பதிப்பின் எல்லாப் பகுதிகளும் துருவித் துருவி எழுத்தெழுத்தாக நுட்பமாக ஆராயப்பட்டு, பொருத்தமான முறையில்—சிறுவர்களும் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில்—பாகுபாடு செய்தே வெளிப்படுத்தப்படும்.

3. *இப்பதிப்பில் வெளிவந்திருக்கும் பகுதிகள்*

1-வது புத்தகம் **கீர்த்தனைப் பகுதி** : (1-2-1931), 1000 பிரதி, 144 பக்கம், ராப்பர் விலை அணா 3.

2-ம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

2-வது புத்தகம் **வசனப் பகுதி** : (23-5-1931), 1000 பிரதி, 176 பக்கம், ராப்பர் விலை அணா 4.

2-ம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

3 வது புத்தகம் **உரைப் பகுதி** : (9-10-1931), 500 பிரதி, 264 பக்கம், உயர்ந்த கட்டடம், ராப்பர் விலை அணா 9.

2-ம் பதிப்பு விரைவில் வெளிவரும்.

4-வது புத்தகம் **உபதேசப்பகுதி**: (23-1-1932), 1000 பிரதி, 272 பக்கம், உயர்ந்த கட்டடம், ராப்பர் விலை அணா 8.

5-வது புத்தகம் **திருமுகப் பகுதி** : (12-5-1932), 1000 பிரதி, 200 பக்கம், உயர்ந்த கட்டடம், ராப்பர் விலை அணா 6. காலிகோ விலை அணா 8.

**திருவருட்பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க.**

---

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

மறைமலையடிகள் நூல்
MARA...